468

காவேரி

சர்வதாரி - தை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 FEB 1949
MADRAS

ஒரு டிராக்டர் உழுவதை பண்டித நேரு பார்வையிடுகிறார்.

யந்திரீக விவசாயம்

தற்சமயம் இந்தியாவில் விவசாயம் கிரமமாக இயந்திரங்களின் உதவியால் செய்யப்பட்டு வருகிறது. புராதன கலப்பைகளுக்கு பதிலாக, டிராக்டர்களும் மற்றும் நவீன இயந்திர கருவிகளும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

நிலத்தின் விளைவுத் தன்மையை அதிகரிக்க, எருவு தயாரிக்கும் ஆலைகளும், நீர்ப்பாசன திட்டங்களும் பெரும்பாலும் சாதகமானவை. விவசாயத்திற்கு தேவையான இயந்திர சாதனங்களை அளிப்பதில், எஃகு இன்றியமையாதது.

டாடா எஃகு

தி டாடா அயர்ன் & ஸ்டீல் கம்பெனி லிமிடெட்.

தலைமை ஸேல்ஸ் ஆபிஸ்:

23B, நேதாஜி சுபாஷ் ரோடு, கல்கத்தா.



தற்கால கட்டிட நிர்மாணம்

வீடு கட்டுதல்.

உணவுக்கும் உடைக்கும் அடுத்தபடியாக மனிதவாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது இருப்பிடம். இன்று மனிதனை எதிர்நோக்கியிருக்கும் குடியிருப்புப் பிரசனையின் முக்கியத்தையும், அதை நிவர்த்திக்க வேண்டிய உடனடியான நடவடிக்கையின் அவசரத்தையும் யாரும் அலட்சியம் செய்யமுடியாது. நிம்மதியும் சந்தோஷமுமான வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவை மனதிற்குகந்த நல்ல பிளானில் சுகாதார முறையில் உள்ள வாழ்க்கை வசதிகள். அதுவே சகல ஜனங்களுக்கும் ஸௌக்கியத்தை அளித்து, அவர்களை நிம்மதியான சந்தோஷ வாழ்வை அடையச்செய்கிறது.

கான்கிரீட் பணக்காரர்களுக்கு மட்டுமல்ல. வெகுகாலம் இருத்தல், சிக்கனம், நம் இஷ்டம் போல் உபயோகிக்கப்படும் தன்மை, நெருப்பால் பாதிக்கப்படாமை, சுத்தம், முதலான அதன் இயற்கைக் குணங்களால் அது எல்லாருக்கும் வீடுகட்ட மிகவும் சிக்கனமான சாதனம்.

கான்கிரீட் கட்டிட நிர்மாணத்தில் கான்கிரீட்டின் முழுபலன்களை அடைவதற்கு "கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா" 9, மவுண்ட் ரோட், தபால் பெட்டி 312, மதராஸ். டெக்னிகல் அதிகாரிகளின் உதவி எப்பொழுதும் கிடைக்கும்.

தி ஸிமென்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லி.
டிஸ்டரிபூடேர்ஸ் போர்
தி அஸோஸியேடெட் ஸிமென்ட் கம்பெனீஸ் லி.

ஜம்மி வெங்கடரமணய்யா & சன்ஸ், தலைமை ஆபீஸ்: மைலாபூர், மதராஸ்.

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்,
பெரியதெரு, கும்பகோணம்.

●

LIVER CURE Branch Office,
Parekh Mansion, Sandhurst Road (West),
BOMBAY 4.

12862

JL
N211,N41KV
N48.8.6

THE GENERAL ASSURANCE SOCIETY LIMITED — GENERAL — ESTD 1907

தி ஜெனரல் அஷ்யூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

(ஸ்தாபிதம் 1907)

சென்னை டிவிஷனல் ஆபீஸ்: 304, தம்புசெட்டித் தெரு, மதராஸ் 1.

முற்றிலும் தேசிய ஸ்தாபனம்

அமுலிலிருக்கும் பாலிஸிகள் சுமார்	....	ரூ.	20,00,00,000
ஆயுள் நிதி ,,	....	ரூ.	2,00,00,000
மொத்த ஆஸ்திகள் ,,	....	ரூ.	2,20,00,000
உரிமையாளர்களுக்கு கொடுக்கப்பட்ட தொகை ,,	....	ரூ.	1,00,00,000

சேர்மென்: ஸ்ரீ பி. என். ஜலான் (ஸூரஜ்மல் நாகர்மல்) கல்கத்தா.

தென்னிந்தியாவில் கிளை ஆபீஸ்கள்:

மதராஸ், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், பெங்களூர், பெல்லாரி, பெஜவாடா & கொழும்பு (இலங்கை) மற்றும் எல்லா முக்கிய பட்டணங்களிலும் இன்ஸ்பெக்ஷன் ஆபீஸ்கள் இருக்கின்றன.

தமிழர் திருநாள் பொங்கல் அன்று
எல்லோருக்கும் எமது நல் வாழ்த்துக்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 FEB 1949
MADRAS

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: **மதுரை**

★

சிறந்த சேவைசெய்து வருகிறது.

நெருப்பு, கப்பல், மோட்டார், விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூன்ஸ் திட்டங்கள்.

மொத்த ஆஸ்திகள் ரூ. 65,00,000

★

கிளைகள் : பம்பாய், அகமதாபாத்,
கல்கத்தா, நாகபுரி

★

பிரதம ஏஜண்டுகள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை Etc.

ரூ. 500 இனாம்!

ஓர் அதிசயமான புதுமை!!

மாயசக்திவாய்ந்த மோதிரம்

மாந்த்ரீகம், வசியம் முதலிய சக்திகளின் உதவியால் இந்த மோதிரம் தயாரிக்கப்படுகிறது. இது ஓர் அதிசயக்கருவி! இதை அணிபவர் எவ்வளவு கஷ்டம் அல்லது தாங்கமுடியாத துயரத்தை அனுபவிப்பவராயினும் சுகம் அடைவர். இம்மோதிரம் உங்களை எல்லாவித அபாயங்களினின்றும், பிணியினின்றும் காப்பாற்றவல்லது. கிரக தோஷங்களும் நீங்கும். இம்மோதிரம் அணிபவர் தாம் விரும்புபவரை வசியப்படுத்தவும், தன் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரவும் சக்தி பெறுகிறார். காதல், வழக்கு, மற்றும் தொழில் அல்லது வியாபாரத் துறைகளில் அமோக வெற்றி பெறுவதுடன் ஏராளமான பொருட்செல்வமும் அடையக்கூடும். சுருங்கக் கூறுமிடத்து, உங்களுக்கு எப்பொழுதும் உற்ற துணைவனாக விளங்கக் கூடியது இம்மோதிரம்! ஒரு முறை உபயோகித்தால் இதன் அபூர்வ இயல்புகள் விளங்கும்! முதல் நாளிலேயே வெற்றியின் அறிகுறிகள் தோன்றும்!!

ஒரு மோதிரத்தின் விலை ரூ. 2—0—0 மூன்று மோதிரங்களின்விலை ரூ. 5—0—0

(பாக்கிங் தபாற்செலவு வேறு)

MAHAKALI ASHRAM

No. 247, :: KANPUR.



மிகவும் ருசிகரமானது மாத்திரமல்ல- இது நல்லது

புஷ்டியளிக்கும் பதார்த்தங்கள் நிறைந்தது!

போர்ன்-வீட்டாவில் 95 சதவிகிதம் எலும்பு வளர்ச்சிக்கும் ஜீவசக்தியளிப்பதற்குமான சரக்குகள் இருக்கின்றன. தவிர அது ருசியாகவும் ஜீர்ணத்துக்கு தூண்டுகோலாகவும், எளிதில் ரத்தத்துடன் சேர்ந்து புஷ்டிதருவதாகவும் இருப்பதால் குறிப்பாக கர்ப்பிணிகளுக்கும் வியாதிக்குப்பின் குணமடையும் தருவாயிலும் இன்றியமையாத உணவாக விளங்குகின்றது.

காட்பரீஸ்

போர்ன்-வீடா

கால்ஷியம் விடமின்கள் நிறைந்தது

காட்பரி என்பது சிறந்த ரகத்துக்கு அறிகுறி



எமது முதல்தரமான சொந்தத் தயாரிப்புகள் !!

மாவு மில், நெல் மெஷின், சீயக்காய் மெஷின், காபி மில், தண்ணீர் பம்புகள் முதலியனவும் அவற்றின் ஸ்பேர் சாமான்களும் எமது தொழிற்சாலையில் எமது சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப் படுகின்றன !

மற்றும் பெல்டிங்குகள், டேவீஸ் எமரி, பேரிங்குகள் முதலிய மில்லுக்கு வேண்டிய சகல சாமான்களும் எப்போதும் கிடைக்கும் !

கே. சுவாமிநாதன் & கம்பெனி,

24, எர்ரபாலு செட்டி தெரு, சென்னை.

பிராஞ்ச்: பெனிங்டன் ரோட், தஞ்சாவூர்.

தொழிற்சாலை: 7, வால்டாக்ஸ் ரோட், சென்னை.



அவளுடைய பொக்கிஷம்

சூதக வியாதியினின்று விடுதலையளித்து, புத்திர பாக்கியத்திற்கு உதவிய அருண டானிக்கை தன் அருமைக் குழந்தையைப் போல் பொக்கிஷமாகவும், வரப்ரசாதமாகவும் கருதுகிறாள்.

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

அருண

கர்ப்பாசயரோக நிவாரணி

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

பார்லிக் கஞ்சி தயாரிக்க சுலபமான முறை



இரண்டு டீஸ்பூன் பார்லியை சிறிது ஜலத்தில் பசைபோல் கரைத்து. பின் இரண்டு டம்ளர் ஜலத்தில் போட்டு ஐந்து நிமிஷம் நன்றாகக் கொதிக்கவைக்கவும். பின்னர் இறக்கி ருசிக்கு வேண்டிய உப்பு அல்லது சர்க்கரை சேர்த்துப் பருகவும். இவ்வளவு கலபத்தில். ஐந்தே நிமிஷத்தில், ஓர் ருசியான சிறந்த பானத்தைத்தயாரிக்கலாம். வியாதியுற்றோ குணப்படும் தருவாயிலோ உள்ள பலஹீனருக்கு இது சிறந்த உணவு. *பியூரிடி பார்லி* புஷ்டியான தானியங்களினின்றும் தயாரித்து காற்று புகாமல் தகரடப்பாக்களில் அடைக்கப்பட்டிருக்கிறது. ஒரு பங்கு பியூரிடி பார்லி எட்டு பங்கு அரிசி பார்லிக்கு சடாகும். இதனுல் எவ்வளவு நேரம், சிரமம் மிச்சமாவது என்று நினைத்துப்பாருங்கள்.

பியூரிடி
இந்தியன் பார்லி

ATLANTIS (East) Ltd., 20/1, Chetla Road, Calcutta.

Agents for South India: **PARRY & Co., Ltd. Post Box 12, Madras.**



ஒரு சுத்தமான ஊற்றிலிருந்து

இயற்கை மைசூர் காடுகளில் மிக உன்னதமான சந்தன மரங்களை உண்டாக்கி யிருக்கிறது. இது தான் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு மிகவும் கீர்த்தியான சந்தன அத்தருக்கு ஆதாரம். இத்துடன் தற்கால விஞ்ஞானமுறைகளும் சேர்ந்து நூற்றுக்கு நூறு சுத்தமான உயர்ந்த மைசூர் சந்தன அத்தர் கிடைக்கிறது. இது மருந்துகள், சோப் அல்லது வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு இன்றியமையாதது.

மைசூர்
சந்தன அத்தர்

MSR 18 TM

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.

டிரேட் மார்க்கை
கவனியுங்கள்!



ஒவ்வொரு
வீட்டிலும்
உட்வார்ட்ஸ்
க்ரைப் வாட்டர்
இருக்கவேண்டும்

WOODWARD'S GRIPE WATER

keeps baby well

1-WW112-111 W. WOODWARD LTD. LONDON ENGLAND

Agent:—T. T. KRISHNAMACHARI & Co.
12A, Lingha Chetty Street, G. T. MADRAS.

பொருளடக்கம்

சர்வதாரி
மலர் 8

தை
இதழ் 6

பொங்கல் பரிசு	...	11
விஞ்ஞானக் கண்காட்சி	... வி. வி. ஆர்.	12
விருப்பம் என்ன?	... ஆர். எஸ்.	16
இசை விருந்து	... 'இசைப்பித்தன்'	24
ஆண் பெண் உறவு	... யோகி சுத்தானந்த பாரதியார்.	30
பொங்கல் பரிசு	... கி. ஸந்தானம்.	34
கண் கண்டார்!!	... C. V. ராமகிருஷ்ணன்.	39
விமர்சனம்	... ...	44
எதிரொலி	... ஜி. எஸ். மணி.	49
பட்டண் பெருமை (புதிய தொடர் கதை)	... "சேதி"	57
கர்நாடக ஸங்கீதம்	... கலாதாஸன்.	74
இதுதான் உலகம்	... கே. சுந்தரம்மாள்.	80
ரஜியா	... "ஹரிணி"	89

சிறந்த சமையல் சாதனமென
பெண்டிர் யாவரும்
விரும்பி, தேர்ந்தெடுப்பது

வீட்டுத் தேவைக்காக, பிரத்யேக லீவர் மூடியுடன் கூடிய 2 பவுண்ட், 5 பவுண்ட் காற்றுப் புகாத டின்களில் எல்லா முக்கிய வியாபாரிகளிடமிருந்தும் கிடைக்கும்,

சுத்தமான தாவர எண்ணெயிலிருந்து தயாரிக்கப்படுகிறது

காமதேனு

வனஸ்பதி

தயாரிப்பவர்கள்:-

மேட்டூர் கெமிகல் & இன்டஸ்ட்ரியல் கார்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை :: சேலம்

மானேஜிங் ஏஜண்ட்ஸ்:-
சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்.,
திருச்சிராப்பள்ளி

பூரண விற்பனை ஏஜண்டுகள்:-
அலைட் இன்டஸ்ட்ரியல்
டிஸ்ட்ரிப்யூட்டர்ஸ் லிமிடெட்.,
120, அரண்மனைக்காரதெரு :: மதராஸ்

கோட்டையைப்போல

உறுதியும்...

விமானத்தைப்போல

வசதியும்..

உள்ள சைக்கிள்கள்
இப்போது வந்திருக்கின்றன...



BRITISH MAKE
MILNER
LONDON





ஒரு சைக்கிளில் முக்கிய அம்சம் உறுதி. இரண்டாவது அம்சம் அமைப்பு. எங்களுடைய சைக்கிள்கள் இந்த அம்சங்கள் அனைத்தும் பொருந்தியவை. அரசாங்கத்தாரும், இதர பெரிய ஸ்தாபனங்களும் எங்கள் நீண்ட நாளைய வாடிக்கைக்காரர்கள் என்பதே எங்கள் சைக்கிள்களின் உயர்வுக்கு அத்தாட்சி. மேல்நாட்டிலிருந்து சப்ளைகள் வேண்டிய அளவு வராதபோதிலும் கூடியவரை உங்கள் ஆர்டர்களைப் பூர்த்தி செய்ய முயற்சிசெய்வோம்.

எப்போழுதும் போல சரஸமான விலை.

ராயல் சைக்கிள் & மோட்டார் கோ.,

13/14 பிராட்வே, மதருஸ்

தி பயனீர் சைக்கிள் ஹவுஸ்

மேல கோபுர வீதி, மதுரை

காவேரி

சர்வதாரி மலர் 8	"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—" பாரதியார்	தை இதழ் 6

பொங்கல் பரிசு

உங்கள் அகத்தில் பால் பொங்கிற்று என்று ஒருவர்க்கொருவர் அளவளாவிக் கொள்வது இப்பொங்கல் திருநாளன்று வழக்கம். வருஷம் முழுவதும் நாட்டிலும் வீட்டிலும் பால்மாரி பொழிந்தாற்போல் சுபிட்சம் பொங்கி வழிந்தோட வேண்டுமென்று பிரார்த்திப்பதுதான் இக் குசலப் பிரச்னத்தின், பண்டிகையின் நோக்கம்.

இப்புது வருஷத்தில் அத்தகைய பால் மாரி பெய்ய ஏது இருக்கிறதா என்று பார்ப்போம். காஷ்மீர் பிரச்னை தீராவிடினும் போர் நிறுத்தப்பட்டிருக்கிறது. நிரந்தர அமைதிக்கு இது அடிகோலியதாகும் என்று பூரணமாக நம்பப்படுகிறது. கனம் ராஜாஜி அவர்கள் கூறியபடி பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையேயுள்ள வெறுப்புக்கும் அவநம்பிக்கைக்கும் முற்றுப்புள்ளி வைத்தாய்விட்டது என்று நம்ப இடமளிக்கிறது. ஹைதராபாத் பிரச்னை வெற்றிகரமாகத் தீர்ந்துவிட்டது. இப் பிரச்னைகளின் காரணமாக ஏற்பட்ட பணவீக்கம் குறைந்து இனிமேல் விலைவாசிகள் உயர்வும் தாழ்ந்து வரலாம் என்று எண்ண ஆதாரமிருக்கிறது.

மேலும் இந்தியாவின் புதிய அரசியல் திட்டம் விரைவில் உருவாகி வருகிறது. இவ்வருட இறுதியில் அது உருவாகி அடுத்த வருஷத்தில் புதுத்தேர்தல்கள் நடக்கலாம் என்று அரசியல் நிர்ணய சபை நமக்கு உறுதி கூறுகிறது. எனவே நாட்டைப் பொறுத்தமட்டில் அமைதியும், சுபிட்சமும் ஓங்கிப் பொங்கலாமென்று நம்புவோமாக. இவ்வருட விளைச்சலும் திருப்திகரமாக இருப்பதால் இப்பொங்கல் மக்களுக்கு மிக்க நலனைப் பயக்கலாம் என்று எதிர்பார்க்கலாம்.

காவேரி வாசகர்கள் இப்பொங்கல் பண்டிகையன்று விசேஷ விருந்துண்ணப் போகிறார்கள். ஸ்ரீ கே. எம், முன்ஷி அவர்கள் சிருஷ்டித்த சரித்திரத் தொடர் கதையை ரஸிக்கத் தொடங்குவார்கள். அதுஅவர்கள் முழுக்கவனத்தையும் ஆவலையும் தூண்டுவதோடு வருடம் முழுவதும் அவர்களுக்குத் தெவிட்டாத ஆர்வத்தையும், இன்ப உணர்ச்சியையும் அளிக்கும் என்பது திண்ணம்.

வாசகர்களுக்கு நமது நல் வாழ்த்துக்களுடன் இப்பொங்கல்பரிசை (மலரை)ச் சமர்ப்பிக்கின்றோம்.

விஞ்ஞானக் கண்காட்சி

ஸி. வி. ஆர்.

பெங்களூரைப் பற்றிக் கேள்விப்படாதவர்கள் உலகிலேயே யாரும் இருக்கமாட்டார்கள். இங்கேதான் இந்தியாவிலேயே தலை சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் இருக்கின்றது. இதில் ஒரு பகுதியான பௌதிக ஆராய்ச்சி நிலையத்தில் தான் உலகம் புகழும் நோபிள் பரிசு பெற்ற ஸர் ஸி. வி. ராமன் அவர்கள் இதுவரை வேலை செய்து கொண்டிருந்தார். பெங்களூருக்கு வருபவர்கள் எதைப் பார்க்காவிட்டாலும் "டாடா இன்ஸ்டியூட்" என்று அழைக்கப்படும் இந்திய விஞ்ஞான ஆராய்சிக் கழகத்தைப் பார்க்காமல் (Indian Institute of Science) போகமாட்டார்கள்.

இங்கே சென்ற மாதம் பண்டித நேரு அவர்கள் திறந்து வைத்த கண்காட்சிச் சாலையைப் பார்க்கச் சென்றேன். முதலில் மின்சார இலாகாவிற்குச் சென்றேன் (Electrical Technology Depapartment). அங்கு டெலிபோன் தானாகவே வேலைசெய்யும் விதம் (Automatic Telephone), ரேடியோ நிலையங்களினின்றும் ஒலி பரப்பும் விதம் முதலியவைகளை 'மாடல்களை'க் கொண்டு விளக்கிக் காட்டியிருந்தனர். அவைகள் எல்லாவற்றுள்ளும் என் கவனத்தைக் கவர்ந்தது மின்சார விளக்குகள் மூலமாக, போலீஸ் இல்லாமலே நான்கு தெருவுகள் கூடுமிடத்தில் போக்கு வரத்தை ஒழுங்காக நடத்தும் விதம்தான். சிவப்பு, பச்சை விளக்குகள் நான்கு பக்கமும் இருக்கின்றன. எதிராக உள்ள இரண்டு ரோடுகளில் பச்சை விளக்கு இருக்கும்பொழுது, மற்ற இரண்டிலும் சிவப்பு விளக்குகள் எரியும். இதுமாதிரி மாறி மாறி எரிவதின் மூலம் போக்குவரத்துக்களை மனித உதவியின்றியே ஒழுங்குபடுத்தமுடியும். இதன் மூலம் தற்சமயம் ஏற்படும் ஏராளமான விபத்துக்களைத் தவிர்க்கலாம்.

பின்னர் சமூக விஞ்ஞான (Social Science) இலாகாவிற்குச் சென்றேன். அங்கு மனிதனுடைய புத்திசாலித்தனம், நடத்தை, குணம் முதலியவைகளை எப்படி அளக்கலாம் என்பதைப் பலபடங்களைக்கொண்டு விளக்கியிருந்தனர். ஒருவனுடைய கைமசி அடையாளத்தைக் கொண்டு (Ink Blot) அவனுடைய குணாதிசயங்களை எப்படிக் கண்டுபிடிக்கலாம் என்பதைப் படத்தின் மூலம் காட்டியிருந்தது போற்றத் தகுந்ததாயிருந்தது.

அடுத்தபடியாக விமான ஆராய்ச்சி இலாகாவிற்குச் சென்றேன் (Aeronautics Department). அங்கு அமைக்கப்பட்டுள்ள காற்றுக் குகை (Wind Tunnel) மிகவும் அதிசயமானதாகும். இந்தியாவிலேயே இங்கேதான் இந்தக் குகை இருக்கின்றதாம். இதற்குள் எவ்வளவு அமுக்கத்திலும் காற்றை உள்ளே புகச் செய்யலாம். இதனுள் விமான இறக்கைகளை வைத்துப் பலவித அமுக்கங்களுடன் காற்றை உள்ளே செலுத்தி, அவைகளின் பலத்தைச் சோதிக்கின்றனர்.

பிறகு உலோக ஆராய்ச்சி இலாகாவிற்குச் (Metallurgy Department) சென்றேன். அங்கு மின்சார சக்தியைக்கொண்டு முலாம் பூசும் விதத்தையும் (Electro Plating), பாலிஷ் பூசும் விதத்தையும் (Electro Polishing) காண்பித்திருந்தது மிகவும் நன்றாயிருந்தது.

பின்னர் இரசாயன ஆராய்ச்சி இலாகாவிற்குள் நுழைந்தேன். இங்கு முதலில் கண்ணைக் கவர்ந்தது, புட்டிகளில் வைத்திருந்த 'பதனி' என்ற புளிக்காத கள்ளாகும். மதுவிலக்குச் சட்டம் அமுலில் உள்ள இடங்களில் இந்தப் பதனியை, இறக்கி, சுலபமாகவும், நயமாகவும் சர்க்கரை தயார் செய்யலாமென்றும், தவிர விடமின், பென்ஸிலின் முதலியன தயாரிக்கவும் இந்தப் புளிக்காத கள்ளை உபயோகப்படுத்தலாமென்றும் பல படங்கள் மூலமாக விளக்கியிருந்தனர். தவிர இதை இரண்டு மூன்று நாட்கள்வரை புளிக்க வைக்காமலிருக்க, புதிய முறையைப் பற்றி நடத்திவரும் ஆராய்ச்சியையும் காண்பித்திருந்தனர். மற்றொரு பக்கத்தில் ஷார்க் (Shark) முதலிய மீன்களில் அதிக சத்து இருப்பதையும் அதை உணவாகக் கொள்ளலாம் என்பதையும் நிரூபித்திருந்தனர். தவிர மண்ணிலும், கெட்டுப்போன விதைகள், பால் முதலியவைகளில் இருக்கும் கண்ணுக்கெட்டாத கிருமிகளையும், அவைகளினின்றும் சுலபமாகத் தயாரிக்கக்கூடிய பெனிஸிலின் முதலிய மருந்து வகைகள், விடமின்கள், கந்தகம் முதலிய இரசாயனப்பொருள்கள் முதலியவைகளையும் வைத்திருந்தது அற்புதமாயிருந்தது.

பின்னர் தற்சமயம் இந்திய நாட்டிற்கு அத்தியாவசியமான உணவுப் பிரசனை முதலிய முக்கிய விஷயங்களைப்பற்றி ஆராய்ச்சி நடக்கும்இலாகாவினுள் (Biochemistry Department) நுழைந்தேன். அங்கு வைக்கப்பட்டுள்ள ஒவ்வொன்றும் முக்கியம் வாய்ந்ததாகத் தோன்றிற்று. நுழைந்தவுடன் முதலில் என் கண்ணில் தென்பட்டவை கெட்டுப்போன கடலைக்காயும், அதைச்சுற்றிப் பல தட்டுகளில் வைத்திருந்த பூஞ்சான்களும் தான். நம் நாடுதான் எண்ணெய் விதைகளுக்குப் பேர்போனது. சரியாகக் கவனிக்காததின் பயனாக ஒவ்வொரு வருஷமும் நான்கு லக்ஷம் டன் எண்ணெய் விதைகள் பூஞ்சான் பிடிப்பதால் கெட்டு விடுகின்றது. இந்தப் பூஞ்சான்களைச்சோடாக்காரத்திற்குப் (Castic Soda)பதிலாகஸோப்புத்தயாரிக்க உபயோகிக்கும் விதத்தைப்பற்றி ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர். சோடாக்காரம் வெளிநாடுகளினின்றும் வரவேண்டியிருப்பதாலும், போதிய அளவில் கிடைக்காததாலும் ஸோப் விலை விஷம்போல் ஏறியிருக்கின்றது. ஆகவே இந்த ஆராய்ச்சியில் வெற்றியடைந்தால் ஒவ்வொரு கிராமத்திலும் வெகு சுலபமாகவும், மலிவாகவும் ஸோப் தயாரிக்க முடியும். அடுத்த படியாக நெய்யில் டால்டா முதலியவைகளை நமக்குத் தெரியாமல் கடைக்காரர் கலந்து நம்மைப் பைத்தியமாக்குவதைத் தவிர்க்க ஒரு சாதனம் கண்டு பிடித்திருக்கின்றனர். ஒருசிறிய மரப்பெட்டியினுள் சிறிய அளவு ஒளி அலைகளைத்தரும் (Ultra Violet Bulb) பல்பு ஒன்று இருக்கின்றது. அதை அடுத்து நெய்யை வைக்க ஒரு சிறிய பலகை உள்ளது. நெய்யை வைத்து மூடிவிட்டு மேல்வழியாகப் பார்க்கும் பொழுது வர்ண ஒளி தெரியும். சுத்தமான பசும் நெய்யாயிருந்தால் மஞ்சள் ஒளி (Yellew Fluorescence) தெரியும். கிடைக்கும் வர்ண ஒளியிலிருந்து கலப்பைக்கண்டு பிடித்து விடலாம். உதாரணமாக டால்டா கலந்திருந்தால் மஞ்சள் கலந்த ஊதா ஒளி வீசும். இந்தச் சாதனம் நெய்யில் கெடுதல் விளைவிக்கக் கூடிய பொருள்களைக் கலப்பதைக் கண்டு பிடிக்க மிகவும் உபயோகமாயிருக்கும்.

அடுத்தபடியாக ஒரு புட்டியில் ஆமணக்கு விதையினின்றும் கிடைக்கும் பொடியைத் தண்ணீரில் கலந்து வைத்திருந்தனர். சிலருக்குக் கத்திக்காயம் பட்டால் சில மணி நேரம் வரை இரத்தம் கசிந்து கொண்டேயிருக்கும். அந்தக் காயத்தின்மீது, புட்டியில் வைக்கப்பட்டிருந்த திரவத்தை விட்டால், 24 ஸெகண்டுக்குள் இரத்தத்தை உறைக்கும் சக்தி (Clotting Power) அந்தத் திரவத்திற்கு உண்டாம்.

அடுத்த மேஜையில் பெரிய புட்டி ஒன்றில் கடலைக் காயை வைத்திருந்தனர். சாதாரண கடலைக் காயை இரசாயன முறை மூலம் பக்குவப்படுத்தி, அதில் விடமின் B, அதிகமாக இருக்கும்படி செய்திருக்கின்றனர். ஆகவே விடமின் B குறைவினால் கஷ்டப்படும் வியாதியஸ்தர்கள் விடமின் மாத்திரைகளைத் தேடிக்கொண்டு மருந்துக் கடையைச் சுற்றி அலையாது, பக்குவப் படுத்தின கடலைக் காயை உட்கொள்வதன் மூலம் புஷ்டியடையலாம்.

அடுத்தபடியாக இருந்தது இன்னும் அதிக ஆச்சரியத்தை அளித்தது. மழை இல்லாமையாலும், கிஸான்சண்டை காரணமாகவும் ஒருகால் அரிசியே கிடைக்காது போய் விடின் எப்படி ஜீவித்திருப்பது? நம் நாட்டிலே எண்ணெய் விதைகள் அதிகமாயிருப்பதால், பிண்ணாக்கும் அதிகம். இந்தப் பிண்ணாக்கில் உணவுச் சத்துக்கள் அதிகமாயிருப்பதால்தான் மாடுகள் தின்று கொழு கொழு என்று வளருகின்றன. ஆகவே கஷ்ட காலம் வரின் நாமும் அதையே நமது ஆகாரமாக உட்கொள்ளலாம். ஆனால் அது சுலபமாக ஜீரணமாகாது. ஆகவே அதைத் தாவர உகைப்பான்களைக் கொண்டு (Catalysts like Protonase etc.) பிரித்து எளிய பொருளாக மாற்றி, உட்கொண்டால் சீக்கிரம் ஜீரணமாகும் என்று கண்டுபிடித்திருக்கின்றனர்.

பக்கத்திலுள்ள மேஜையில் நெல்லிக்காயையும், தக்காளிப் பழம், ஆரஞ்சு முதலியவைகளையும் வைத்திருந்தனர். நெல்லிக் காய்க்கு நம் நாடு மிகவும் பேர்போனது. எல்லாப் பழங்களையும் ஆராய்ந்ததில் நெல்லிக்காயில்தான் அபரிமிதமாக விடமின் C இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கின்றனர். ஆகவே தினந்தோறும் மிதமாக நெல்லிக்காயை உணவுடன் உட்கொள்வதின் மூலம் விடமின் C குறைவால் உண்டாகும் வியாதிகளைத் தவிர்க்கலாம்.

அடுத்தபடியாக, சாக்கடைத் தண்ணீரையும், மில்களினின்றும் வெளிவரும் அழுக்கு நீரையும் வெளியிலே தேங்கவிட்டு, அவைகளில் வளரும் கிருமிகள் மூலமாக வியாதிகளை வரவழைத்துக்கொள்ளாது, அவைகளைக் கொன்று, இரசாயன முறை மூலம் அந்த நீரைச் சுத்தம் செய்து, மறுபடியும் அதைப் பயிர்களுக்குப் பாய்ச்சி, செடிகள் நன்கு செழித்து வளரும்படி செய்யலாம் என்பதை அழகிய படங்கள் மூலம் நிரூபித்துக் காண்பித்திருந்தது கவர்ச்சிகரமாயிருந்தது.

அடுத்துள்ள மேஜையில் போட்டோ படங்கள் மூலமாகக் குழந்தைகளுக்கு வயிற்

றில் கட்டிகள் வரும் விதத்தைக் காண்பித்திருந்தனர். கட்டி உண்டாகும் சமயத்தில் உணவுப் பொருள்கள் சுலபமாக ஜீரணமாவதில்லை. தவிர ஈரல் (Liver) பலஹீனமடைகின்றது. அந்தச் சமயத்தில் பாலைக்கொடுப்பதற்குப் பதிலாக, பாலிலுள்ள கேஸின் (Casein) என்ற பொருளை இரசாயன முறையில் பிரித்து எளிய பொருளாக மாற்றி அதை ஆகாரமாகக் (Casein Hydrosylate) கொடுத்தால் அது எளிதில் ஜீரணமாகும். தவிர பிரிக்கப்பட்ட ஈரல் சத்தைக் (Proteolysed Liver Extract) கொடுப்பதன் மூலமும் ஈரல் வியாதியைக் குணப்படுத்தலாம் என்பதை ஆராய்ந்தறிந்திருக்கின்றனர்.

நமது நாட்டிலே க்ஷயம், டைபாயிட் முதலிய வியாதிகளினால் ஆயிரக்கணக்கான மக்கள் பரிதவித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த க்ஷயம், டைபாயிட் முதலியவைகளுக்குக் காரணமான கிருமிகளை உள்ளிப்பூண்டு (Garlic), முருங்கைவேர் (Drumstick root) முதலியவைகளின் கஷாயத்தைக்கொண்டு கொல்ல முடியுமா என்று ஆராய்ந்து வருவதைப் படத்தைக்கொண்டு விளக்கி யிருந்தது மனதிற்கு ஒரு ஆறுதல் தருவதா யிருந்தது.

அடுத்த மேஜையில் மூன்று பாத்திரங்கள் வைக்கப்பட்டிருந்தன. முதல் பாத்திரத்தில் உப்பு நீர் இருந்தது. இரண்டாவது, மூன்ருவது பாத்திரத்தில்முறையே ஆவாரம்பட்டை பிஸின், அம்பர்லைட் பிஸின் (Amberlite Resin) வைக்கப்பட்டிருந்தன. முதல் பாத்திரத்தில் உள்ள உப்பு நீரை இரண்டாவது, மூன்ருவது பாத்திரங்கள் வழியே ஓடச் செய்யும்பொழுது அதிலுள்ள உப்புக்கள் நீக்கப்பட்டு, வெளிவரும் நீர் மனித உபயோகத்திற்குப் பயன்படும்படி மாறுகிறது. இந்த முறை கிணற்றினின்றும் கிடைக்கும் உப்பு நீரினால் கஷ்டப்படும் கிராம மக்களுக்கு மிகவும் பயன்படும் என்று நம்பப்படுகின்றது. அதற்கு அருகிலேயே நீரை உமிக் கரியுள்ள பானைகள் வழியே செல்லும்படி செய்திருந்தனர். அப்பொழுது நீரில் உள்ள ப்ளுரின் (Fluorine) என்ற இரசாயனப் பொருள் நீக்கப்படுகின்றது. இந்தப்பொருள் நீரில் இருப்பதன்காரணமாக, பல் சொத்தையாகி, பிறகு இடுப்புகளில் வலி ஏற்பட்டு, குனிய முடியாமலும், நிமிர முடியாமலும் ஏராளமான மக்கள் கஷ்டப்படுகின்றனர் (Fluorosis). இதைத் தவிர்க்க மேலே கூறிய முறை மிகவும் உபயோகமாயிருக்கும்.

இதுவரை பாலடைக் கட்டி செய்ய (Cheese) மிருகங்களினின்றும் கிடைக்கும் பொருளை (Animal Rennet) உபயோகித்து வந்தனர். தற்சமயம் இந்தியாவில் ஏராளமாகக் கிடைக்கும் அத்திப் பாலினின்றும் (Fig's latex) கிடைக்கும் பொருளைக் கொண்டு (Plant Rennet) பாலடைக்கட்டி செய்யலாம் என்பதை நிரூபித்துக் காட்டியிருந்தது போற்றத் தகுந்ததாயிருந்தது.

அடுத்தபடியாக, தாவரப்பால் உற்பத்தி செய்யும் விதத்தைக் காண்பித்திருந்தனர். தற்சமயம் பாலில் எல்லாச் சத்துக்களும். தகுந்த முறையில் இருப்பதாகக் கண்டுப் பிடிக்கப்பட்டிருப்பதால் ஒவ்வொருவருக்கும் பால் கிடைக்கும்படி செய்வது நமது கடமையாகும். மிருகங்களினின்றும் கிடைக்கும் பாலின் அளவோ வெகுகுறைவு. ஆகவே அனைவருக்கும் பால் சுலபமாகக் கிடைப்பதற்காக ஸோயா, கடலை முதலியவைகளைத் தண்ணீரில் ஊறவைத்து, பிறகு அரைத்து அவைகளினின்றும். பால் தயாரிக்கும் விதத்தைக் கண்டுபிடித்து இருக்கின்றனர். இந்தத் தாவரப்பாலில் எல்லாச் சத்துக்களும் இருப்பதால், பால் பஞ்சத்தை நீக்க இது உபயோகப்படும் என்று நம்பப்படுகின்றது.

கடைசியாக டால்டாவைப்பற்றி நடத்திய ஆராய்ச்சிகளின் குறிப்புகள் சிலவற்றை வைத்திருந்தனர். அதில் எண்ணெயிலுள்ள சத்துக்கள் எல்லாம் இருப்பதாகவும் எலிகளுக்குக் கொடுத்துப் பார்த்ததில் மூன்ருவது தலை முறையில் கூட கண்குருடு ஏற்படுவதில்லையென்றும், வேண்டுமானால் விடமின் A, D இரண்டையும் கலந்து டால்டாவைத் தயாரித்து உபயோகிக்கலாம் என்றும், ஆகவே இனி பயமின்றி ஒவ்வொருவரும் டால்டா உட்கொள்ளலாம் என்றும் நம்புகின்றனர் இது வரையில் ஆராய்ச்சி நடத்திய அறிஞர்கள்.

பின்னர் அடுத்த இலாகாவிற்குச் சென்றேன். அங்கே சாயங்கள் செய்யும் விதம், வாசனைத் திரவியங்களைச் செயற்கையில் தயாரிக்கும் முறை, மருந்துகள் உற்பத்தி செய்யும் விதம் முதலியவைகளை அழகாகக் காட்டியிருந்தனர். எல்லாவற்றிலும் சிறந்ததாயிருந்தது கரியிலிருந்தும் எரி எண்ணெய் (Liquid fuel) தயாரிக்கும் விதத்தைக் காண்பித்திருந்ததுதான். இந்த முறையைக் கையாளுவதின் மூலம் இந்தியாவினின்றும் பெட்ரோல் பஞ்சத்தை விரட்டியடித்து விடலாம்.

பிறகு பௌதிக ஆராய்ச்சிச் சாலைக்குச் (Physics Department) சென்றேன். அங்கு ராமன் அவர்களால் கண்டு பிடிக்கப்பட்ட ஒளி அலைகளை விளக்கிக் காட்டியிருந்தது அற்புதமாயிருந்தது.

அடுத்தபடியாகப் புத்தகாலயத்திற்குள் (Library) நுழைந்தேன். மாடியில் இருபக்கமும் பரந்து நிற்கும் பிரும்மாண்டமான கூடம். எங்கே பார்த்தாலும் மெர்குரி விளக்குகள் ஜொலிக்கின்றன. பல இலாகாக்களிலும் நடக்கும் ஆராய்ச்சிக்கு வேண்டிய புத்தகங்கள் ஆயிரக்கணக்கில் குவிந்திருந்தன. நூற்றுக் கணக்கான விஞ்ஞானப் பத்திரிகைகள் உலகின் பல பாகங்களிலிருந்தும் வந்து நிறைந்துள்ளன. புத்தகாலயத்திலிருந்தும் எதிரே தெரியும் டாடா சிலையைப் பார்த்தேன். "ஏ ஆராய்ச்சியாளனே, அழகான ஆராய்ச்சிச் சாலையை அளித்திருக்கிறேன். வேண்டிய புத்தகங்களையும், இரசாயனப் பொருள்களையும் கொடுத்திருக்கின்றேன். இனி உன் புத்தியை உபயோகித்து, நன்கு உழைத்து, இந்தியாவின் சிறப்பை விஞ்ஞான உலகிலே பரவச்செய்யக்கூடாதா" என்று கேட்பதுபோலத் தோன்றிற்று. நேருஜியின் பக்கபலம் இருக்கின்றது. மக்களின் ஆதரவு இருக்கின்றது. டாடாவின் தயவினால் நல்ல ஆராய்ச்சிச் சாலை இருக்கின்றது. அன்னையின் அருள் இருக்கின்றது. இனி தீவிர வேலை செய்யவேண்டும் என்று சபதம் செய்துகொண்டு, ஆராய்ச்சிக் கூடத்தை நோக்கிச் செல்ல எண்ணிய பொழுதுதான் மணி ஆறாகிவிட்டது தெரிந்தது. ஆத்ம சங்கல்பத்தை வயிற்றுச் சங்கல்பம் தோற்கடிக்கவே, மறுதினத்திலிருந்தும் உண்மையுடன் உழைப்பதாக உறுதி செய்துகொண்டு வீடு நோக்கி நடக்கலானேன்.

—:o0o:—

கெய்ஸர்-இ-ஹிந்த் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி
லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: **பம்பாய்.**

பொதுஜன நம்பிக்கையை உயர்த்தும் புள்ளி விபரங்கள் :—

		1946	1947
நெருப்பு, கடல், மோட்டார்	ப்ரீமிய வருமானம்	ரூ. **21,00,000**	ரூ. **28,35,000**
ஆயுள் வியாபாரம்	புகுத்தப்பட்டது	ரூ. *77,00,000*	ரூ. *85,74,000*
	முடிவடைந்தது	ரூ. *61,00,000*	ரூ. *70,00,000*

மற்றொருபடி முன்னேற்றம்

சென்னை ஆபீஸ்: 5, தம்பு செட்டித் தெரு, சென்னை.

★

ரிலையன்ஸ் மாரைன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்:— லிவர்பூல் (லண்டன்)

ஸ்தாபனத்திற்கு பிராஞ்சு மானேஜர்கள் :

நெருப்பு, கப்பல் இன்ஷ்யூரன்ஸ் வியாபாரத்திற்காக உலகம் முழுமையும் க்ளெயிம்கள் முடிக்கும் ஏஜண்டுகளிடம் லாப நிலவரம் ஒரு மில்லியனு (ஸ்டர்லிங்) க்குமேல்.

பிரதிநிதித்வமில்லாத இடங்களுக்கு ஆர்கனைஸர், விசேஷ ஏஜன்ஸி, ஏஜன்ஸி இவைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சரியான நபர்களுக்கு சிறந்த ஊதியம்.

விருப்பம் என்ன

ஆர். எஸ்.

திரை விலகியது. பின்னால் இருந்த சித்திரம் வெளிப்பட்டது.

வசந்தகாலத்தைக் குறிக்கும் வானம். அதை எட்டிப் பிடிக்கும் பனி தோய்ந்த சிகரங்கள். இரு புறங்களிலும் பனிப் புல் தரைகள் கரையிட இடை ஊர்ந்து வழியும் சிற்றாறுகள். இவைகளுக்கு நடுவே ஒரு சிறுவன், கையிலிருந்த புஷ்பங்களைப் பிய்த்தெறிந்து கொண்டிருந்தான். அவன் மனம் மலர்களின் மேலும் இல்லை; தன்னுடைய காரியங்களைப்பற்றிய கவலையே அவனுக்கு இல்லை.

அக்பர் சிலையாக நின்றார். அவர் கண்முன் நின்ற சித்திரம் மறைந்தது. அந்தக் காலம், தம் பிள்ளைப் பருவம் அவர் நினைவுக்கு வந்தது. அவருடைய தகப்பனார் மறுபடி இந்தியாவில் மொகலாய சாம்ராஜ்யத்தின் விதையை ஊன்றியபோது அவருடன் இருந்த பாரசீக சைத்திரிகர்கள் இரண்டு பேர், ஸையத் அலியும், அப்துல் ஸமாத்தும். அவர்களுடைய திறமையை ஹிந்துஸ்தானமே வியந்தது. அவர்களுடைய கைத்திறனில் ஒரு சிறிதளவாவது தம்முடைய மகனுக்கு வரக்கூடாதா என்று ஹுமாயூன் அரும்பாடு பட்டார். ஆனால் அக்பர் தம்முடைய பாடத்திலேயே கருத்தைச் செலுத்தவில்லை. அதன் விளைவாக அக்பரைக் கண்டித்து ஸமாத் எழுதிய சித்திரம் அது.

அந்தக் காலம் எங்கே? கவலையின்றிக் கழிந்துபோன அந்தப் பருவம் எங்கே? அரசாட்சியின் சுமையின் கீழ் அழுந்திக் கொண்டிருக்கும் இந்தக் காலத்திற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?

படிக்கட்டுகளிடையே வேகமாக இறங்கி அவர் சென்றார். சிறிது நேரத்திற்கெல்லாம் அவருடைய குதிரை கிளப்பிய பெரும் புழுதிக்குப் பின்னால் டேராடூன் சர்வகலாயின் உயர்ந்த கட்டிடங்கள் மறைந்துகொண்டிருந்தன.

அரண்மனையை அடைந்ததும் அவருடைய காரியதரிசி ஒரு கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். சிறு வயதிலிருந்து அவரை வளர்த்த மகாம் அனகா எழுதியிருந்தாள்.

“மெக்காவுக்குப் போகும் வழியில் பைராமை யாரோ கொன்றுவிட்டார்களாம். பெரிய ஆபத்துக்களுக்கெல்லாம் தப்பிப் பிழைத்து, உன் தந்தையின் சாம்ராஜ்ய வித்து சிறிய செடியாகியிருக்கிறது. மாளவத்தில் இன்று ஒரு கலகம் முளைத்திருக்கிறது. சேனையை நடத்திச் செல்ல என் மகன் துடியாகத் துடிக்கிறான். என்ன சொல்கிறாய்?

மகாம் அனகா.”

கடிதம் நழுவியது. அவருடைய மனம் சிந்தனையில் ஆழ்ந்தது.

சின்னஞ் சிறு வயதிலிருந்து அவரை அணைத்து ஆதரித்த இரண்டு பேர், பைராம் கானும் அவருடைய வளர்ப்புத் தாயும்தான். தம்முடைய தந்தையை இழந்த துயரத்தைத் தாங்க முடியாமல் அவர் தளர்ந்து நின்றபோது ஹிந்துஸ்தானம் பூராவும் ஒரு புயல் வீசத் தொடங்கியது.

ஷெர்ஷாவின் மருமகன் ஸிகந்தர்ஸூர் ஹூமூ என்ற ஒரு ஹிந்து அடிமையைத் தளகர்த்தனாக்கி, பெரும் போரைத் துவக்கினான். டில்லியும் ஆக்ராவும் பறிபோயின. பைராம் ஒருவனைத் தவிர எல்லோரும் காபூலுக்குத் திரும்பி விடலாமென்று எண்ணினார்கள். பானிப்பட்டு யுத்தத்தில் வெற்றியடைந்து ஆடிப்போன சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரத்தை நிலைக்கச் செய்தவன் பைராம்தான். அவ்வளவு கஷ்டப்பட்டு அவர் தலையில் சாம்ராஜ்யத்தைக் கட்டினான். அதே சாம்ராஜ்யத்தை உத்தேசித்துப் பிரபுவாக விளங்கிய பைராம்கானை அவர் தனியாக மெக்காவுக்கு அனுப்பினார். வழியில் அவன் இறந்துபோனான்.

அவர் கண்களில் நீர் துளித்தது. தகப்பனைக் காட்டிலும் உயர்ந்த பைராம் கடைசிக் காலத்தில் அவருக்கே விரோதமாகக் கலகம் செய்தான். அணைத்த கை அடிக்க ஓங்கியது. இந்த உலகத்தில் யாரை ஆதரவு என்று நினைப்பது? எதை நம்புவது?

2

மாளவத்தின் அரசன் பாஸ்பகதூரைப் பற்றி யாருக்கும் அதிகமாகத் தெரிந்திருக்காது. ஆனால் மாளவத்தின் அரசி ரூபமதியைத் தெரியாதவர்கள் இருக்கமுடியாது. ராஜபுதனத்தின் செல்வ மகளான அவள் ஹிந்துஸ்தானத்தின் எழிற்செல்வம். கஸ்தூரி இருக்கும் இடத்தைப் பறைசாற்றி அறிவிக்கவேண்டாம். அதுபோல் அவள் அடக்கத்திலும் அவள் அழகு பிரசித்தமாகி இருந்தது. மொகலாய சாம்ராஜ்யத்திலேயே சிறந்த டேராடூன் சித்திரசாலையில்கூட ரூபமதியும், பாஸ் பகதூரும் வெள்ளி நிலவில் வெண்புரவிகளின்மேல் உலவி வருவதுபோல் ஒரு சித்திரம் வைக்கப்பட்டிருந்தது.

3

அத்தகைய மாளவத்தின்மேல் படையெடுக்க, குடிகாரனான அதாம்கானை அனுப்புவது என்றால் அவருக்கே தயக்கமாக இருந்தது. தம்முடைய வளர்ப்புத் தாயை உத்தேசித்து, தம்முடைய நன்மையைத் தவிர வேறெதையும் நினைக்காத மகாம் அனகாவை உத்தேசித்து—அவளுடைய மனம் புண்படக்கூடாது என்பதற்காக, அதாம்கானின் தலைமையின்கீழ் ஒரு சேனையை மாளவத்துக்கு அனுப்பினார்.

மாளவத்துக் கலகம் அடங்கியது. ஆனால் அக்பர் நினைத்தது நடந்துவிட்டது. எதற்கு அஞ்சினாரோ அது நிகழ்ந்துவிட்டது.

மாளவத்தின் அரசி விஷம் அருந்தி இறந்து போனாள். பகதூரைக் கொன்றுவிட்டார்கள். மாளவத்தின் அந்தப்புரத்து நாரீமணிகளில் பலர் அதாம்கானின் கையில் சிக்குண்டார்கள். வாழ்க்கையின் இலட்சியத்தை இழந்து இருளில் அகப்பட்டுக்கொண்ட அவர்கள் கற்பு அந்தக் குடிகாரனிடமிருந்து தப்பமுடியவில்லை.

அக்பரால் இதைப் பொறுக்கமுடியவில்லை. மொகலாய சாம்ராஜ்யத்தின் புகழ் மங்கிவிட்டது. யுத்தத்தின் இறுதியில் உயர்ந்த ஸ்தானத்தில் வைத்துக் கௌரவிக்கப்படவேண்டியவர்கள் மிகக் கேவலமாக நடத்தப்பட்டு விட்டார்கள். போர்க்களத்தில் அக்பர் இதுவரை காட்டிக்கொண்டிருந்த உயர்ந்த பண்புக்குத் துடைக்கமுடியாத பண்பு ஏற்பட்டுவிட்டது. யாரைச் சிநேகித்துக் கொள்ளவேண்டுமென்று அல்லும் பகலும் அவர் பாடுபட்டாரோ அந்த ராஜபுத்திரர்களுடைய நிரந்தரமான விரோதம் வாய்க்கும்படியான சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டது. அவர் உள்ளம் குமுறியது.

அதாம்கானை அவர் தலைநகருக்குத் திரும்ப அழைத்துக்கொண்டார். போர்க்களத்தில் வெற்றியடைந்ததற்காக ஜாகீர்களைப் பெற்றுப் பெருமையடைய வேண்டியவன் விசாரணைக்கு அழைக்கப்பட்டான்.

மகாம் அனகா நடுங்கினாள். தன் புதல்வனைப்பற்றிய கவலையே அவள் மனதில் உயர்ந்து நின்றது.

3

விசாரணையில் சாட்சியம் கூறுவதற்காக ரூபவதியின் அந்தரங்கத் தோழியர் இருவர் வந்திருந்தார்கள். அரசாங்கத்தின் விருந்தினராக அவர்கள் அந்தப்புரத்தில் தங்கியிருந்தார்கள்.

மறுநாள் விசாரணை. அக்பருடைய மனம் வெதும்பிக் கொண்டிருந்தது. உப்பரிகையின் மேல்மாடத்திலிருந்து அவர் நகர் முழுவதையும் பார்த்துக் கொண்டிருந்தார். வெள்ளிமலர்கள் அலர்ந்த வானமென்னும் பூங்காவில் பூத்த மதியென்னும் தேன் கிண்ணி வெள்ளி நிலவைப் பொழிந்து கொண்டிருந்தது. அருகாமையிலிருந்த மலையின் சரிவில் உயர்ந்து வளர்ந்திருந்த மரங்கள் மாலைப்பனியைத் தாலாட்டிக்கொண்டிருந்தன. மலைச்சரிவில் இறைந்து கிடந்த குடிசைகள் மெல்ல வழிந்திறங்குவதுபோலத் தோன்றின. மற்ற நாட்களாக இருந்தால் அக்பர் இந்தக்காட்சியில் சொக்கி நின்றிருப்பார். ஆனால் இன்று அவர் மனம் ஒரு நிலையில் இல்லை. அது கடல்போல ஆரவாரித்தது.

அவருடைய செவிகள் கூர்ந்துகவனித்தன. யாரோ படிகளின் வழியாக ஏறிவந்தார்கள். மங்கிய நிலாவெளிச்சத்தில் ஒரு பெண்ணின் உருவம் தெரிந்தது. அக்பர் அவள் அருகே சென்று நோக்கினார். முகத்திரை விலகியது. அங்கே மகாம் அனகா நின்றாள்.

அவள் முகம் சோபை இழந்திருந்தது. கண்களில் நீர் துளித்தது. உள்ளத்து எண்ணங்களைக் கொட்ட உதடுகள் துடித்தன. அக்பர் சிலைபோல் நின்றார்.

“சாகேப்! என் மகனுக்காக இங்கே வந்திருக்கிறேன். இந்த உலகில் என்னுடைய ஒரே துணையான அவனை இழந்து விடக்கூடாது என்று நான் துடிக்கிறேன். அவன் செய்கையில் நியாயம் இல்லை; நீதி கிடையாது; ஆனால் அவன் என் மகன். அவனுடைய உயிரை மட்டும் உங்களிடம் நான் யாசிக்கிறேன்.”

அக்பருடைய உள்ளம் குழைந்தது. நினைவு தெரிந்ததிலிருந்து அவரை வளர்த்ததாய், அன்பின் உருவமான அன்னை, சொந்தத் தாய் ஹமீதாவைவிட அவருடைய நன்மையில் கருத்துக் கொண்ட அவள் கை இன்று தாழ்ந்து யாசிக்கிறது. அவர் குரல் மங்கியது. முகம் ஒளியிழந்தது. அவர் கூறினார்:

“தாயே! என்ன நிகழ்ந்தது என்று உனக்குத் தெரியுமா? மானமே பெரிதென்று நினைக்கும் ராஜபுத்திரப் பெண்மணிகள் உன் மகனின் கையில் அகப்பட்டுத் தவித்த தவிப்பு உனக்குத் தெரியுமா? இன்று நீ நிற்பதுபோல் கதியிழந்து நின்ற அவர்களுடைய வாழ்க்கையை உன் மகன் எப்படித் தீர்மானித்தான் என்று உனக்குத்தெரியுமா?”

“தெரியும் சாஹேப்! தெரிந்ததால் தான் என் மகனை அனுப்பாமல் நான் இங்கு வந்தேன். மொகலாய ஆட்சியின் நியாயத்தை நான் கேட்கவில்லை. உன்னை வளர்த்தவள் என்ற உரிமையில் உன்னைப் பிச்சை கேட்கிறேன். உன் சிற்றப்பனும், உறவினர்களும் உன்னைக் கொன்றுவிடச் செய்த முயற்சிகளையெல்லாம் பயனற்றவையாக்கி உன்னைக் காத்து ஹமீதாவிடம் ஒப்புவித்த உரிமையைப் பணயம் வைத்துக்

கேட்கிறேன். காபூலிலிருந்து ஆக்ரா வரையிலும் உன்னைக் காப்பாற்றிக் கொண்டு வந்த செய்கைக்கு உன் நன்றியறிதலின் பரிசைக் கேட்கிறேன். என் மகனின் உயிருக்கு எந்தத் தீங்கும் நேராமல் இருக்குமா?''

அக்பருடைய உறுதி ஓடி ஒளிந்தது உள்ளம் நைந்தது. நியாயம் நழுவியது. அவர் சொன்னார்,

''என்னை என் தாயிடம் காத்து ஒப்படைத்தாய். பதிலுக்கு உன் மகனை உனக்குக்கொடுக்கிறேன். இதை நீ நம்பலாம். என்னுடைய வார்த்தைகளை உறுதி மொழியாக ஏற்றுக் கொள்ளலாம். உன்னுடைய மகனைக் காப்பாற்ற இனிமேல் நீ எந்த விதமான முயற்சியும் செய்ய வேண்டியதில்லை.''

4

மறு நாள் விசாரணை நடந்தது. அரசாங்கத்தில் சிறந்த பதவிகளைப் பெறக்கூடியவன் மதியீனமாக நடந்து கொண்டதால் அவனுடைய சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அரசாங்கம் அவனுக்களித்திருந்த பதவி, பட்டம், பரிசு அனைத்தும் பறிபோயின. அதாம்கானால் இந்த அவமானத்தைத் தாங்க முடியவில்லை. உலகம் வெறுப்புக் கடலாய்த் தோன்றியது. எல்லோரும் அவனைப் பரிகசிப்பதுபோல இருந்தது. எண்சாண் உடம்பும் ஒரு சாணாகக் குறுகி நின்றான்.

ஆனால் சாட்சிக்காக அழைக்கப் பட்ட பெண்மணிகள் இருவரும் வரவில்லை. அவர்கள் இல்லாமலே விசாரணை முடிந்தது.

விசாரணைக்குப்பின், உணவுகூட அருந்தாமல் அக்பர் அந்தப்புரத்துக்கு விரைந்து சென்றார். மகாம் அனகாவுக்குச் சொல்லி அனுப்பினார்.

''உன்னை என் வளர்ப்புத்தாய் என்று சொல்லிக்கொள்ளக்கூட என் மனம் கூசுகின்றது. உன் மகன் மொகலாயர்களின் வீரத்துக்கு மாசு தேடித் தந்து விட்டான். நீ மொகலாயர்களின் நீதிக்குப் பங்கம் விளைத்து விட்டாய். அந்த ராஜ புத்திரப் பெண்மணிகள் எங்கே?''

''சாஹேப்! பதற வேண்டாம்! அவர்கள் சபைக்கு வர மறுத்து விட்டார்கள்.''

''அவர்களைக் கூப்பிடு!''

மகாம் அனகா பிரமித்து நின்றாள். அக்பர் இந்த அற்ப விஷயத்தில் இவ்வளவு கவனம் செலுத்துவாரென்று அவள் நினைக்கவில்லை.

''அவர்கள் மாளவத்துக்குத் திரும்பிப் போய்விட்டார்கள்!''

அக்பர் இதை எதிர் பார்த்தார். ஆனால் அவள் வாயினாலேயே இதைக் கேட்டபோது அவரால் அவர் செவிகளையே நம்ப முடியவில்லை.

''இந்தச் சாம்ராஜ்யத்தைக் காப்பாற்றும் பொறுப்பை வகிக்கும் ஒருவனிடம் உண்மையை மறைக்கிறாய் என்பதை உணர்ந்து பேசு. அவர்கள் அந்தப்புரத்திலிருந்து வெளியே போகவில்லை.''

''உனக்கு அது நிச்சயமாகத் தெரியுமா? அந்தப்புரத்துக்கு நேற்றிரவு யார் காவல் இருந்தது?''

''நான் தான் காவல் இருந்தேன்.''

அவள் கல்லாய்ச் சமைந்து நின்றாள். அவர் மேலும் கூறினார்:

''அவர்களை நீ கொன்று விட்டாய் என்பது எனக்குத் தெரியும். ஒரு உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்று நீ என்னைக் கேட்டாய். நான் வாக்குறுதி கொடுத்தேன். நீ என்னை நம்பவில்லை. ஒரு உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய இரண்டு உயிர்களைக் கொன்று விட்டாய். நீ ஆச்சரியப்படுகிறாய் என்பது எனக்குத் தெரியும். இந்த மொகலாய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்திக்கு இரு கண்கள் இருகாதுகள் இருக்கலாம். ஆனால் ஆயிரக்கணக்கான கண்கள் மூலம் ஒவ்வொரு காரியத்தையும் அவர் பார்க்கிறார், ஆயிரக்கணக்கான காதுகளின் மூலம் ஒவ்வொரு செய்தியையும் அவர் கேட்கிறார். நீதிக்கு, மக்கள் அமைதிக்கு, அரசனுக்குக் கேடு செய்பவர்களுடைய முடிவு என்ன ஆகும் என்பதை நீ அறிந்து கொண்டவள்தான். என்னுடைய வளர்ப்புத்தாய் என்பதற்காக உன்னை இத்துடன் விடுகிறேன். இந்தப் பரந்த சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரியின் பொறுப்பை இதுவரை உன்னிடம் வைத்திருந்தேன். நாளையிலிருந்து உனக்கு விடுதலையளிக்கிறேன். ஆப்கனிஸ்தானத்திலிருந்து ஒருவர் கூடிய சீக்கிரம் இங்கே வந்து அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்.''

அவளால் பேச முடியவில்லை. இரத்தினத்தைச் சிந்திய மணிப் பாம்புபோல் அவள் மனமழிந்து செயல் ஒழிந்து நின்றாள். அந்தப்புரத்துப் படிக்கட்டுகளின் வழியே அக்பர் இறங்கிப் போகும் சப்தம் அவள் காதுகளில் ஒலித்தது.

5

1561 ஆம் ஆண்டு மே மாதம் ஷம்சுதீன் கான் என்ற ஆப்கானியர் மொகலாய சாம்ராஜ்யத்தின் பிரதம மந்திரியாகப் பொறுப்பு ஏற்றார். அரசியலிலும் பொருளாதாரத்திலும் அறிவில் தேர்ந்த அவரை அரசாங்கம் மெச்சியது. குடிமக்கள் புகழ்ந்தார்கள்.

சுமார் இரண்டு மாதங்கள் ஆகியிருக்கும். ஒருநாள், நல்ல மழைக்குப் பின் இருள் நிறைந்திருந்தது. அக்பர் படுத்துகொண்டு தூக்கம் வராமல் புரண்டுகொண்டிருந்தார். அவருடைய அறையின் தெற்குக் கோடியிலே ஒரு கதவு. பாரசீகச் சிற்பி ஒருவன் அதில் தன் கைத்திறன் முழுவதையும் கொட்டியிருந்தான். அந்தக் கதவு திறந்திருந்தது. மழைக்காக எல்லா ஜன்னல்களையும் மூடியிருந்தார்கள்.

அடுத்த அறையில் ஷம்சுதீன் உறங்கிக் கொண்டிருந்தார். இரவு அவருடன் பேச வந்த அவர் அன்று அங்கேயே உறங்கி விட்டார். காற்று மட்டும் ஊளையிட்டது. 'சில்' என்ற காற்று உள்ளே பரவியது. எல்லாச் சாளரங்களையும் மூடிவிடச் சொன்னது அவருக்கு நினைவுக்கு வந்தது. எங்கிருந்து இப்போது காற்று வருகிறது?

அவர் எழுந்து நின்றார். திறந்திருந்த கதவுக்கப்பால் கிழக்குப் பக்கம் மசூதியை நோக்கிக்கொண்டிருந்த சாளரம் திறந்திருந்தது. அதில் ஒரு கயிறு கட்டியிருந்தது இது யார் செய்த வேலை?

அறைக் கதவைச் சாத்தப்போனார் ;ஏதோ அரவம் கேட்டது. அதைத் தொடர்ந்து அமானுஷ்யமான ஒரு அலறல். வாளை உருவினார். தடதடவென்று யாரோ ஓடும் சத்தம். அடுத்த அறைக்குள் புகுந்தார். ஷம்சுதீன் கான் அங்கே ரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தார். திடீரென்று அறை விளக்கு அவிந்தது.

"நில் அங்கே!" என்று சப்தமிட்டார். ஒரு சுவர்க்கோழி தான் பதில் கூறியது. வேகமாகப்போய், கிழக்குப்பக்கமிருந்த சாளர வழியாகக் கீழே பார்த்தார். கட்டியிருந்த கயிறு கீழே நீண்டு வீதியைத் தொட்டது. அதன் வழியே ஒரு ஆள் இறங்கிக்கொண்டிருந்தான். சுமார் பதினைந்தடிகூட இறங்கியிருக்கமாட்டான். மேலும் கூர்ந்து நோக்குவதற்குள் ஒரு கத்தி மேலே பறந்து வந்தது. சற்று நகர்ந்தார். சாளரத்துக் கண்ணாடியில் கத்திபட்டு அது தூளாக நொறுங்கியது. 'பளிச்'சென்று ஒரு மின்னல். கத்தியை உருவிக் கட்டியிருந்த கயிற்றை அறுத்தார். ஒரு வினாடி! கண்களை மூடிக்கொண்டார். சுமார் எழுபது அடி உயரத்திலிருந்து வேகமாகப் பாறைகள் புதைந்த வீதியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் மனிதனின் முடிவான உருவத்தைக் காண அவருக்குத் துணிச்சல் இல்லை. அவர் காதுகளில் கோரமான ஒரு அலறல் விழுந்தது.

ஒரே இரவில் இரண்டு உயிர்க் கொலைகள்! ஓர் உயிர் அநியாயமாகக் கொல்லப்பட்டது. ஆனால் இன்னொருவன்! அவன் இருப்பதை விட இறப்பதே மேல்!

6

அக்பர் இன்னும் தூங்கவில்லை. அந்தச் சம்பவங்கள் நடந்து மூன்று மணி நேரம் ஆகியிருக்கலாம். விடிவதற்கு இன்னும் வெகுநேரம் பாக்கியிருந்தது.

படிகளின் வழியே யாரோ வரும் சப்தம். அவருடைய படுக்கை அறையில் இந்த வேளையில் அவருடைய அனுமதிகூட இன்றி வரக் கூடியவர்கள் யாராக இருக்கலாம்? அவர் கை உடைவாளைத் தொட்டது. விளக்கைத் தூண்டினார்.

மகாம்அனகா உள்ளே வந்தாள். ஆனால் அன்றுபோல் இன்று அடங்கி நிற்கவில்லை. அரற்றினாள்.

"என் மகனைக் கொன்றுவிட்டாயே! இன்று மாலைவரை என் கண்குளிர வைத்தவன் இப்போது இந்த மாளிகையின் வாசலில் பிணமும் குருதியுமாய்க் கிடக்கிறான்! என்ன கோரம்! ஆரம்பத்திலேயே கூறினேன். அவன் மதியிழந்து நடந்துகொண்டு விட்டான். ஆனால் என் வயிறு எரிகிறதே; உன்னை வளர்த்த பலன் என் மகன் உயிரை நீக்கிவிட்டயே."

அவள் பெண் புலி போலச் சீறினாள். "உன் நியாயமும் நீயும்!" ஒரு குத்துவாள் அவரை நோக்கி வந்தது. அவர் குனிந்து கொண்டார். அது அவர் நெற்றியில்பட்டு இரத்தம் கசிந்தது.

அவர் அவளைச் சிறை செய்தார். அவள் உறுமினாள். "நீ என்னைத் தண்டிக்க முடியாது. என் மகன் உயிர்நீத்தான் என்று கேட்டதும் மெல்லக் கொன்றுவிடக்கூடிய விஷத்தைக் குடித்துவிட்டுத்தான் நான் இங்கே வந்தேன். நாளை விடிவதை நான் பார்க்கமாட்டேன். ஆனால் நன்றியில்லாத உன்னைப் பழிவாங்கத்தான் இங்கே வந்தேன்."

Solo

The one man spray



The Multipurpose, double action, one man sprayer.

The ideal sprayer for the garden, Estate, Factory or mill. Indispensable for lime washing, creosoting, disinfecting and every Spraying purpose.

Invaluable for disinfecting Anti-Malarial, Oil-spraying or in the garden and orchard.

Saves time, material and labour. Simple to use-easy to clean.

Particulars from:-

BEST & CO., LTD., MADRAS & BRANCHES.

Special Terms to the Trade.

BZ-16

உங்களுடைய விவசாயப் பிரச்னைகளை
நாங்கள் தீர்த்து வைப்போம்

WE CAN SOLVE YOUR AGRICULTURAL PROBLEMS



USE Fordson MAJOR TRACTORS

எத்தகைய வேலையாயினும், எதற்கும் உதவும் போர்ட்ஸன் மேஜர் அதைச் சாதிக்கும். அதன் பலதிறப்பட்ட சக்தியை நீங்கள் பரிபூரணமாக அடைய நாங்கள் உதவ இயலும். ஏனெனில் எத்தகைய கருவிகள் தேவையாயினும் — விவசாய சாஸ்திரக்ஞர்களால் ஸ்பெஷலாகத் தயாரிக்கப்பட்டவை— எங்கள் மூலம் நீங்கள் தருவித்துக் கொள்ளலாம். உங்களுக்குத் தேவையான கருவிகளைச் சீரிய முறையில் அமைத்துக் கொடுப்பதற்கு நாங்கள் உதவத் தயார்.

ஸிம்ப்ஸன் & கம்பெனி லிமிடெட்

போர்ட்ஸன் மேஜர் டிராக்டர் டீலர்ஸ்

202 – 203 மவுண்ட் ரோடு சென்னை—2

கிளைகள்: பெங்களூர், உதகமண்டலம், திருச்சிராப்பள்ளி, ஹைதராபாத் (டெக்கான்)

பேசும்போது அவள் உடல் துவண்டுபோய் விட்டது. உயிர் சுருங்கிவிட்டது.

* * *

ஒரு வாரம்கூட ஆகவில்லை. அக்பர் நந்த வனத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவருடைய மனம் நிம்மதியை இழந்திருந்தது. கலக்கமற்ற நிலையை ஒரு வாரமாக அவரால் அடைய முடியவில்லை. கொப்புளிக்கும் கடலில் சீறும் அலைகளின் நடுவில் பிடித்துக்கொள்ள ஒரு கட்டையைத் தொட விரும்பும் ஒருவன் கைப்பிடி நழுவிக்கொண்டேயிருந்தால் அவன் மனம் எப்படித் துடிக்கும்? அதைவிட அவர் மனம் எந்த விதத்திலும் உயர்ந்ததாக இல்லை. இந்த நிலையை அவர் வெளிக்காட்ட விரும்பவில்லை. ஒரு நாளின் பெரும்பகுதியைச்சாதுரியமான நடிப்பில் அவர் கழிக்கவேண்டியிருந்தது. எண்ணற்ற வீரர்களைச் சிறைப் படுத்துவதில் வெற்றியடைந்த அவரால் அவருடைய மனதைமட்டும் சிறைப்படுத்த முடியவில்லை.

குவாலியர் சமஸ்தானத்தின் செல்வமான தான்ஸேனுடைய சங்கீதம் அவர் மனத்துக்கு அமைதியைத் தரவில்லை. பீர்பாலின் வேடிக்கைக் கதைகளும் சாதுரியமான பேச்சும் அவர் உள்ளத்துக்கு நிரந்தரமான சந்துஷ்டியைத் தேடித் தரமுடியவில்லை. அபுல் பாஸலின் பரிவு அவருடைய மனதைத் தேற்ற இயலவில்லை.

(அடுத்த இதழில் முடியும்)



இசை விருந்து

இசைப்பித்தன்

சென்னையில் டிசம்பர் மாதக்கடைசியில் ஒரே சங்கீத நாட்டிய அமர்க்களம்தான். எங்கே சென்றாலும் பாட்டு, நாட்டியம். இவ்வளவு இடங்களிலும் ஒரே சமயத்தில் ஜனங்கள் கூட்டம் கூடுவதுதான் ஆச்சரியமாக இருந்தது. வழக்கமாக அகாடமியாரால்சுமார் 20வருஷகாலமாகவும், இந்தியன் பைனார்ட்ஸ் ஸொஸைட்டியாரால் 16 வருஷகாலமாகவும், தமிழிசைச் சங்கத்தாரால் கொஞ்சகாலமாகவும் நடத்தப்பட்டு வரும் உற்சவங்களைத் தவிர, இந்த வருஷம் வேறு உற்சவங்களும் நடைபெற்றன. சென்னபுரி ஆந்திர மஹாஸபையாரும், தியாகராஜநகர் தியாகப்பிரம்ம கான சபையாரும் இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆப் பைனார்ட்ஸ் ஸபையும் உற்சவங்கள் கொண்டாடினார்கள். நுங்கம்பாக்கம் கான ஸபையும் இந்த ஸந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சில கச்சேரிகள் ஏற்பாடு செய்தார்கள். மொத்தத்தில் எங்கே சென்றாலும் பாட்டும் ஆட்டமும் தான். மேலும் பிரம்ம ஞான சபையின் கன்வென்ஷனும் (T. S. convention) சேர்ந்தது. அவர்களும் சில மாலைகளில் கலாப் பிரகடனங்கள் நடத்தினார்கள். சுதேசி எக்ஸிபிஷன், பார்க் பேர் இவைகளும் நிகழ்ந்தன. சென்னை இந்திரலோகமாக விளங்கிற்று. கலா விழாக்களில் பெரும்பாலும் பாட்டும், ஆட்டமும் தானிருந்தன. மற்றக் கலைகளுக்கு இடங்கொடுத்ததாகத் தோன்றவில்லை. அகாடமி, தமிழிசைச்சங்கம், தியாகப்பிரம்மசபை முதலியவை சங்கீதத்தையே தங்கள் நோக்கமாகக் கொண்டார்கள் என்பது அந்தந்தச் சபையின் பெயர்களிலிருந்தே தெரியவருகிறது. ஆனால் இந்தியன் பைனார்ட்ஸ் ஸொஸைட்டி இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆப் பைனார்ட்ஸ் இந்த இரண்டு சபையின் பெயர்களைக் கவனிக்கும்போது அவைகள் மற்றக்கலைகளையும் போற்ற எதிர்பார்க்க இடமிருக்கிறது. ஏனையோர்கள் அப்படிப் போற்றவில்லை என்பது புரியவில்லை. ஓவியக் கலைக் காட்சி, கவிதை, நாடகங்களியற்றல் முதலியவைகளிலும் அவர்களுடைய சிரத்தை புகுந்தால் நலமாயிருக்கும். இதை உத்தேசித்தே பைனார்ட்ஸ் ஸொஸைட்டி உற்சவத்தில் தலைமை வகித்த பேராசிரியர் ஸ்ரீனிவாஸனவர்கள் தமது முதல் பிரசங்கத்தில் சங்கீதத்தைப் பற்றிமட்டும் பேசாமல் எல்லாக் கலைகளைப் பற்றியும் எடுத்துக் கூறினார் என்று நினைக்கிறேன். திரும்பத் திரும்ப எல்லாச் சபைகளும் ஒன்றுபோல அதே வித்வான்களையும் நடன விதுஷிகளையும் கொண்டு கச்சேரிகள் ஏற்பாடு செய்வதிலென்ன விசேஷம்?

* * *

மற்றொரு காரியம் நமது ஆலோசனைக்கு வருகிறது. இதுவரை கிறிஸ்துமஸ் லீவ் என்பது இந்தியாவில் எங்கும் பொதுவான ஒழிவு நாட்களாக இருந்தன. இனி அப்படியே இருக்குமென்று எண்ண இடமில்லை. இந்த வருஷமே சென்னையில் கிறிஸ்துமஸுக்கு ஒரே நாள் தான் ஒழிவு என்று கவர்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையால் இந்த மாதிரியான உற்சவங்

களுக்கு டிசம்பர் ஜனவரிதான் தக்க காலமென்று நினைப்பானேன்? சீதோஷ்ண ஸ்திதியை உத்தேசித்தும் சென்னைநகரின் அந்தக் காலம் மிகவும் சௌகரியமான காலமென நினைக்கவும் இடமில்லை. எல்லா ஸ்தாபனங்களும் அந்த ஒரே காலத்தில் தங்கள் உற்சவங்களை ஏற்பாடு பண்ணி, ரஸிகர்களை எங்கே எதற்குப் போவது என்று தெரியாமல் தத்தளிக்கச் செய்வது என்ன அத்யாவசியமென்று புரியவில்லை. சில சபைகள் நவராத்திரி சமயத்தில் உற்சவங்களை ஏன் நடத்தக் கூடாது. இப்படி வெவ்வேறு சமயங்களில் உற்சவங்கள் நடைபெறுமானால் பொதுவாக எல்லாருக்கும் சௌகரியமாக இருக்கலாம். கிறிஸ்துமஸ் ஒழிவு என்பது நமது மனதில் ஆழ்ந்திருக்கும் எண்ணத்தைக் கொஞ்சம் விலக்குவதில் தவறில்லை என நம்புகிறேன்.

இந்த உற்சவங்களில் நான் கண்ட வேறொரு காரியமென்னவென்றால் பொதுவாகப் பாட்டுக் கச்சேரியைக் காட்டிலும் நாட்டியக் கச்சேரிதான் ஜனங்களை ஆகர்ஷித்தது. கொஞ்சகாலத்திற்கு முன்னால் பிரமுகர்களால் நிராகரிக்கப்பட்டுச் சோர்ந்து போய்க் கிடந்த இந்த நாட்டியக் கலை இப்போது இவ்வளவு ஆதரவு பெற்றிருப்பது போற்றத்தக்கதேயாம். இதற்கு முக்கிய காரணமான ஸ்ரீமதி ருக்மணி தேவியின் தொண்டு விலை மதிக்க முடியாதது. பிரமுகர்களும், கண்யமுள்ளவர்களும், குல ஸ்திரீகளும் இந்தக் கலையைக் கையாளலாம், ஆதரிக்கலாம், அனுபவிக்கலாம், அப்படிச் செய்வதால் ஒரு கெடுதலும் நேரிடாது, நன்மையே விளையும் என்ற உணர்ச்சியை எழுப்பின பெருமை அந்த மாதர் மணிக்கே உரியது. எல்லா நாட்டியக் கச்சேரிகளுக்கும் ஏராளமான கூட்டம் வந்தது. அதுவும் விசேஷமாகக் குமாரி கமலாவின் நாட்டியம் எல்லோராலும் போற்றப்பட்டது. எல்லா அம்சங்களுமமைந்த கலாப் பிரகடனமாக இருந்தது. அகாடமியில் நடந்த குமாரி கௌசல்யாவின் நடனமும் நன்றாகச் சோபித்தது.

* * *

இனி, கான்பரன்ஸ் நிகழ்ச்சிகளைச் சற்றுக் கவனிப்போம். அகாடமியார்கள் தினம் 12 மணிக்குச் சங்கீத சம்பந்தமான சர்ச்சைகளை வித்வான்கள் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். பற்பல விஷயங்களைக் குறித்துப் பிரசங்கங்களும் தீர்மானங்களும் செய்யப்பட்டன. ராக லக்ஷணங்களைக் குறித்து நடத்தும் சர்ச்சைகளும் முடிவு செய்யும் தீர்மானங்களும் எவ்வளவு தூரம் நடப்பில் கொண்டுவரப்படுகிறது என்கிற விஷயத்தில் கொஞ்சம் கூடசிரத்தையிருப்பது நலம் என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். ஆலத்தூர் சகோதரர்களுடைய பல்லவி விந்நியாசமும் அதற்குப் பாலக்காடு மணி அய்யர் மிருதங்கம் வாசித்ததும், என்றும் மறக்கக் கூடாத ஒரு ஒப்பிலா நிகழ்ச்சியெனக் கூறலாம்.

இந்த வருஷம் அகாடமி கான்பரன்ஸுக்கு வடக்கிந்தியாவிலிருந்து பல பெரியார்கள் விஜயம் செய்திருந்தார்கள். அவர்கள் நிரம்ப உற்சாகத்துடன் கான்பரன்ஸ் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்கள். இலக்ஷ்மணபுரி (Lucknow) சங்கீத கலாசாலைக்குத் தலைவரான பண்டித ரதன் ஜங்கர் (Pandit Ratan Jankar) செய்த ச்ருதி சம்பந்தமான உபந்யாசமும் ஸ்ரீமதி கீதா ஸாராபாயவர்கள் நடத்தின பிரசங்கமும் போற்றத் தக்கவை.

பைனார்ட்ஸ் ஸொஸைஸிட்டி (Fine Arts Society) கான்பரன்ஸ் நிகழ்ச்சிகள் காலையில் நடந்தன. ஆசிரியர் ஸாம்பமூர்த்தி யவர்களுடைய "தியாகராஜ ஸ்வாமிக்குப் பின்கால சங்கீதம்" என்ற பிரசங்கமும், ஸ்ரீ கிருஷ்ணய்யர், ரஞ்சன் முதலியவர்கள் நாட்டியக் கலையைப் பற்றிச் செய்த பிரசங்கங்களும் உயர்தரமாக இருந்தன. இந்தச் சங்கத்தார் தங்களுடைய கவனத்தைச் சங்கீதம், நாட்டியம் இவைகளில் மட்டும் கொடுக்காமல் மற்றக் கலைகளையும் ஆதரிக்கக் கடமைப்பட்டவர்கள் என்பதை மீண்டும் வற்புறுத்துகின்றேன்.

* * *

எல்லா இடங்களிலும் சங்கீதப் போட்டிகள் நடந்தன; ஸம்மானங்களும் கொடுக்கப்பட்டன. இந்தப் போட்டிகளின் உத்தேசமென்ன என்று நல்ல நிச்சயமான அபிப்பிராயங்கள் எல்லாப்போட்டிகளிலும் இருந்ததெனக் கூறமுடியாது.

சில போட்டிகளில் ஸாகித்தியத்திற்குப் பிராதான்யம் கொடுக்க வேண்டியிருக்கிறது. சிலவற்றில் லய கச்சிதத்திற்கு முதல் ஸ்தானம் உண்டு. அதற்குத் தக்கபடி மார்க்குகளிட வேண்டும். சில போட்டிகளில் சங்கீதத்தைத் தொழிலாகக் கொண்டு மேடைகளில் கச்சேரி நடத்தும் சிலரும் ஆமெச்சூர்களும் (Amateurs) கலந்து ஒன்றாகப் போட்டிக்கு வந்தார்கள். இது உசிதமல்ல என்று தோன்றுகிறது. ஆனாலந்தப் போட்டியில் ஆமெச்சூர்களே பிரைஸ்களைப்பெறநேர்ந்தது. இதிலிருந்து நாம் ஒருவிஷயம் அறியலாம். இசை என்பது எல்லா ஜீவராசிகளின் இதயத்திலுள்ள ஒரு தெய்வீக உணர்ச்சி. சங்கீத ஞானம் எல்லாருக்கும் உரியது. தங்கள் பிழைப்பிற்காகச் சிலர் சங்கீதத்தை உபயோகப்படுத்தி அதில் தேர்ச்சியடைந்திருந்தாலும் தங்களார்வத்தினால் சங்கீதத்தைக் கையாண்டு அதைப் போற்றி வருகிற அமெச்சூர்கள் எல்லாரும் அந்தத் தொழிலாளிகளுக்கு வித்தையில் கீழ்ப்பட்டவர்கள் என்று எண்ணலாகாது. பொதுவாகப் பார்க்கப்போனால் சங்கீதத்தைத் தொழிலாகக் கொண்டவர்கள் அதில் எப்போதும் உழைத்துக் கொண்டிருப்பதால் பழக்கமும் அனுபவமும் அடைகிறார்கள், ஆகையாலெப்போதும் அதில் தொடர்புள்ளவர்களாயிருந்து நல்ல அப்யாசத்தினாலுண்டாகும் தேர்ச்சியை அடைகிறார்கள். ஆனால் சில ஆமெச்சூர்களுக்குள்ள ஞானமும் தேர்ச்சியும் சில தொழில் வித்வான்களிடம்கூடக் காண்பதரிதாக இருக்கிறது. ஆகையால் எல்லா ஆமெச்சூர்களும் தொழில் செய்யும் வித்வான்களுக்கு ஞானத்திலும் சமர்த்திலும் தாழ்ந்தவர்களெனக் கூறமுடியாது.

* * *

அநேகமாகக் கச்சேரிகள் எல்லாம் சாயங்காலம் 5-மணிக்குமேல் 9 மணிக்குள்ளாகத்தான் நடந்தன. அகாடமியில் மட்டும் சில தினங்களில் மாலை 3-மணிக்கும் ராத்திரி 9-மணிக்கப்புறமும் கச்சேரிகள் நடந்தன. முந்திய வருஷங்களில் அநேகமாய் எல்லா நாட்களிலும் மத்யான 3-மணிக் கச்சேரிகள் இருந்தன. இந்த வருஷம் சில நாள்களில்தான் இந்தக் கச்சேரிகள் ஏற்பாடு பண்ணப்பட்டிருந்தன. சாதாரணமாக இளம் வித்வான்கள்தான் இக்கச்சேரிகளுக்கு எடுக்கப்படுவார்கள். இந்த இளம் வித்வான்களில் பலர் இப்போது பெரிய வித்வான்களாய்விட்ட காரணத்தாலோ, அல்லது "இளம்" வித்வான்களெனக் கருதப்பட, பல பாடகர்களுக்குப் பிரியமில்லாததாலோ இந்த வருடம் மாலை 3-மணிக் கச்சேரிகள் அதிகமில்லை.

இந்த மாலைக் கச்சேரிகளைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டியிருக்கிறது. இதற்கு அதிகமாக யாரும் வருவதில்லை. அதோடு, அது முடியும் சமயத்தில் அடுத்த "பெரிய" கச்சேரிக்கு வரும் ஜனங்கள் கூட்டம் கூட்டமாக இரைந்து பேசிக்கொண்டு வருகிறார்கள். வந்து உட்கார்ந்த பின்னும் பேசிக்கொண்டிருக்கிறார்கள், கச்சேரியைக் கவனிப்பதில்லை. அந்த இளம் பாடகர்களுக்கு எப்படியிருக்கும் என்று நான் கூற வேண்டியதில்லை. இதைவிட அவர்களை அவமதிக்க வேறு வழியில்லையென்றே சொல்லலாம். சில இளம் வித்வான்கள் எப்படியாவது ஒரு மேடையில் அமர்ந்து கச்சேரி பண்ணினால் போதும் என்கிற ஆவலினால் இந்த அவமதிப்புக்குட்பட முன் வந்தாலும் அதற்கு இடம் கொடுக்காததே நலம். அகாடமியார் இந்த விஷயத்தில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். இந்த மாலைக் கச்சேரிகளையே நிறுத்துவது உசிதம். ஒரு வருஷத்தில் 52 வாரங்களிருக்கின்றன. அவைகளில் இந்த இளம் வித்வான்களை ஆதரிக்கச் சௌகரியமுண்டு. ஒரு பெரிய வித்வானுடைய கச்சேரிக்கு முந்தி இளம் வித்வானைக் காலி நாற்காலிகளுக்கும், சந்தையிரைச்சலுக்கும் பாடச்சொல்லி அவரை அவமானப்படுத்துவது சரியல்ல.

சாயந்திரக் கச்சேரிகளுக்கு வருஷா வருஷம் அதே பெரிய வித்வான்களைத் தான் திரும்பவும் திரும்பவும் ஏற்பாடு பண்ண வேண்டிய நிர்ப்பந்தமென்ன? ஏதாவது ஒரு முறைப்படி சிலரைமட்டும் ஏற்பாடு பண்ணினால் பெரிய கெடுதலொன்றும் வந்துவிடாது. சில இளம் வித்வான்களையும் கலந்து கச்சேரிகள் ஏற்பாடு செய்யலாம். பண வசூலை

மட்டும் கவனிக்கிற வழக்கம் அகாடமியை இன்னும் பாதிக்கவில்லை என நம்புகிறேன். அதுபோலவே சங்கீத சபா மேடைகளில் அதிகமாகத் தோன்றாத பெரிய வித்வான்களை ஆதரித்து, அந்த வித்வான்களுடைய பாண்டித்தியத்தை ஜனங்கள் அனுபவிக்கச் சௌகரியம் கொடுக்க வேண்டிய பொறுப்பும் அகாடமிக்கு உண்டு. இந்தக் கச்சேரிகளுக்கு டிக்கட்டுகள் இருக்க வேண்டியதில்லை, ஜனங்கள் சுலபமாக வந்து கேட்க வழிகள் ஏற்படுத்த வேண்டும்.

* * *

வழக்கம் போல் அகாடமியில் இந்த வருஷமும் ஸதஸ் கூட்டி வித்வான் ராஜமாணிக்கம் பிள்ளையவர்களுக்கு சங்கீத கலாநிதி என்ற பட்டமளிக்கப் பட்டது. அதுபோலவே "பைனார்ட்ஸ் ஸொஸைட்டி"யில் அக்ராசனம் வகித்த பேராசிரியர் ஆர். ஸ்ரீனிவாஸனுக்கும் சங்கீதகலா சிகாமணி என்ற பட்டமுமளிக்கப் பட்டது. அகாடமியில் பிரதம நீதிபதி ஸ்ரீ ராஜமன்னார் அவர்கள் அதற்குத் தலைமை வகித்தார். பைனார்ட்ஸ் ஸொஸைட்டியில் கனம் மேயர் ராமஸ்வாமி நாயுடு அவர்கள் அந்தப் பொறுப்பை நிர்வாகித்தார். ஸ்ரீ ராஜமன்னார் அவர்களுடைய பிரசங்கம் மிகவும் நன்றாக இருந்தது. அநேக நுட்பமான விஷயங்களை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டினார். சங்கீத அபிமானிகள் ஒவ்வொருவரும் அவர் கூறிய அருமையான விஷயங்களை மேற்கொண்டு அவைகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டு வந்தால் இப்போது நம்மிடையில் காணும் பல சச்சரவுகள் தாமாகவே மறைந்து விடும்.

ஜோதிஷ மகுட வர்த்தனர்.

9-5-38ல் சென்னை ஜோதிஷர் மகாநாட்டின் சபைத்தலைவர்

கேள்வி 4-க்கு ரூ2, ஒரு வருட வாரப் பலன் ரூ. 9.

இந்து மன்னர் சமஸ்தான 25-வது தலைமுறை ஜோதிஷர், பீமகவி, சுகர் புஜண்டர், சாஸ்திர நிபுணர், ஜாதகம் கணிக்க ரூ. 3 ஒரு வருஷத்திற்கு ஆதாயம் விரயம், குடும்பம், தொழில், கடன், ஆரோக்கியம், காதல், சத்ரு, பிரயாணம், சுபம், அதிஷ்டம்:- மாதம், நாள், திக்கு, ரத்னம், நெம்பர், வேலை, உலோகம், புஷ்பம், லாட்டரி, ரேஸ், ஒவ்வொரு காரியம் சித்திபெறும். சந்திரனின் நாட்களும், மணிக்கு மணி பலன் அட்டவணையுடன் மற்றும், பலாபலன்கள் மாதவாரியாக எழுத ரூ. 5 ஓர் திசைக்கு புத்திபலன் ரூ. 5. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

புரபஸர் N. V. சுப்ரமணியம், J. M., J. A. மிராஸ்தார்

நெ. 10, ஜோதிஷ ஆசிரமம், வாலாஜாபாத், P. O., S. I. R., (சென்னை.)

ஜகத்ரக்ஷக ஸ்ரீ ஷண்முக யந்திரம்

12,58,400 ஜனங்கள் போற்றுவது

நவநாயகரின் கொடுமை ஒழியும். ஜன வசீகரம், லாட்டரி பந்தயம், வியாபாரம், உத்தியோகம், பலன் தரும். பேய், பிசாசு, துர்சொப்பனம் நீங்கும். விவகாரம் வெற்றி, குடும்ப ஒற்றுமை, புத்திர மகிழ்வும், கரும வியாதிகள் குணமாகும். சத்ரு பணிகுவர், தரித்திரம் விலகிவிடும். உண்மையில் (ஸ்திரீ புருஷர்) காதல் வெற்றி தரும். ஸ்திரீகள் அணிந்தால் மேல் சொல்லிய பலன் தருவதும் சூதக வலி உற்பவ சின்னங்கள் தீரும். குழந்தைகள் அணிந்தால் சகடை, பாலாரிஷ்டம், பக்ஷிதோஷம் முதலிய 4,448 தோஷங்கள் தீரும். ரூ. 3-0-0 திக்கு விஜயம் அஷ்ட ஐஸ்வரிய ஜெயவசீகர் சத்ரு சம்ஹாரி. வெற்றி வெற்றி வெற்றிவேல் ரூ. 9

மாந்திரீக மருத்துவ ஆபீஸ், (A)

வாலாஜாபாத் P. O., S. I. R., சென்னை.

இந்த வருஷம் அகாடமி கான்பரன்ஸோடு ஒத்துழைத்த "International Society for Contemporary Music, (Indian Section)" என்கிற சங்கத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல வேண்டும்.

சுமார் 22 வருஷங்களுக்கு முன்னுல் ஸால்ஸ்பர்க் (Salzburg) என்ற நகரில் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு சங்கம். அப்போது அதன் முக்கிய உத்தேசம் என்னஎன்ருல், அநேக இளம் வாக்கேயக்காரர்கள் ஐரோப்பாவில் தோன்றிக் கொண்டிருந்தும் அவர்களுடைய யோக்கியதைக்குத் தக்கபடி அவர்களுக்கு ஆதரவு கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தி முன்னுக்குக் கொண்டு வருவதற்கு வழியொன்று மில்லாததால் அவர்கள் மனமுடைந்து போவார்கள், அப்படி விடலாகாது, யோக்யதையுள்ளவர்களுடைய திறத்தைப்போற்றி அவர்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்கிற நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்டது. பிறகு அந்த நோக்கம் விரிவடைந்து இந்த உலகில் பற்பல நாடுகளிலுள்ள சங்கீதக் கலைகளைக் கையாளும் கலைஞர்களுக்குள் பரஸ்பர சிநேகமும், ஒரு நாட்டுக்கலைஞர்கள் வேறு நாடுகளில் நடைபெறும் கலைகளுடைய தன்மையையும் நோக்கத்தையும் அறியச் சௌகர்யமும் ஏற்படுத்த வேண்டுமென்கிற உத்தேசமும் அங்கீகரிக்கப்பட்டது. இந்தியாவில் இதனுடைய கிளை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது; அதன் தலைமை ஸ்தானம் அஹமதாபாதில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது, அதற்கு உஸ்தாத் பியாஸ்கான் (Ustad Faiyaz Khan) அவர்களும் வித்வான் செம்மங்குடி ஸ்ரீனிவாஸய்யரவர்களும் தலைவர்கள். நிர்வாகக் கமிட்டிக்குத்தலைவர் பண்டித ரதன் ஜங்கர் (Pandit Ratan Jankar) அவர்கள். சென்னையிலும் அதன் கிளை ஒன்று நிர்மாணிக்க ஏற்பாடுநடந்து கொண்டிருக்கிறது. இந்திய கிளைச் சங்கத்தின் முக்கிய நோக்கம் வருஷம் தோறும், இந்தியாவின் பற்பல பாகங்களிலிருந்து வித்வான்களை ஓரிடத்திற் சேர்த்து, ஒருபெரிய சங்கீதவிழா கொண்டாடுவது என்பதுதான். அகில உலக சங்கீதத்தின் விழாக்களுக்கும் இங்கிருந்து வித்வான்களை அனுப்புகிற உத்தேசமும் உண்டு.

* * *

புதிய வாக்கேயக்காரர்களை ஆதரிப்பதில் இந்தச் சங்கத்திற்குள்ள ஆர்வத்திலிருந்து நாம் கிரஹிக்க வேண்டிய சில அம்சங்களுண்டு. பொதுவாக நம்மிடையில் ஒரு வருந்தத் தக்க மனோநிலை பரவி நிற்கிறது. ஏதாவது ஒரு புதிய சாகித்ய கர்த்தாவோ சாகித்யமோ தோன்றினுல் முதலில் அவர்களிடத்தில் வெறுப்பும் ஒரு அலக்ஷியமும்தான் நமது சங்கீத விமர்சகர்களுக்கு ஏற்படுவது சகஜம். "என்ன ஸார், திரிமூர்த்திகளின் கிருதிகள் இருக்கும்போது வேறு கிருதிகளெதற்கு, அப்படி உருப்படிகள் செய்வது என்ன துணிவு ஸார்?" என்று சொல்வதை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். அந்தப் புதுப் பாட்டுகளைக் காதுகொண்டு கேட்காமலே அவைகளை இகழ்ந்துபேசித்தள்ளி விடுவது வழக்கம். ஒரு தியாகராஜ ஸ்வாமி அவதாரம் செய்தார், அவர் மாதிரிதான் எல்லோரும் என்று யார் சொல்லுவார்கள். தற்கால வாக்கேயக்காரர்களில் யாராவது தியாகராஜ ஸ்வாமியோடு போட்டிபோடுகிருர்களா அல்லது அவரைவிடத் தாங்கள் பெரியவர்கள் என்று சொல்லுகிருர்களா? அப்படிச் சொன்னுல் அவர்களைப் பயித்தியஆஸ்பத்திரிக்கு அனுப்ப ஆலோசிக்கலாம். ஒருவர் ஸாஹித்யம் எழுதுவது வேருெருவர் அதற்கு மெட்டு அமைப்பது என்பது உசிதமல்ல என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனுல் யோக்கியதையுள்ள வாக்கேயக்காரர்கள் ஏன் தங்கள் திறத்தைக் காட்டலாகாது? உலகம் பலவிதம்.

"லோகோ பின்னருசி:" அதாவது பற்பல ஜனங்களின் ருசி பற்பல விதங்களாகத்தானிருக்கும். எதிலும் பல தினுசுகள், பலதரங்களுண்டு. நகைகளில் பலதரம், ஆடையில் பலவகை, புத்தியில் பல படிகள், உணர்ச்சியில் பல விதம், இப்படிப் பலவகையானது உலகமே. அவரவர்கள் அவரவர்களுக்குத் தக்கபடி அனுபவிக்கிருர்கள். பெரியார்

களின் பாடல்களிலேயே எல்லாம் ஒன்று போன்றது என்று கூற முடியுமா? அதிலேயே பல தினுசுகள் இருக்கின்றன. அவரவர்களுடைய ஞானத்திற்கும் பக்குவத்திற்கும் தக்கபடி சங்கீத உருப்படிகள் செய்யலாம். நல்லதாயிருப்பவைகள் போற்றப்படும். மற்றவைகள் தாமாகவே மறையும். நாமதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. குணமுள்ளவைகள் தான் நிலைக்கும். எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ, எந்தக் குடத்தில் எந்த விளக்கு எரிந்து கொண்டிருக்கிறதோ, யார் கண்டார்கள். நமது சங்கீத திரிமூர்த்திகளைக் குறித்து நாம் அபிமானத்துடனும் பெருமையுடனும் புகழ்ந்து பேசுகிறோம், அவர்கள் அவதார புருஷர்கள் தான். ஆனாலும் அவர்களையும் சங்கீத கவனங்களில் வெல்லக்கூடிய ஒரு மஹா புருஷன் இனி இவ்வுலகில் தோன்றப்போவதில்லையென்று யாரால் தைரியமாகக் கூற முடியும்? எத்தனையோ விசித்திரங்களை இவ்வுலகம் கண்டிருக்கிறது, இனி காணவும் போகிறது. எதற்கும் நமது மனதைச் சுருங்க விடாமல் விசாலமாக வைத்திருப்பதே நலம்.

தேவாம்ருதம்
"பீம-வீர்"
சாஸ்வத சக்தியை
கொடுக்கும்

देवामृतम
"भीम-वीर"
शाश्वत शक्ति
देनेवाला है

RESTORES MAN HOOD

Nectar of Life

MAKES MEN YOUNG

"BHEEMA—VEER"

''பீம-வீர்'' பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகைச் சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தைச் சுத்தி செய்து, சாசுவதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வீரிய சக்தியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம்.

40நாள் மருந்து ரூ. 3-12-0. பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

ஜமதக்னி ஔஷதாலயா, 31/2, வடக்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை 4.

ஆண் பெண் உறவு

யோகி சுத்தானந்த பாரதியார்.

பெண்ணின்றி ஆணில்லை;
ஆணின்றிப் பெண்ணில்லை
எண்ணிருவர் சேர்ந்தே இகம்.

நவநாகரிக நங்கை ஒருத்தி—கோண வகுடு முதல் உதட்டுச் சாயம் வரையில் 'மேகப்' கன ஜோர். அபார மூளை—அவள் படிக்காத நாவல் இல்லை. சாய்வு நாற்காலியும் நாவலும் அவளுடைய உறுப்புக்களாகவே அமைந்தன. படிப்பதில் அவளுக்கிருந்த ஆர்வத்தால் வள்ளுவர் குறளுக்குக்கூடக் குயுக்தி அர்த்தங்கள் செய்தாள்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள
கற்பு எனும்
திண்மை உண்டாகப் பெறின்

கற்பு என்றால் கல்வி; எப்போதும் படித்துக்கொண்டே சாய்வு நாற்காலியில் திண்மையா யிருக்க வேண்டும். அதுவே சிறந்த பெண்மை என்பது அவள் விளக்கம். படித்து அலுத்த வேலையில் என்ன செய்வது? மோட்டாரில் ஜம் என்று ஊர் சுற்றுவது, மட்டையடிப்பது (பாட்மிடன்), சினிமா பார்ப்பது, நண்பருடன் வம்படிப்பது, பிறகு வீட்டிற்கு வந்து சாப்பிட்டுப் படுப்பது.

இந்த நவநாகரிக சுதந்திரப் பெண் மணியை, "அம்மா, நாளை உனக்குக் கலியாணம்; ஆனால் கணவனுக்குச் சமைத்துப் போட வேண்டுமே. சமையல் தெரியுமா?" என்றொருவர் கேட்டு வைத்தார். மூக்குக் கண்ணாடிப் பார்வையில் இரத்தம் கொதித்தது—மங்கையின் மலர்நகை மறைந்தது. கோபம் சாயத்தைப் பீறிக்கொண்டு பயங்கரமாக வந்தது.

என்ன......நான்......நான் சமைப்பதா?

பிறகுயாரம்மா சமைப்பது? பெண்கள்தாமே அடுப்பு மூட்டிச் சமைத்து அமுதூட்ட வேண்டும்.........

இத்தனை நாள் பெண்கள் சமைத்தது போதாதோ? எங்களை நீங்கள் அடுப்புப் புகையில் வாட்டியது போதாதா? எங்களை அடுப்பங்கரை அடிமையாக்கினது போதாதா? இன்னுமா எங்கள் சுயேச்சையைப் பறிமுதல் செய்வீர்கள்? நேற்று வரையில் நாங்கள் சமைத்தோம்......... நீங்கள் வெளியே ஜோராகச் சென்று வந்து என்னடி சமையலானதா என்று அதிகாரம் செய்தீர்கள். இனி ஆண்கள் சமைக்க வேண்டும். பெண்கள் வெளியே உலாவி வர வேண்டும்....என்ன ஆனதா சமையல் என்றதும் "இதோ அம்மணீ என்று பரிமாற வேண்டும்" என்று ஒரு போடுபோட்டாள் நவநாகரிகை.

"அம்மா, அப்படியானால் நேற்று வரையில் பெண்களே பிரசவித்துக் கொண்டிருந்தார்கள். அந்த உபத்திரவத்தையும் ஆண்களுக்கு மாற்றிவிடுவீர்கள் போலிருக்கிறதே" என்றார் ஆண்பிள்ளை.

"அப்படி இயற்கை செய்தால் எங்களுக்குக் கொள்ளைச் சம்மதம்....நாங்கள் படும் இடுப்பு வலியை அவர்களும் பட்டாலே ஆண்களுக்கு உணர்ச்சி வரும்"...என்று சொல்லுகிறாள் சுதந்திர உல்லாசி.

உடையில்கூட ஆண்களைப் பெண்கள் அபிநயிக்கிறார்கள். ஷர்டும் ஷார்டும் போட்டுக்கொண்டு ஸைக்கிள் ஏறிச் செல்லும் பெண்களை நகரங்களில் காண்கிறோம். பெண்களை ஆண்கள் பின்பற்றி இன்னும் புடவை யணியவில்லை. அந்த மட்டில் ஆண்களுக்கு வெற்றிதான். முகச்சாயத்தின் மகிமையாலும் முகக்ஷவரத்தின் மகிமையாலும் சில பெண்களுக்கு உதட்டில் கால் அங்குலம் மீசைகூட ஜாடையாக முளைக்கிறது.

பெண்மை என்றால் மென்மை, அழகு, கற்பின் எழில், கருணை, அன்பு என்பர் மேலோர். பெண்கள் போர்க்களத்தில்

துப்பாக்கி பிடித்தால் மென்மை எப்படி நிற்கும்? பெண்மை ஆண்களை அபிநயித்தால்...............?

"யத் பாவம் தத் பவதி" (நினைத்தபடி ஆகிறாய்) என்ற வேதாந்த வாக்குத் தான் நிறைவேறும்.

பெண்மை எப்படி யிருக்கவேண்டுமோ அப்படி இருக்க வேண்டும்; ஆண்மையும் மேற்படியே. இருவருக்கும் உள்ள சமவுறவு சூரியனுக்கும் கதிர்களுக்கும் உள்ள சமவாய சம்பந்தமாகும். ஆணறமும் பெண்ணறமும் பூரணமாயிருந்தாலே உலகம் இன்புறும். இன்றேல் காப்பியடித்த கவிபோலும், செயற்கை முறைக் குழந்தைபோலும் இயற்கைக்கு விரோதமாக வாழ்க்கை விகாரமாகித் துன்புறும். இருவருக்கும் ஆத்மா ஒன்று, உயிர் ஒன்று, பஞ்சபூத உடல் ஒன்று. இரண்டு உடல்களும் தோலும் எலும்பும் சதையும் நரம்பும் நாடிநாளங்களும் கூடியவையே. ஆனால் உடல் அமைப்புகளில், உணர்ச்சிகளில் அந்தக்கரணங்களில் இயற்கைக் காரியங்களில் வேறுபாடுண்டு. பெண்கள் செய்யக்கூடிய கடமைகள் சில அவர்களுக்கே உரியவை. அவற்றில் ஆண்கள் புகுந்தால் தோல்வி தான். ஆண்கள் செய்யும் சிறப்பான கடமைகள் சில உண்டு. அவற்றில் பெண்கள் போட்டி போட்டால் வாழ்வே சிக்கலாக முடியும். அவரவர் கடமைகளை நிறைவேற்றுவதில் இருவருக்கும் சுயேச்சை வேண்டும். இருவருக்கும் பொதுக் கடமைகள் உண்டு. அவற்றில் இருவரும் சமமாகப் பங்கு கொள்ளத் தான்வேண்டும். பெண்ணுக்கு இல்லாள், மனைவி என்பர். ஆணை இல்லான், மனைவன் என்று சொல்லுவதில்லை. வீட்டை ஆளும் முழுவுரிமையும் நம்மவர் பெண்களுக்கே கொடுத்து விட்டனர்.

பொங்கல் திருநாளில்

எமது மங்கள வாழ்த்துக்கள் தங்களுக்கு உரித்தாகுக!

தாங்கள் எங்களிடம் கொண்டுள்ள அபிமான, அன்பினால்
தாங்களும் தங்கள் நண்பர்களும் காட்டிய
பேராதரவிற்கு எமது நன்றி

கல்யாண காலத்தில்

எங்களிடம் ஏராளமாக கொள்ளேகாலப்பட்டில்
நேரில் சொந்த தறியில் தயார் செய்துள்ள
பட்டுச்சேலைகளை தாங்கள் பார்வையிட்டு
முன்போல் ஆதரவளிக்கக் கோருகின்றோம்

கொள்ளேகால் ஸில்க் ஹவுஸ்

99 பெரிய தெரு :: கும்பகோணம்.

ஆணைப் பூரணம் ஆக்கும் அருளே
உண்மைப் பெண்ணென் றுரைத்திட
லாமே.

அழகின் காந்தம், அன்பின் வசிகரம்
சித்தம் குளிர முத்துத் திருநகை
மயிலெனச் சாயல் குயிலெனப் பாட்டு
கிளியெனப் பேச்சு, கிளர்ச்சி
கொள்ளும்
அமுதச் செஞ்சொல், அளவிலாப்
பொறுமை
கணவனைப் பேணும் கற்பின்
அற்புதம்
அகமலர் மகிழ முகமலர்ப் பொலிவு
குழந்தைகளாலே குலம்வளர் மாட்சி
உரிய மணாளனைப் பிரியா நேயம்
பெற்ற மக்களைப் பேணும் கருணை
ஆஹா பெண்ணின் அருமையென்
சொல்வேன்
மண்ணுக் கேற்ற மரத்தைப் போலே
பெண்ணுக் கேற்ற பெருமையாம்
வீடே.
மென்மை உடலின்பம் மேதக்க வாழ்
வெல்லாம்
பெண்மை உவந்தளிக்கும் பேறு.

மெல்லிய கலைகளில், உடலுக்கும் மனதிற்கும் இன்பமளிக்கும் கலைகளில் பெண்ணுக்குச் சமானம் பெண்ணே. இசை, நடனம், அணிவேலை முதலியவற்றில் பெண்களே சிறந்து விளங்குகிறார்கள். கற்புள்ள பெண் குடித்தனம் செய்யும் வீட்டில் திருமகள் வசிப்பாள். அவள் இருக்கும் வீட்டில் இல்லை என்பதே இல்லை. இவ்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை என்றாள் ஔவை.

இல்லதென் இல்லவள் மாண்பானல்?
உள்ளதென்
இல்லவள் மாணாக்கடை?

என்பது பொய்யாமொழி. மாண் மனைவி மாணா மனைவி என்று இரண்டு வகையாகச் சொன்னார் வள்ளுவர்.

மனைத்தக்க மாண்புடையள் ஆகித்
தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை

என்ற குறளில் மாண்புடைய மனைவியின் இலக்கணம் உள்ளது. மனைவி வீட்டிற்கே நாயகியாய், அதை நன்றாக நிர்வகிக்க வேண்டும். அப்படி நிர்வகிப்பதில் தனது கணவனின் வளத்திற்கேற்றபடியே கட்டுச்செட்டாகக் குடித்தனம் செய்யவேண்டும். டாம், டூம், க்ரீம் என்று வகை தெரியாமல் டாம்பீகச்செலவு செய்யக்கூடாது. நகை நட்டுகளுக்கும் இந்திரவாளிக்கும் ஆசைப்படாமல், உண்ண உடுக்கப் போதிய மட்டும் செலவு செய்து, கொஞ்சம் மிச்சம் வைத்திருக்க வேண்டும்.

பகட்டணி கொள்ளாள் பதிக்கணி
யாவாள்
அகத்திற்கு வாய்ந்த திரு வாம்

புடவை ரவிக்கை மஞ்சள் குங்குமம் மாங்கல்யம் இவையே மாதருக்கு நல்லணி. மாதரின் உயிர் வீட்டை நிர்வகிப்பதில் இருக்க வேண்டும். அது போக மீதி நேரத்தை நாட்டுப்பணிக்குச் செலவிடலாம். ரேடியம் கரி ஸோர்போனில் ஸயன்ஸ் ஆராய்ந்து கொண்டே தனது குடும்பத்தையும் நன்றாகக் கவனித்தாள். கணவனை மிக மிக அன்புடன் நேசித்தாள். இருவருக்கும் எந்த வகையிலும் மனத்தாங்கல் இருந்ததில்லை. அதேமாதிரி விஜயலக்ஷ்மி பண்டித் தன் மக்களையும் கவனித்துக்கொண்டு நாட்டூழியமும் செய்கிறாள். நமது தமிழகத்தில் வை. மு. கோதைநாயகி பத்தினி தர்மத்தை நிறைவேற்றி, குழந்தைகளையும் நன்றாகப் பராமரித்து, மோகினி பத்திரிகை நடத்திக்கொண்டு, சமூக சேவையும் நன்றாகச் செய்கிறாள். பெண்களுக்கு நமது நாட்டில் உயர்ந்த இடம் தந்திருக்கிறார்கள்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள
கற்பெனும்
திண்மையுண் டாகப் பெறின்

கற்புள்ள மாதராலேதான் மழை கூடப் பெய்கிறது என்று நமது சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. பெண்மைக்குஅத்தனை சிறப்பை நாம் தந்திருக்கிறோம். ஆனால் காலக்கேட்டினால் இடையே சில மூடப் பழக்கங்கள் புகுந்தன. கிழட்டுத்தாலி, விதவைக்கோலம், வரதட்சிணை முதலி

யவை கண்டிக்கத்தக்கன. இவ்வ மறைந்து வருகின்றன, மறைந்தே ஒழியும். இன்று பெண்கள் ஆண்களுக்கு நிகராகக் கல்வி கற்கவோ, உத்தியோகம் பார்க்கவோ, தலைநிமிர்ந்து நடக்கவோ எவ்விதமான தடையும் இல்லை. ஆனால் பெண்கள் பெண்ணுக்குரிய கடமைகளைப் பலி வைத்து, ஆணுக்குரிய கடமைகளில் போட்டி போடுதல் அமைதிக்கு நன்றில்லை. நாகரிகம் உரிமை என்ற பெயரால் ஒரு நங்கை கிளம்புகிறாள். கணவன் நூறு ரூபாய் சம்பளக்காரன், இவள் மினுக்குச் சாயத்திற்கே முப்பது ரூபாய் செலவிடுகிறாள். பகட்டணிகளுக்கும் மோட்டார் ரிக்ஷா ஏறி ஊர் சுற்றவும் கண்காட்சிகள் பார்க்கவும் ஏராளமாகச் செலவிடுகிறாள். கணவன் புத்தி சொன்னால், "இந்தத் தரித்திரத்திற்கு வாழ்க்கைப்பட்டேனே" என்று பிணங்கிக் கிளம்புகிறாள். அல்லது அவள் காதல்கதை விபரீதமாக முடிகிறது. அவள் வீட்டையே கவனிக்காமல், குழந்தைகளைக் கணவன் மடியில் அமர்த்தி விட்டு ஊர் சுற்றக் கிளம்பினால், அது பத்தினி தர்மம் ஆகாது. கணவனுக்கும் மனைவிக்கும் எல்லாவிதத்திலும் மனப்பொருத்தம் வேண்டும். ஒருவர் இன்ப துன்பங்களை மற்றொருவர் உணர்ந்து நடத்தல் வேண்டும்.

கண்ணொத்த வீட்டிற் கனதன மங்கலமே
மண்ணொத்த வான்பயிரின் வாழ்வு.

நிலமும் பயிரும் சேர்ந்ததே வளம். மனைவியும் கணவனும் ஒத்தே இல்லறம் நல்லறமாகும்.

கணவன் கடமை பெரிது. ஆண்மையின் பொறுப்பு அதிகம். ஆடவன் ஓடியாடிச் சம்பாதித்து ஜீவாதாரம் தேடி, மனைவி மக்களைக் காக்கிறான். இந்தக் காலம் இதில் பெண்களும் ஈடுபடலாம். அவர்களும் இசை நாட்டியம் அரங்கம் மருத்துவம் முதலிய கலைகளைக் கற்று, வேண்டிய பொருள் தேடிக் குடும்பத்தைப் பாதுகாக்கலாம். ஆடவன் கடமைகள் பல.

இல்லா ளுடனே இணங்கி வீட்டை
நடத்து கின்ற நாயகன் அவனே
வாழ்வுப் பயிரின் வளநீர் அவனே
வீட்டறம் காக்கும் வீரன் அவனே.
ஊருக்கு உதவும் ஒருதொழி லாலே
உண்ண உடுக்க உழைத்துக் கொணர்ந்து
மனைவி மக்களை மனமுறப் பேணி,
இங்கித மறிந்து நன்கடன் ஆற்றி,
கொண்ட மனைவியைக் குலசக்தி யாகப்
போற்றும் தீரனே புருடனா வானே
ஒருவரை யொருவர் திருவுறத் திருத்தி
இருவரும் பூரணம் எய்தலே வாழ்வாம்.

பெண் மனம் கசங்காமல் ஆண்கள் அவளை முகமலர்ச்சியுடன் வைத்திருக்க வேண்டும். சும்மா புகையிலும் மூலையிலும் அடைக்காமல் பெண்கள் காற்றாட உலாவிவரச் செய்யவேண்டும். காலை ஏழரை, மாலை ஐந்தரையிலிருந்து ஆறரையில் பெண்கள் உடற் பயிற்சிக்கானவற்றைச் செய்யலாம் அல்லது சதிபதிகள் காற்றாட உலாவி வரலாம். நல்ல ஆடல்களில் சேரலாம். அறிவையும் ஒழுக்கத்தையும் வளர்க்கும் பிரசங்கம் நாடகங்களுக்கு மனைவியைக் கணவன் தன்னுடன் அழைத்துச் செல்ல வேண்டும். உடல் நலத்திற்கும், மன நலத்திற்கும் ஆகிய உரிமைகளைப் பேண வேண்டும். உடலையும் மனதையும் குடும்ப வாழ்வையும் சின்னா பின்னமாக்கிச் சிதைக்கும் காரியங்களை அறவே நீக்கவேண்டும்.

இருவரின் ஒருமையே இல்லற உண்மை
இருவரின் இன்பமே இல்லறப் பெருக்கம்
ஆணிற் பெண்ணும் பெண்ணில் ஆணும்
பூணிற் பொன்போல் பொருந்துவ தாமே.

"அந்தக் கிராதகன் வீட்டில் இனி என் நிழல் படுமா; அவன் முகத்தில் நான் விழிப்பேனா? நீ என்னதான் சொல்லு. விட்ட உறவு விட்டதுதான்."

"அப்படியெல்லாம் சொல்லாதேங்கோ. நீங்கள் பெரியவாளாயிருந்து கொண்டு இப்படியெல்லாம் அச்சான்யமாய்ப் பேசலாமா?"

"ஆமாம்! அவன் மட்டும்..........."

"என்னமோ சிறிசு. தெரியாத்தனம். எடுப்பார் கைக் குழந்தை. எய்தவன் இருக்க அம்பை நொந்தால் என்ன பயன்?"

"எடுப்பார் கைக்குழந்தையானால் என் சொற்படி மட்டும்தான் நடக்கக்கூடாதா? அடுத்த வீட்டுக்காரனுக்குத்தான் கரிசனம் ஜாஸ்தி போலிருக்கு. அவன் இவனைத் தாங்கினானே குழந்தைப் பருவம் முதல். என் சொற்ப வரும்படியில் வயிற்றையொடுக்கி வாயையொடுக்கி இவனைப் படிக்க வைத்து ஆளாக்கி விட்டதெல்லாம் நானா, அல்லது அடுத்தவீட்டு அய்யாசாமியா கேட்கிறேன்? பீ. ஏ. பட்டம் பெற்றும் இதை அறிந்து கொள்ள முடியாத முட்டாளாயிருந்தால் படிப்பதில் என்ன பிரயோஜனம்? மூத்த சகோதரன் பிதாவுக்குச் சமானம் என்பது சாஸ்திரம். அது கிடக்கட்டும், கொஞ்சமாவது நன்றிவேண்டாமா?

"என்னமோ போனது போகட்டும்; சிறியோர் செய்த சிறு பிழையெல்லாம் பெரியோராயின் பொறுப்பது கடனே என்பது நீதி. ஒன்றாயிருந்த குடும்பம் பிரிந்து இரண்டு மூன்று வருடங்கள் ஓடி விட்டன. பார்க்கப் பரிதாபமாயிருக்கிறது, நிலத்தை விற்று, நீச்சைவிற்று, சின்னதும் சிறிசுமாய்க் குழந்தைகளை வைத்துக்கொண்டு அவர் கஷ்டப்படுகிறதைப்பார்க்க எனக்கு சகிக்கச்வில்லை, நாளை சங்கராந்தி. அந்த நாளிலே பிரிந்தது ஒன்று சேர்ந்து பொங்கட்டும். இன்றைக்கே உங்கள் தம்பியை, மீனாட்சி குழந்தைகள் சகிதம் அழைத்து வந்து விடுங்கள்."

"நன்றாய்ச் சொன்னாய்! சிறியோர் பெரும் பிழை செய்தால் பொறுத்துக் கொள்ளும்படி எந்தச் சாஸ்திரமும் சொல்லவில்லை. 'மித்ரத்ரோஹி கிருதக்னச்ச, யச்ச விசுவாசகாதக: த்ரய ஸ்தே, நரகம், யாந்தி, யாவச்சந்த்ரதிவாகரௌ." செய்ந்நன்றி கொன்றவன் எதோடு சேத்தி?"

"அதென்னவோ, சொந்த தம்பியிடத்தில் நீங்கள் இவ்வளவு விரோதம் பாராட்டலாகாது. வயிற்றில் பிறந்தாலென்ன, விலாவில் பிறந்தாலென்ன? சண்டை மூண்ட சந்தர்ப்பத்திலே தமையனைவிட்டு நீங்கி எதிர்க்கட்சி சென்ற விபீஷணன்கூட இராவணன் இரணகளத்திலே இறந்துபட்டதும்,

"உடன் பிறப்பென்னும் அன்பால்
இளைத்துவந்தடியில் வீழ்ந்தான்
இராவணற் கிளைய காளை"

என்று கவி கதறுகிறார் என்பதாக அன்று படித்திர்களே. உடன் பிறப்பென்னும் அன்புக்கு ஊனமேது? இன்று மறைந்திருக்கலாம் நீறுபூத்த நெருப்புப்போல நாளை வெளிப்பட்டே தீரும். நாலுபேர் சொல்லி ஏசுவதற்கு முன் நாமே முந்திக்கொள்வது நலமல்லவா? பாவம்! மீனாட்சி துரும்பாய் இளைத்துவிட்டாள். வேளா வேளையில் சோறிலாமல் வயிறும் குழந்தையுமாய்......"

விசாலாட்சி இன்னும் சொல்லிக்கொண்டே இருந்திருப்பாள். ஆனால் விசுவநாதய்யர் எழுந்து வயலைப்பார்க்க நடந்துவிட்டார்.

சங்கரய்யருக்குப் பூஸ்திதி கொஞ்சம்தான். ஆனால், சீரிலும் செல்வத்திலும் ஒன்றும் குறைவில்லை. "சீர்மல்கும் ஆய்ப்பாடி" என்றும், "கனைத்திளம் கற்றெருமைக் கன்

றிற் கிரங்கி, நினைத்து முலைவழியே நின்று பால்சோர, நனைத்தில்லம் சேருக்கும்." என்றும் ஆண்டாள் வர்ணித்தது போல, பால்சுரந்த பாக்கியம் அவருக்கு உண்டு. செல்வத்திற்குத்தான் பஞ்சமா? கேவலம் ரூபாய், அணு பைசாவாக கணக்கிடப்படும், ''பாங்கு பாலன்ஸ்'' என்று வழங்கும் செல்வ மல்ல அவருடையது.

''சேலுண்ட ஒண்க ணாரில்
  திரிகின்ற செங்கால் அன்னம்
மாலுண்ட நளினப் பள்ளி
  வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்று மேதி
  கன்(று) உள்ளிக் கனைப்பச் சோர்ந்த
பாலுண்டு துயிலப் பச்சைத்
  தேரை தாலாட்டும் பண்ணை''

என்றபடி கோழைபடாத மேழிச்செல்வம் படைத்திருந்தது மட்டுமல்ல. ''பரித்யக்தா மயா லங்கா மித்ராணிச தனானிவை'' என்று ஸர்வஸ்வமும் தியாகம் செய்து விட்டுப் பகவான் திருவடிகளிலே சரணாகதி செய்த விபீஷணனை, ஆதிகவி ஸ்ரீமான் என்று அற்புதமாகவும் அழகாகவும் வர்ணிக்கிறபோல, பகவத் பக்தியும், பகவத் கைங்கர்யமுமாகிற செல்வமும் படைத்தவர் சங்கரய்யர். அவர் தலை சாய்ந்ததும், குடும்பத்தின் பாரம் விசுவநாதய்யர் தோட்களில் விழுந்தது. தம் குடிப்பிறப்பிற்கும், குலாசாரத்திற்கும், சிவபூஜைக்கும் சற்றும் குந்தகமின்றிக் குடும்பத்தைக் காப்பாற்றி, தங்கைகளுக்குத் தகுந்த இடத்தில் விவாகம் செய்துவைத்து, தம்பிக்குக் கல்வி கற்பித்தார் அவர். நெல்லுக்கும் பாலுக்கும் அவைகளையும் எதிர்பாராமல் பாடம் சொல்லிக் கொடுக்கும் நாள்போய், பட்டணப் படிப்பென்றால் படிக்காசு படைத்தவரும் பயங்கெள்ளும் காலமாயிற்றே இது. ஆனாலும் எப்படியோ கஷ்டப்பட்டுத் தம்பியின் மனங்கோணமல் அவனைப் பட்டதாரியாக்கி விட்டார் விசுவநாதய்யர். புத்தகக் கல்வி பெற்ற நீலகண்டனும் 'கிராமத்துக்குப்போ, விளைச்சலை அதிகமாக்கு' என்றெழுந்த கோஷத்தில் (Grow more food campaign) ஈடுபட்டு, கிராமத்திற்கு வந்துவிட்டான்.

இரும்புக் கலப்பைகளும், எலும்பு உரமும் உபயோகித்து விளைச்சலை ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கிவிடவேண்டும் என்று நீலகண்டன் துடித்தான். விசுவநாதய்யருக்கு அவசரப்பட்டு ஒன்றைச் செய்வதில் விருப்பமில்லை. 'எண்ணித் துணிக கருமம்' என்றபடி ஆர அமர யோசித்து ஒன்றில் இறங்கவேண்டும் என்பது அவர் எண்ணம். ஆனால் யௌவன ரத்தம் குதிகொள்ளும் கொதியும் கொள்ளுமல்லவா. நீலகண்டனுக்குக் காலம் தாழ்ப்பது பொறுக்கவில்லை. பொறாமைப் பேய்வசப்பட்ட அடுத்தவீட்டு அய்யாசாமி அய்யரும் சும்மாவில்லை, தூபம் போட்டுக் கொண்டேயிருந்தார். உன் அண்ணன் சம்சாரியாய் விட்டான், கிருஷியில் நூதன சோதனை செய்வதற்கெல்லாம் அவனிடம் பணமேது அப்பா! என்னவோ, உன் அப்பா வைத்திருக்கும் சொத்தில் ஒரு வேளை சோறும், ஒரு ஜோடி வேஷ்டியும் குறையாது கொடுத்து உன்னை ரக்ஷித்தால் அதுவே அதிகம்'' என்றெல்லாம் சொல்லி அவன் மனதைக் கலைத்து வைத்தார். இதன் விளைவாகப் பாகப் பிரிவினை ஏற்பட்டது.

தனக்குத்தானே எஜமானன் ஆய்விட்ட நீலகண்டன் தன் ஏற்பாடுகளை விஸ்தாரமாக அமுலுக்குக் கொண்டு வருவதில் தீவிரமாய் முனைந்தான், போதிய அனுபவம், முன்யோசனை, ஆள்கட்டு, பணம் முதலிய வசதிகள், கஷ்டம், நஷ்டம் ஏற்பட்டால் ஈடு கொடுக்கும்சக்தி—இவைகள் எல்லாம் இல்லாமல் ஆரம்பித்த எந்தக் காரியந்தான் நல்ல பலன் தரும்? அகலக்கால் வைத்து விட்டால் நிலை கெடாமல் என்ன செய்யும்?

நீலகண்டன் சீக்கிரமே கடனாளியாகி விட்டான். நிலத்தின் ஒரு பாகத்தை விற்றுக் கடனை தீர்க்கும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இந்நிலத்தைத்தான் கைப்பற்றி விட வேண்டுமென்று அதில் ஒரு கண் வைத்திருந்த அய்யாசாமி நீலகண்டனை முடுக்கினார்.

''என்னப்பா நீலகண்டா! சோமசுந்தரன் ரொம்ப ரொம்பத் துள்ளுகிறானமே? கடன் கொடுத்துவிட்டால் என்ன தலைக்கிறுக்கு? வட்டியும் முதலுமாய்ப் பணத்தைக் கீழே வைத்துவிட்டு மறுகாரியம் பாரு' என்று சொன்னானமே. பணம் என்ன ஓடியா போய்விடும்? அல்பத்திற்குப் பவிஷு வந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிக்கும் என்றபடியல்லவா இருக்கிறது இது? ஏதோ ரூ 100, 200 என்றால், நான் எப்படியாவது கொடுத்து உதவி அதைத் தீர்த்துக் கட்டிவிட்டு மறுகாரியம் பார்க்கச் சொல்லுவேன். அல்ப சிகேகிதம் பிராணசங்கடம். இவன்களிடமில்லாம் நாம் சகவாசம் வைத்துக் கொள்வது பிசகு. என்னைக் கேட்டால் அந்த ஐவேலி வயலை விற்றுவது அவன் கடனைத் தலையைச் சுற்றி எறிந்துவிட்டு மறு காரியம் பார்ப்பது நல்லதென்பேன்.

அதுவும் கொஞ்சம் மேட்டுநிலம்............ ஆனால் நான் சொல்லப்படாது; உங்கள் பெரியவாள் தேடிய சொத்து."

"என்ன ஐவேலியா! நன்றாய்ச் சொன்னீர்கள். அதுதான் முதல்தரமான வயல்."

"அப்படியா! எனக்குத் தெரியாது. பராபரியாய் என் காதில் பட்டதை நான் சொன்னேன். உயர்ந்த நிலமானால் இன்னும் நல்லதாய்ப்போச்சு. நம்ம முடைக்குக் கட்டி வரும். அன்றுகூட உன் அண்ணன், வட்டியும் முதலுமாய் எவ்வளவாயிருக்கிறது என்று சோமசுந்தரத்தை விசாரித்துக் கொண்டிருந்தாகக் கேள்வி. ஒருவேளை தானே பணத்தைக் கொடுத்து பத்திரத்தைத் தன் பேருக்கு மாற்றிக்கொள்ள உத்தேசமோ என்னமோ? ஆனால் அண்ணன் தம்பிக்கு நடுவில் நான் பிரவேசிப்பது நன்றல்ல. ஏலத்தில் விட்டால் போட்டியில் நல்ல விலைக்குப் போகலாம் என்பது என் அபிப்பிராயம். நம்ம கையாள் வைத்து விலையைத் தூக்கி விடலாம்— ஆனால் உன் பாடு பத்து. நான் தான் சொன்னேனே. உங்களுக்கு நடுவில் நான் தலையிடுவது அழகல்ல............"

சுருங்கச் சொன்னால் நிலத்தின் ஒரு பங்கு ஏலத்தில் விடப்பட்டது. ஆனால் அய்யாசாமியின் சுயகாரிய எண்ணம் பலிக்க வில்லை. குடும்பத்தின் பூர்வீக சொத்து பிறர் கை மாறுவதில் விருப்ப மில்லாமல் விசுவநாதய்யரே அதை அதிக விலைக்கு எடுத்தார்.

"பார்த்தாயா! நான் அப்பவே சொன்னேனே உன் அண்ணன் நோக்கம் என்னவென்று" அய்யாசாமி எரிகிறதியில் எண்ணெய் ஊற்றி வைத்தார்.

இதெல்லாம் பழையகதை, வயலுக்குச் சென்று கொண்டிருந்த விசுவநாதய்யர் இவைகளைப்பற்றிச் சிந்திக்கவில்லை. படிப்பு முடிந்து வீடு திரும்பிய தம்பி, "அண்ணா! இந்தா, ஆப்பிள்பழம் உனக்குப் பிடிக்குமே" என்று சல்லடைபோட்டுச் சலித்து நல்லதாய் வாங்கி வந்திருக்கிறேன். 'ஸ்பெஷல் குவாலிடி,' "பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன பவளக்குமிழ்வாய் ஆப்பிள்" என்று அவன் சொல்லிய சொல் அவர் காதில் ஒலித்தது. தம்மை அன்போடு நோக்கி நின்ற நிலை அவர் கண்முன் எழுந்தது. இவைகளோடு, தம் மனைவி விபீஷணனை ஞாபகப்படுத்தினதால், ராமனின் சகோதர வாஞ்சையும் அவர் நினைவிற்கு வந்தது.

"குகனொடும் ஐவரானோம் முன்பு
(பின் குன்று சூழ்வான்
மகனொடும் அறுவரானோம் எம்முறை
(அன்பின் வந்த
அகனமர் காதல் ஐய நின்னொடும்
(எழுவ ரானோம்.

என்று ராமன் சொன்னது பெரிதல்ல. அண்ணனைப்போல் சடாமுடி தாங்கித் தான் காட்டிற்குச் செல்லத்தயார் ராமனுக்குப்பதிலாய் என்றெழுந்த அந்த பரதன்! இந்தக் கிழவர், அயோத்திவாசிகள் எல்லோரையுமே அழித்து விடுகிறேன் என்று கொதித்த அந்தக்குலக்கொழுந்து இளையவன்! இந்தச் சகோதரர்களிடத்திலே அம் முதல்வனுக் கிருந்த வாஞ்சை!

"சாமீ! அங்கே எங்கே போறிங்க வேலியல்ல அடச்சிருக்கு?" என்ற சொல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினர் விசுவநாதய்யர்.

"ஏண்டா சுப்பா நீயா? உன்னைத்தேடிக் கொண்டுதான் வருகிறேன்."

"நாளைக்கு அறுப்புவிட்டு விடலாமுங்க. நானே வீட்டண்டை வரத்தான் இருந்தேன். என் தம்பி, அவன் சம்சாரம் குழந்தைகள் எல்லாம் வந்திருக்காக. இந்தப் பசங்களுக்குப் பணியாரம் வேணுமுங்களாம்; ஐயாவைக் கேட்டு வாங்கிக்கொடு இன்னு என்னைப் பிடுங்கித் தின்னுதுங்க."

"சரி. அதற்கு என்னவேணும்?"

"ஒண்ணுமில்லீங்க, ஒரு வீசை வெல்லம் இருந்தால் போதும்"

"அவ்வளவுதானே. நம்ம பத்து வரவு ராஜப்பா கடையில் வாங்கிக்கொள்."

"இப்படி கொஞ்சம் குந்துங்க, இதோ பால்கறக்கிற நேரத்திலே பணியாரம் செஞ்சுபிடறேன். உங்க கையாலே கொடுத்தா அதுகளுக்கு சந்தோசமாயிருக்கும்."

"வீட்டுக்கு வாயேன் வேட்டி, துட்டு எல்லாம் தரேன்."

"இருக்கட்டுமுங்க இப்படி குந்துங்க."

வரப்பிலே படர்ந்திருந்த பறங்கிக் கொடியிலிருந்து சுப்பன் ஒரு பறங்கிப் பழத்தைப் பறித்து வந்தான். காம்பைச் சுற்றி வட்டமாக வெட்டியெடுத்தான். உள்ளேயிருந்து சடைச் சக்கைகளை அப்புறப் படுத்திவிட்டு வெல்லத்தைப் போட்டு, கொஞ்சம் நிலக் கடலையையும் உரித்துப்போட்டான். இதைப்

எமது பொங்கல் வாழ்த்துகள்

பட்டு & நூல் ஜவுளி

தினுசுகள் சரஸமான விலையில் கிடைக்குமிடம்
பல வாடிக்கைக்காரர்கள் சவுகர்யத்திற்காக

குடந்தையில் V. S. R. ஜவுளிக் கடை

சுப்ரமண்ய விலாஸ்

138, பெரியதெரு

மாயவரம் பிராஞ்சு :—

ஸ்ரீ காமகோடி வஸ்திராலயம்

மஹாதானத் தெரு

●

கல்யாண காலத்தை உத்தேசித்து பல ஊர் பட்டு & நூல் ஜவுளி தினுசுகளும் கொள்ளேகாலம் ஸ்பெஷல் முறுக்குப்பட்டில் தயார் செய்த கெஜம் 6 முதல் 9½ கெஜம் வரை நவீன பார்டர்களிலும், புதுமாதிரியான கலர்களிலும் ஒரே விலையில் கிராண்டியுடன் கிடைக்கும். அன்பர்கள் அனைவரும் விஜயம் செய்து ஆதரிக்க கோருகின்றோம்.

விருபாட்சிபுரம் **Prop. V. S.** ராமஸ்வாமி

கும்பகோணம் (S/o V. N. S. அய்யர்.)

N. B.—கல்யாண காலத்திற்காக ஸ்பெஷலாக கொள்ளேகாலம் பட்டில் மூஹூர்த்த கூறைசேலைகள் உடல்ஜரிகை Self முந்தியில் 6 முதல் 9 கெஜம் வறை கிடைப்பதுடன் பனாரீஸ் Cut பார்டரில் உடல் ஜரிகை வேலைப்பாடுடனும் கொடி ஜாங்கிளா, ப்ளெயின் சேலைகளும் 6 முதல் 9 கெஜம் வரை விலை நயமாய் கிடைக்கும்.

பார்த்துக்கொண்டு இருந்த விசுவநாதய்யர் தேங்காய் ஒன்றும் கீறிப் போடும்படி யோசனை சொன்னார். அதையும் போட்ட பின், காம்போடு வெட்டியெடுத்த மூடியை வைத்து இறுக மூடி வைக்கோல் புரியை மேலே சுற்றினான். குழி யொன்று வெட்டி, அதிலும் வைக்கோல் போட்டு, புரிசுற்றிய பழத்தை அதில் இறக்கி, மேலும் வைக்கோல் போட்டு மூடித் தீ மூட்டினான். நன்றாய்ப் பற்றி எரிந்தபின் மண் வெட்டிப் போட்டுக் குழியை மூடினான். சற்று நேரம் சென்ற பின்பு பழத்தை வெளியில் எடுத்தான். அமிருதம் போல கூச்மாண்ட அல்வா தயாராயிருந்தது. ஐயர் தம் கையாலேயே குழந்தைகளுக்குப் பரிமாறினார். அவர்களுக்குக் குதூகலம், நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு கும்மாள மடித்தனர்.

இதைப் பார்த்த விசுவநாதய்யருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. ஒரு பெரிய பறங்கியைப் பறித்து எடுத்துக் கொண்டு வீடு திரும்பினார்.

"அடபாவமே! இத்தனை பெரிய பழத்தைத் தூக்க முடியாமல் தோள் வீங்க நீங்கள் தூக்கி வரவேண்டுமா? சுப்பனை எடுத்துவரச் சொல்லக்கூடாதா?" என்றாள் விசாலாட்சி.

"எல்லாம் உனக்காகத்தான். கொணர்ந்தவன் சிரமத்திற்குத் தக்கபடிதானே கொணர்ந்த வஸ்துவின் ருசியும் அதிகமாகிறது. ஆனாலும் ஆப்பிளுக்கு ஈடாகுமா இது?"

"ஆப்பிள் நினைவு வந்தால் உங்கள் தம்பி நினைவும் கூடவே தானே வரும், ஏதோ நல்லகாலம் தான் போலிருக்கிறது இந்த மட்டிற்கும்........."

"நீ ஆகாசக் கோட்டை கட்ட வேண்டாம். அவனுக்குக் குஞ்சாலாடு என்றால் பிடிக்கும். பெரிதாகத் தேங்காய் அளவிற்கு இரண்டும் இந்தப் பறங்கியையும் கொடுத்தனுப்பலாம். நான் போய்க் கூப்பிடுவதென்பது......"

"வேண்டாமே, இந்த மட்டும் இணங்கினதே மான்யம் விட்டது மாதிரி. பாக்கியை நான் பார்த்துக் கொள்கிறேன்."

விசாலாட்சி குதூகலமாகக் குஞ்சாலாடு செய்வதில் முனைந்தாள். விசுவநாதய்யர் பறங்கியின் காம்பைச் சுற்றி வட்டமாக வெட்டி எடுத்து, சக்கைகளைச் சுரண்டி எடுப்பதில் ஈடு பட்டார்..........

பொங்கல் புதுநாள் புலர்ந்தது. விசாலாட்சிக்குப் பெருமிதம் தாங்க முடியவில்லை. பறங்கியை ஒரு கூடையில் வைத்து இடுப்பில் வைத்துக் கொண்டு, குஞ்சாலாடை ஒரு தூக்குப் பாத்திரத்தில் எடுத்துக் கொண்டு, தானே மைத்துனன் வீட்டிற்குச் சென்றாள். வாசல் திண்ணையில் ஏங்கிய முகத்துடன் நீலகண்டன் உட்கார்ந்திருந்தான். அய்யாசாமியும் கூடவே இருந்தார்.

"ஏதப்பா! அபூர்வமாய்க் குஞ்சாலாடுவருகிறது! துப்பறியும் கதைகளில் பார்சலில் பாம்பைவைத்து அனுப்பிவிடுவார்கள் என்று படித்திருக்கிறேன். நீலகண்டனுச்சே நீ, வந்த சாமானிலே நஞ்சிருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை" என்றார் அவர்.

நீலகண்டன் எழுந்து ஆத்திரமாக உள்ளே சென்றான். பறங்கியின் காம்பைப் பிடித்துத் தூக்கினான். அதுகையோடு வந்து விட்டது. "அய்யாசாமி சொன்னது சரியாய்ப்போச்சா?" நீலகண்டனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. தூர நின்று கொண்டு, ஒரு கம்பை எடுத்துப் பழத்திற்குள் தெரிந்த கடுதாசை விலக்கினான். இதற்கிடையில் அங்கே வந்த மீனாட்சி நீலகண்டன் நின்ற கோலத்தைப்பார்த்துச் சிரித்து விட்டு, மளமளவென்று போய், பழத்திற்குள் கையை விட்டுப் பேப்பரை வெளியில் எடுத்தாள். பள பளவென்று பச்சைப்—பாம்பல்ல—பட்டுப்புடவை யொன்று நெளிந்தது! அது மட்டுமல்ல, நீலகண்டனுக்குப் பட்டுக்கரை வேஷ்டியும், குழந்தைகளுக்குத் துணி மணிகளும் அதில் நிறைந்திருந்தன! வசந்தா குஞ்சாலாடை எடுத்துக்கொண்டு ஓடி வந்தாள்.

"அம்மா! அம்மா! என்ன குஞ்சாலாடு அம்மா இது! விள்ளவே முடியல்லையே"

அந்தக் குஞ்சாலாடிற்குள் பத்து ரூபாயும் ஒரு ஜோடி தங்க வளையல்களும் இருந்தன.

நீலகண்டனுக்கு நெஞ்சு அடைத்துக் கொண்டது. ஓட்டமாய் ஓடி, அண்ணன் காலடியில் வெட்டிச் சாய்த்த மரம்போல் வீழ்ந்து விம்மினான்.

"வாடியம்மா!" என்று மீனாட்சியை வரவேற்றாள் விசாலாட்சி.

"பொங்கலோ பொங்கல்" என்று அடுக்களையிலிருந்து குழந்தைகள் சேமக்கலம் கொட்டின.

"பால் அமோகமாய்ப் பொங்குகிறது! உள்ளே வந்து பாருங்கள்" என்றாள் விசாலாட்சி.

அய்யாசாமி அன்றே அடுத்த ஊருக்குக் குடி போய் விட்டார்.

—o—

கண் கண்டார்!!

C.V. ராமகிருஷ்ணன்

சனிக்கிழமை ஒரு மணிக்கே ஆபீஸிலிருந்து வந்து விட்டேன். வீட்டிற்குள் நுழையும் பொழுதே ஜானகியிடம் ஒரு மாறுதலைக் கண்டேன். "ஐயோ, ரொம்ப களைப்பாய் வந்திருக்கேளே! இதோ காப்பி போட்டுக்கொண்டு வருகிறேன்" என்று கூறிக்கொண்டு சமையலறையை நோக்கி ஓடினாள். ஐந்து நிமிஷத்தில் பாதாம்ஹல்வா, காபி சகிதம் என் முன் வந்து பிரமாதமாக உபசரிக்க ஆரம்பித்துவிட்டாள். உடனே எனக்குச் சந்தேகம் தட்ட ஆரம்பித்தது "சோழியன் குடுமி சும்மா ஆடுமோ" என்கிற யோசனை உண்டாயிற்று "என்ன ஜானகி, ஆரணிச்செட்டியார் ஏதாவது புதுப்புடவை கொண்டு வந்திருக்கிறாரோ" என்று நயமாகக் கேட்டேன்.

"ஆமாம் உங்களுக்கு எப்பொழுதும் இந்த கிண்டல்தான்; புடவையுமில்லை, கிடவையுமில்லை."

"பின் இந்த அபார உபசாரத்திற்குக் காரணம் தான் என்ன?"

"உங்களுக்கு ஆபீஸேதான் கதி. பட்டணமே அல்லோல கல்லோலப்படுகின்றது. கும்பகோணத்து அம்மாள் ஒருத்தி வந்து மயிலாப்பூரில் ஒரு வாரமாக, காலக்ஷேபம் பண்ணுகிறாளாம், என்ன அழகாயிருக்கிறதாந் தெரியுமா? இன்றைக்கு மூன்று மணிக்கு 'கண்ணப்ப நாயனார்' சரித்திரமாம், இப்பொழுதே புறப்பட்டால்தான் பஸ் பிடித்து, போய்ச் சேருவதற்குச் சரியாய் இருக்கும்" என்று தன் காலக்ஷேபத்தை முடித்து விட்டு, கடைசி தடவையாகத் தலையை வாரிக் கொண்டுவர உள்ளே சென்றாள். 'நல்ல வேளை, பர்ஸு பிழைத்ததே' என்கிற சந்தோஷத்தில், தூக்கம் போனால் போகிறது என்று அவளுடன் கிளம்பி, பஸ்ஸுக்குத் திக்கு முக்காடி, கடைசியில் ஒரு விதமாக மயிலாப்பூர் போய்ச் சேர்ந்தேன்.

மணி மூன்றாகிவிட்டது. ஒரே கும்பல். நான் உள்ளே நுழைவதற்கும், வயதான அம்மாள் ஒருத்தி வயது வந்த ஒரு பெண்ணைக் கூட்டிக்கொண்டு மேடையில் வந்து அமர்வதற்கும் சரியாகவிருந்தது. அந்தப்பெண் நல்ல அழகுடன் விளங்கினாள். ஆனால் கவர்னர் ஜெனரல் அவர்களின் சிஷ்யையோ என்னும்படி, "கூலிங் க்ளாஸ்" போட்டுக் கொண்டிருந்தாள். அந்த வயதான அம்மாள்தான் காலக்ஷேபம் செய்யப்போகிறாள் என்று நினைத்துக் கொண்டிருந்தபொழுது, அந்தப் பெண் 'பலபீமா' என்று ஆரம்பித்தவுடன் ஒரே ஆச்சரியமாயிருந்தது எனக்கு.

கண்ணப்பர் சரிதம் அபாரமாக நடந்து கொண்டிருந்தது. அடடா! என்ன பாட்டு! என்ன சாரீரம்! அனைவரும் ஆனந்தக் கடலிலே மூழ்கியிருந்தனர். கண்ணப்பர் கண்ணைக் கொடுக்கும் கட்டம் வந்தது. "கண்ணப்பர் தம் கண்களையே பிடுங்கிக் கண்ணப்பருக்கு வைத்துவிட்டார்" என்று அந்தப் பெண் கூறிய பொழுது பக்திரசமும் சோகரசமும் கலந்து வாரியிறைத்தது போல இருந்தது. பக்கத்திலே யிருந்த தள்ளாத கிழவர் ஒருவர் ஏதோ முணுமுணுத்த சப்தம் கேட்டது. "என்ன ஸ்வாமி, ஏன் வேதனைப்படுகிறீர்கள்" என்று

கேட்டேன். "ஒன்றுமில்லை இவ்வளவு அழகாகக்காலக்ஷேபம்செய்யும் சகலகலா வல்லியாகிய இந்தப் பெண்ணிடமிருந்து கண்ணைக் கடவுள் அநியாயமாகப் பறித்துக்கொண்டுவிட்டாரே! இவ்வளவு வயதாகி எனக்கு எதற்குக் கண்கள்? கஷ்டமில்லாமல் கண்ணை எடுத்து இவளுக்குக் கொடுத்துவிட முடியுமாகில் உடனேயே செய்துவிடுவேன்'' என்று கூறினார். இதற்குள் காலக்ஷேபம் முடியவே ஜானகியைக் கூட்டிக்கொண்டு, பஸ்ஸை நோக்கிக் கிளம்பினேன்· கூடவே அந்தப் பெரியவரும் வந்தார். பஸ் வர ஒரு மணி நேரமாகும் என்று தெரிந்ததால் அவர் வாயைக் கிண்ட ஆரம்பித்தேன்.

“ஏன் ஸ்வாமி, நிச்சயமாகக் கண்ணைக் கொடுப்பதாயிருந்தால் சொல்லும். கண்ணப்பர் மாதிரி நீர் அவ்வளவு கஷ்டப்பட வேண்டாம், வலியே தெரியாமல் உம்மிடமிருந்து கண்ணை எடுத்து அவளுக்கு வைத்துவிட ஏற்பாடு செய்கிறேன்'' என்று கூறினேன்.

‘‘என்னப்பா! கதை அளக்கிறே; கண்ணையாவது வலி தெரியாமல் பிடுங்கிறதாவது'' என்று நையாண்டி செய்தார் அவர்.

‘‘ஸ்வாமி, முன்னர் இராவணன் புஷ்பக விமானத்தில் சென்றதை யாரும் நம்பவில்லை. இன்று ஏரோப்ளேனைப் பார்த்து அது உண்மையாயிருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. அதேமாதிரி முன்காலத்தில் கண்ணப்பர் கண்ணை எடுத்துக் கடவுளுக்கு அளித்தார் என்றால் நாஸ்திகர் நையாண்டி செய்கின்றனர். இன்னும் கொஞ்ச காலத்தில் ஒருவரிடமிருந்து கஷ்டமில்லாமல் கண்ணை எடுத்து, குருடர்களுக்கு வைத்து, பார்வையை அளிக்கும் பொழுது உண்மை நன்கு விளங்கும்.'' என்றேன்.

‘‘அப்படியா! தயவு செய்து அது எப்படி முடியும் என்று சொல்லமுடியுமா?'' என்று கேட்டார் பெரியவர்.

உடனே அவருக்குக்கண் கண்டார் கதையைக் கூற ஆரம்பித்தேன்.

கண் பலபாகங்களால் ஆனது. கண்ணின் மேல் ‘‘கார்னியா'' (Cornea) என்ற விழிமுன் தோல் இருக்கிறது. அதன் நடுவில் கண்மணி (Pupil) இருக்கிறது. அதற்குப் பின்னால் லென்ஸும் (Lens), retina என்ற திரையும் உள்ளன. கடைசியாக ஒளி நரம்புகள் (Optic nerves) இருக்கின்றன. ஒரு



1 விழி முன்தோல்.
2 லென்ஸ் அல்லது வில்லை.
3 ஒளி நரம்பு.
4 ரெடினு அல்லது திரை.

பொருளைப் பார்க்கும்பொழுது, அந்தப் பொருளினின்றும் ஒளிக் கிரணங்கள் (Light rays) புறப்பட்டு, கார்னியா, விழிமணி மூலமாக உள்ளே புகுகின்றன. லென்ஸு ஒளிக் கிரணங்களுக்கு ஏற்ப, குவிந்தோ, விரிந்தோ அவைகளை திரையில் விழும்படி செய்கிறது. பின்னர் ஒளி நரம்புகள் மூலம் பொருளைச் சரியாகப் பார்க்க முடிகின்றது. ஆகவே கண்பார்வை சரியாக இருக்கவேண்டுமாகில், கண்ணின் எல்லாப் பாகங்களும் கெடாமல் இருக்க வேண்டும் என்று தெரிகிறது. ஒருவனுடைய கண்ணினுள்ள லென்ஸு முதலியவைகள் கெடுவதன் மூலம் அவன் பார்வையை இழப்பானாகில், அதை நாம் நிவர்த்திக்க முடியாது. ஆனால் தொத்து வியாதி காரணமாகவோ, விபத்து காரணமாகவோ, பூ விழுவதின் காரணமாகவோ, தீ விபத்து காணமாகவோ், விழி முன் தோல் ஒளி புகாப் பொருளாக மாறிவிடுதன் மூலம் (Opaque) ஒருவன் கண்பார்வையை இழப்பானாகில் அவனுக்கு மறுபடியும் பார்வையை அளிக்க முடியும்.

அநேக குருடர்களுக்குக் கண் பார்வையளிக்கும் நோக்கத்துடன், கண்ணைப் பற்றிய ஆராய்ச்சி சுமார் 140 வருடங்களுக்கு முன்பே மேல்நாட்டில் ஆரம்

பிக்கப்பட்டது. விழி முன் தோல் ஒளி புகாப் பொருளாக மாறிவிடுவதால் உண்டாகும் கண் வியாதியைப்பற்றி 1913ல் பிரான்ஸில் மேகிடாட் என்பவர் (Magitat) ஆராய்ந்தார். 1927ல் ஒடெஸ்ஸாவில் பிலடவ் (Filatov) அதைப்பற்றித் தீவிரமாக ஆராய்ந்தார். வான் ஹிப்பல் (Van Hippel) என்பவர் விழி வட்டத்தை எடுக்க, டெரபின் (Trephine) என்ற ஆயுதத்தைக்கண்டு பிடித்தார். ஸ்விட்ஸர்லாந்திலும், பிரான்ஸிலும் இந்த ஆராய்ச்சி தொடர்ந்து நடத்தப் பட்டது. ஆனால் தகுந்த வசதியில்லாத காரணமாக அங்கு இந்தஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை. பணம் படைத்த அமெரிக்கர்களோ எல்லா வசதிகளும் உடையவர்களாய் இந்த ஆராய்ச்சியில் கவனம் செலுத்தி, வெகு வேகமாக முன்னேற்ற மடைந்திருக்கின்றனர்.

ஒருவனுக்குக் கண்ணில் மங்கல் ஏற்பட்டால் (அதாவது வியாதி முதலியவை காரணமாக விழி முன்தோல் ஒளியை உள்ளே புகவிடச் சக்தியில்லாது ஒளி புகாப் பொருளாக மாறி விட்டால்) அந்த மங்கலான பாகத்தை எடுத்துவிட்டு வேறொரு நல்ல பாகத்தைப் பொருத்தி விடுதல்தான் அவர்கள் அனுஷ்டிக்கும் வைத்திய முறையின் தத்துவமாகும். ஆகவே இறந்த ஒருவனுடைய கண்ணை இறந்த 12மணி நேரத்திற்குள் எடுத்து உபயோகிக்க முடியுமா என்று ஆராய்ந்தனர். சில இடங்களில் இது வெகு கஷ்டமான காரியமாகும். ஏனெனில் அரசாங்கத்தார் 24 மணி நேரத்திற்கு முன்பு பிணத்தை அணுக விடுவதில்லை. தற்போது ரணசிகிச்சையின் போது (Operation) ஏற்படும் இரத்தக் குறைவை ஈடுபடுத்த இரத்தத்தைச் சேகரித்து வைக்க அனைவரையும் எப்படி இரத்த தானம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகின்றார்களோ அதேமாதிரி கண்ணைக் கொடுக்கத் தயாராயிருப்பவர்கள் அனைவரையும் கண் தானம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு அமெரிக்கர்கள் ஒரு சங்கம் (Eye Bank) ஆரம்பித்திருக்கின்றனர்.

ஒருவனுக்கு விபத்து காரணமாக விழி மங்கலாகி ஒளிக்கிரணங்கள் உள்ளே புகாது குருடாகிவிடில், அவனை ஆஸ்பத்திரியில் சேர்த்து, இதர மருந்துகள் மூலம் குணப்படுத்த முடியுமா என்று பார்க்கின்றனர். இந்த மருந்துகள் மூலம் குணமாகாவிடில், இரண சிகிச்சையைக் கைக்கொள்கின்றனர். இரண சிகிச்சை செய்வதற்கு முன்பு தூசி முதலியவை காரணமாகச் சீழ்பிடித்துப் புடை வைக்காமலிருப்பதற்கே (to avoid Septic) பெனிஸிலின் என்ற மருந்தை அவன் கண்ணில் போடுகின்றனர். பின்னர் அவனுக்கு வலி தெரியாமலிருக்க விழியில் ஸின் கேன் (Syn Caine) என்ற மருந்தை ஊசி மூலம் உட்செலுத்துகின்றனர். விழியின் மேல் தோலிலும்



ஆபரேஷனுக்கு முன்பு இன்ஜெக்ஷன் கொடுத்து மரக்கும்படி செய்தல்.



மங்கலான பாகத்தைக் குடைந்து எடுத்தல்.



புதிய பாகத்தைப் பொருத்துதல். முடி போடக் கயிறுகள் தயாராயிருக்கின்றன.

கொகேன் (Cocaine) இன்ஜெக்ஷன் செய்து மரத்துப்போகும்படி செய்கின்றனர். பின்னர் மங்கலான பாகத்தைச் சுற்றி, சதுரமாக நரம்புக் கயிறுகள் போட்டுத் தைத்து விடுகின்றனர். பின்னர் கார்க்கை நடுவில்ஓட்டை செய்ய உபயோகப்படும் குழாய் போன்ற ஆயுதத்தை (trephine) மங்கலான பாகத்தில் சரியாகப் புதைத்து அதைச் சாமர்த்தியமாகக் குடைந்து எடுத்து விடுகின்றனர்.

இதற்கு இடையில் பிணத்தினின்றும் எடுத்த கண்ணை எடுத்து, கெடா வண்ணம் இரத்தத்திலோ, உடலினுள்ள திரவத்திலோ (physiological fluid) வைத்துக் காப்பாற்றி வேண்டியபொழுது எடுத்துக்கொள்ளுகின்றனர்.

குருடனுடைய மங்கலான பாகத்தை எடுத்தவுடன், இரத்தத்தில் காப்பாற்றி வைத்திருக்கும் ஒளி புகக்கூடிய விழியை எடுத்து, அந்த இடத்தில் சரியாகப் பொருத்தி மறுபடியும் தைத்து விடுகின்றனர். பின்னர் சீழ்வைக்காமலிருக்க, பெனிஸிலின் ஆயிண்ட்மெண்ட் (Penicillin ointment) போட்டு, முட்டை ஓட்டுப் பவுடரை (Eggshell lining) நன்ருகப் பூசிக் கட்டி விடுகின்றனர். எட்டாவதுநாள் கட்டை அவிழ்த்து எஸரின் (Eserine) என்ற மருந்தைப் போட்டு மறுபடியும் மூடிக் கட்டி விடுவர். 20 நாட்களுக்குப் பிறகு சரியாகப் பொருந்தியிருப்பதாக அறிந்தவுடன் தையலை எடுத்துவிட்டு வீட்டிற்கு அனுப்பி விடுவர். நன்ருக இரத்த ஓட்டம் கண்டு, கண் பார்வை சரியாகத் தெரிவதற்குப் பல மாதங்கள் பிடிக்கும். அதுவரையில் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இந்த முறையில் அநேக இடைஞ்சல்கள் உள்ளன. நன்ருக ஆபரேஷன் செய்யாவிட்டாலும், நன்கு கவனித்துக் கொள்ளாவிட்டாலும், அதிக நாள் ஆஸ்பத்திரியில் அசையாமல் படுத்துக் கொள்ள வேண்டியிருக்க வேண்டிய சிரமம் காரணமாகவும் கண் சரியாகப் பொருந்தாது பார்வை தெரியாமல் போய் விடலாம். இந்த முறையில் 25 சதவிகிதம்தான் பலன் கிடைத்திருக்கிறது. தவிர, பிணத்தினின்றும் கண்ணை எடுக்கும்பொழுது வியாதி முதலியவை இல்லாமல் இருக்கின்றதா என்று ஆராய்ந்து எடுக்க வேண்டும்.



ஒளி இழந்த கண்.



ஆபரேஷனுக்குப் பிறகு பார்வை கூடிய கண்.

கண் பார்வையின்றிப் பரிதவிக்கும் ஆயிரக்கணக்கான குருடர்களுக்கும், அறிவிற் சிறந்த பெரியார்கள் விபத்து காரணமாகக்கண் பார்வையை இழக்குங்கால், மறுபடியும் பார்வையை அளிக்கவும் இந்த முறையை அனுஷ்டிக்கலாம். அதிர்ஷ்டமிருந்தால் கண் வரட்டும்! இல்லாவிடில் எப்பொழுதும்போலக் குருடர்களாகவே யிருந்து வாழட்டும்!

தற்சமயம் நம் நாட்டில் எத்தனையோ மக்கள் குருடர்களாய்த் தவிக்கின்றனர். அவர்களுக்குப் பார்வையளிக்க வேண்டுமாயின் அதற்கு வேண்டிய மருத்துவர்

களை வெளிநாடுகளுக்கு அனுப்பி, தேர்ச்சி பெற்று வரச்செய்ய வேண்டும். தவிர இறந்தவர்களின் கண்களினின்றும் விழியைப் பிரித்து எடுக்க அரசாங்கம் அனுமதிக்கவேண்டும். இதில் முன்னெச்சரிக்கையாக இறந்தவர்களுக்கு வியாதியில்லாமல் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அப்படி எடுத்த விழிகளைத் தக்க முறையில் பத்திரப்படுத்தி, வேண்டியபொழுது உபயோகிக்க வசதி செய்யவேண்டும். பல சங்கங்கள் ஏற்படுத்தி வயதானவர்களும் கருணையாளர்களும் கண்தானம்செய்ய, கண்சேமிப்புத் திட்டம் ஒன்றை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். மேற்கூறியவைகளைச்செய்வதன் மூலம், குருட்டைப் பெரும்பாலான அளவிற்கு இந்தியாவினின்றும் நீக்கி விடுவதன் மூலம் 'கண்ணப்பர்களாகி' நம் நாட்டுப் பழங்கால சரிதங்களில் கண்ட உண்மையை நிரூபித்து விடலாம் என்று கூறி முடித்தேன்.

"ஆமாம், அவ்வளவு சுலபம் என்றால் நான் கண்ணை இப்பொழுதே கொடுக்கத் தயார். ஆனால் நம் டாக்டர்களெல்லாம் முதலில் அமெரிக்கா போய்த் தேர்ச்சி பெற்று வரட்டும்" என்றார் அந்தக் கிழவர்.

"ஐயா, தியாகராய நகரிலே தேர்ச்சி பெற்ற டாக்டர் ஒருவர் இருக்கிறார். சுலபமாக வலியில்லாது கண்ணையெடுத்து விடுவார். கவலையில்லாது இப்பொழுதே நீர் கொடுத்து விடலாம்" என்று கூறி முடிப்பதற்குள் பஸ் வந்து விடவே கூட்டத்தில் முட்டியடித்துக் கொண்டு ஜானகியுடன் உள்ளே புகுந்து விட்டேன். பாவம்! பெரியவர் பின் தங்கிவிட்டார். வீட்டிற்குள் போனதும் தான் பெரியவர் விலாசம் தெரிந்து கொள்ளாது முட்டாள் தனம் செய்து விட்டோமே என்று விசனித்தேன். கடந்த ஒருமாதமாக அவரைத்தேடாத இடமெல்லாம்தேடுகிறேன். அவர்பாவம்! பயந்து கொண்டு அந்தப் பெண்ணின் காலக்ஷேபத்திற்குக்கூட வருவதில்லை. யாராவது பார்த்தால் கொஞ்சம் சொல்லுங்கள் ஸார்!

—o—

பொங்கல்
பண்டிகைக்கும்
கலியாண
விசேஷங்களுக்கும்

வேண்டிய
சிறந்த சேலைகள்
உயர்ந்த ஸில்குகள்
துப்பட்டாக்கள்
வேஷ்டிகள்
முதலியன
பல புதிய ரகங்களில்
இப்பொழுது வந்திருக்கின்றன.

எங்கள் சேலைகள்

அசல் கொள்ளேகாலம் பட்டில் தயாரானவை. நூதன பார்டர்களுடன் சிறந்த அற்புதமான வேலைப்பாடுடையவை.

R. S. E.

இன்றே வந்து வேண்டியதைப் பார்த்து வாங்குங்கள்

ருக்மணி ஸில்க் எம்போரியம்

48-49, பெரியதெரு :: கும்பகோணம்

ஹெட் ஆபீஸ்:-
ராதா ஸில்க் எம்போரியம்
14, சன்னிதித் தெரு
மயிலாப்பூர் :: மதராஸ்.

கலைக் களஞ்சியம்

(பிரசுரிப்பவர்: தமிழ் வளர்ச்சிக் கழகம்: சென்னை.)

மேல் நாடுகளில் அறிவின் வளர்ச்சிக்கு முக்கிய சாதனங்களில் ஒன்றான அறிவு நிதி நூல்கள் (Encyclopaedias) அந்தந்தத் தேசீய பாஷைகளில் கோடிக் கணக்கான பணச் செலவு செய்து ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள் முதலிய அறிஞர்களால் பல துறைகளில் கிடைத்துள்ள விஷயங்களை விஸ்தாரமாக எழுதப் பெற்றுப் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் இத்தகைய அறிவுநிதி நூல் இல்லாமல் நின்ற குறையைத் தீர்ப்பதற்காக சென்னை தமிழ் வளர்ச்சிக்கழகத்தினர் கலைக் களஞ்சிய மானேஜிங் கமிட்டி ஒன்றை நியமித்துக் கலைக்களஞ்சியம் என்ற பெயர் கொண்ட ஒரு பெரிய நூலைத் தயாரிக்க முன் வந்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நிதியையும் நிபுணர்களையும் சேர்த்துச் சுமார் பதினைந்து வருஷங்களுக்குள் இப்பணியைப் பூர்த்தி செய்யலாம் என்று கருதி, இதற்குள்ளேயே மாதிரிப் பிரதியொன்று அனுப்பியிருக்கின்றனர்.

கலைக்களஞ்சிய விஷயமாகச் சென்னையில் டிஸம்பர் மாதம் 12ஆம் தேதி நடந்த ஒரு கூட்டத்தில் இந்நூல் பன்னிரண்டு புத்தகங்கள் அடங்கியிருக்கும் என்றும், ஒவ்வொரு புத்தகமும் 25 ரூபாய் விலை கொண்டதாகும் என்றும் கூறப்பட்டுள்ளது. அக்கூட்டத்தில் கலைக் களஞ்சியம் பல துறைகளிலுள்ள விஷயங்களைச் சில பகுதிகளாக வகுத்து, ஒவ்வொரு பகுதியிலும் அந்தந்தத் துறை சம்பந்தமான விஷயங்களைப்பற்றி அகராதி முறையில் எழுதப்படும் என்று சொன்னார்கள். (Encyclopaedia Brittannica) என்று பிரசித்திபெற்ற இங்கிலீஷ் களஞ்சியத்தில் துறைதுறையாக வகுப்பதைத்தள்ளிவிட்டு, எல்லாக் கலைகளிலும் உள்ள விஷயங்களையும் அறிவு என்ற ஒரே விஷயமாகப் பாவித்து, அகராதி முறையில் எழுதப்பட்டுள்ளன. இம்முறையே கலைக்களஞ்சியத்தை உபயோகிக்கும் பொதுமக்களுக்கு எளிதில் பலனடைய வசதி தரும் என்று கூறலாம். உதாரணமாக, ஒரு அறிஞன் கவித்துறையிலும், சரித்திரத்துறையிலும், விஞ்ஞானத்திலும் உயர்ந்த நூல்கள் எழுதியிருந்தால், அவனைப்பற்றி அறிய விரும்புவோர் மூன்று புத்தகங்களில் வெவ்வேறு இடங்களில் தேடிப்படிக்க வேண்டிவரும். துறைகளெனப் பிரிக்காமல் அறிவை எல்லாம் ஒரே விஷயம் என்று கொண்டு, அகராதி முறையில் எழுதினால் அவனைப்பற்றி ஒரே இடத்தில் அனைத்தையும் தெரிந்துகொள்ள முடியும். மாதிரிப்பிரதியின் முகவுரையில் இதுவிஷயமாக ஒன்றும் கூறப்படவில்லை. இது கவனிக்க வேண்டிய முதல் பிரச்னையாகும்.

மாதிரிப் பிரதியில் "இதிலுள்ள விஷயங்கள் பல துறைகளிலிருந்தும் பொறுக்கப்பட்டவை. அவையே அவ்விஷயங்களைப்பற்றிய முழு விவரங்கள் என்று

HAMAM
பரிசுத்தத்தில்
முதல் பாடம்
ஹமாம் சோப்புத் தேய்த்து
அனுதினமும் ஸ்நானம்
செய்யுங்கள்.
HAMAM
ஹமாம் ஸோப்பு
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

கருதலாகாது." என்று காணப்படுகிறது. அதனால் எழுதப்பட்ட விஷயங்கள் போதுமான அளவு இருக்கின்றனவா, இல்லையா என்று அபிப்பிராயம் கூறுவது கஷ்டமாகும். உதாரணமாக, திருவள்ளுவர் என்ற தலைப்பின் கீழ் அரசியலைப்பற்றி அவர் கூறியுள்ளவையே காணப்படுகின்றன. அறத்துப்பால், காமத்துப்பால் என்ற நாயனாரின் குறள்களைப்பற்றி வேறு இடங்களில் எழுதப்படுமோ, இங்கேயே எழுதப்பட்டிருக்கிறதோ என்று அறியமுடியவில்லை.

இலக்கியங்களைப்பற்றிச் சில அபிப்பிராயங்கள் கூறத்துணிகிறோம். தேவாரம் என்ற சொற்றொடருக்குத் தே ஆரம், அல்லது தேவு ஆரம், கடவுளுக்கு அடியார் சூட்டிய பாமாலை என்ற பொருளும் சிலர் கூறுவர் என்று சேர்த்து எழுதுவதே உசிதமாகும். பொருளைப்பற்றி அபிப்பிராயபேதம் இருக்குமாயின் பேதங்களை உள்ளபடி உரைப்பதே கலைக்களஞ்சியத்தின் நோக்கத்துக்குத் தகுந்ததாகும். திருவள்ளுவர் என்ற தலைப்பின் கீழ் குறளின் பெருமை அர்த்த சாஸ்திரத்தின் பெருமையைவிடமிகுந்தது என்று கூறப்படுகிறது. இதற்கு ஆதாரமாகக் குடி என்று குறளில் உள்ள சொல்லுக்குக் குடிமக்கள் என்று பொருள் விளக்கி, முடியாட்சிக்கு மாத்திரம் அல்லாது குடியாட்சிக்கும் வள்ளுவர் எழுதிவைத்துள்ளவை பொருந்தும் என்று காணப்படுகிறது. குடியென்ற சொல்லுக்குப் பரிமேலழகர், "ஈண்டுக்குடியென்றது அதனையுடைய நாட்டினை" என்ற உரை தருகிறார். அரசனைப்பற்றியும் அவன் அங்கமாகிய அமைச்சைப்பற்றியும் சில அதிகாரங்களைத் தந்த பிறகு அரண், படை முதலிய அங்கங்களை வர்ணிக்குமுன் நாடு என்ற ஒரு அதிகாரத்தை நாயனார் எழுதியிருப்பது பரிமேலழகர் உரைக்குப் பலமான ஆதாரமாகும். "வள்ளுவர் கூறும் உறுப்புக்களில் நாடு என ஒன்று காணோம். குடி என ஒன்றைப் புதிதாகக் கூறுகின்றார்" என்று கூறுவதில் ஆராய்ச்சியாளர் ஒரு சிலர் அபிப்பிராயம் இது என்றே கொள்ள வேணும். களஞ்சியத்தில் புது ஆராய்ச்சியின் கருத்துக்களைச் சொல்ல வேண்டியது அவசியந்தான். ஆனால் தீர்மானமாக எல்லோரும் ஒப்புக்கொள்ளத் தக்கவைகளைக் கூறிய பிறகு, ஆராய்ச்சியாளர் ஒரு சிலர் அபிப்பிராயம் வேறுபட்டிருப்பதைக் கூறுவதே முறை என்று தோன்றுகிறது.

இராமகிருஷ்ண இயக்கத்துக்குக் களஞ்சியத்தில் கொடுக்கப்பட்டுள்ள இடம் மிகக் குறைவு எனலாம். இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் படமும் விவேகாநந்தரின் படமும் காணப்படுகின்றன. ஆனால் அவ்விருவரின் சரித்திரம் சுருக்கமாக இங்குக் கூறப்பட்டுள்ளனவோ வேறு பகுதிகளில் காணப்படுமோ என்று சொல்ல முடியவில்லை. இராமகிருஷ்ணமடத்தார் தென்னிந்தியாவிலும் வடஇந்தியாவிலும் செய்துவரும் சமூக சேவையைப்பற்றி ஒன்றும் எழுதப்படவில்லை.

சரித்திரம், அரசியல் கட்சிகள், பொருளாதாரம், மதம் ஸமூகச் சீர்திருத்தம், இப்படிப்பட்ட துறைகளில் அறிஞரின் அபிப்பிராயங்கள் வேறுபட்டு விவாதங்களை இழைக்கின்றன. இவ்விஷயங்களைப்பற்றி எழுதுவோர் பொதுவாக எல்லோரும் ஒப்புக்கொள்வதைப் பட்சபாதமில்லாமல் கூறிப் பின்னர் விசேஷமாயுள்ளதை 'இது ஒரு சாரார் கொள்கை' என்று சொல்வதே களஞ்சியத்தின் இலட்சியத்துக்கு ஏற்ற முறையாகும்.

வைத்தியத்துறையில் மாதிரிப் பகுதியில் காணும் ஒரு கட்டுரையில் ஆப்பரேஷன் என்ற இங்கிலீஷ் சொல் பழக்கத்தில் வந்துவிட்டபடியால், சத்திரம் வைத்தல் என்ற சொல்லைத்தள்ளி உபயோகப்படுத்தியிருக்கிறது. இது நியாயமே; அந்நியாயத்தை அனுசரித்து, குடல்வால் அழற்சி என்ற ஒரு புதிய சொல் அமைப்பதைக்காட்டிலும் எங்கும் வழங்கிவரும் அபெண்டிஸைடிஸ் என்ற சொல் உபயோகித்திருந்தால் உடனே பொருள் விளங்கும். புதுச்சொல்லையே விரும்பினால் அபெண்டிஸைடிஸ் என்று ஒரு தலைப்பு அகரத்தின் கீழ் அதனிடத்தில் காட்டி, குடல்வால் அழற்சி பார்க்க என்று குறிக்க வேண்டியிருக்கும். மலேரியா, டைபாயிட், காலரா இவைபோல் பல சொற்களுக்கும் இங்குக் கூறியது பொருந்தும்.

தாவர நூல், உயிர் நூல், விலங்கு நூல் ரஸாயனம் இவைகளைச் சேர்ந்த விஷயங்களைப்பற்றிய உரைகள் நல்லமுறையிலும் எளிய நடையிலும் எழுதப்பட்டுள்ளன. படங்களும் விஷயங்களை நன்கு விளக்கிக் காட்டுகின்றன. தென்னிந்தியாவில் எங்கும் எல்லோரும் காணும் தாவரங்களான ஆமணக்கு, அந்திமந்தாரை, பனை, நுணா, புல்லுருவி முதலியவைகளை உதாரணமாக எடுத்திருப்பது மெச்சத்தக்கது. அதுபோலவே எல்லோரும் அறிந்த தென்னிந்தியப் பறவைகளையே பறவைகளின் அலகு, கால்களுக்கு உதாரணமாகக் காட்டியிருப்பது உசிதமே.

விக்ஞான விஷயங்களில் எளிதில் அறியக்கூடிய தமிழ்ச்சொற்கள் இல்லையாயின் புதிதாகத் தமிழ்ச் சொற்கள் சிருஷ்டிப்பதைவிட விக்ஞான உலகத்தில் எங்கும் பிரசித்தமாய் வழங்கி வரும் இங்கிலீஷ் முதலிய பிறமொழிச்சொற்களை உபயோகித்திருப்பதே நன்முறை. உதாரணம் ஜுராஸிக், நைட்ரஜன், பாக்டீரியா, ஆல்கலாயிடு, மைக்ராஸ்கோப் (Microscope) என்ற சொற்களாகும்.

மாலிக்யூலுக்கு மூலக்கூறு என்ற சொல் கையாளப்பட்டிருக்கிறது. நைலான் என்ற தலைப்பின்கீழ் ராட்சத [மூலக்கூறு] என்ற சொல் காணப்படுகிறது. பக்கத்தில் இதற்குச் சமமான இங்கிலீஷ் சொல் கொடுக்கவில்லை. பொருள் எளிதில் விளங்கும் என்று தோன்றவில்லை. (Giant molecule) என்பதற்கு மாபெரும் மாலிக்யூல் என்றோ, பூத மூலக்கூறு என்றோ கூறினால் சுலபமாகப் பொருள் விளங்கலாம்.

ரஸாயனம், பௌதிகம், உடலியல், சுகாதாரம் இவைகளில் சர்க்கார் 1947 ௵ ஏப்ரல்மாதம் 10ஆம் தேதி வெளியிட்டிருக்கும் சொற்களையே கையாளுவது நலம். 1938௵ திருநெல்வேலியில் சென்னைமாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட கலைச்சொற்களைவிட எளிதில் விளங்குவதோடுகூட, மற்றத்தேசங்களில் வழங்கி வரும் சொற்களையும் ஒத்திருக்கின்றன.

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	,,	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	,,	53,00,000
ரிஸர்வ் நிதி	,,	62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும் நடத்தப்படுகின்றன.

N. கோபால அய்யர்
ஸெக்ரெடரி.



NPB

தி இந்தியன் பாங்க் லிட்.

பறவைகளின் அலகுபேதங்களும் கால் பேதங்களும், அவைகளால் அப்பட்சிகளுக்கு என்ன உபயோகம் என்றும் கூறப்பட்டிருக்கின்றன. அதுபோலவே பட்சிகளின் நிறபேதங்களைச் சொல்லும்போது, அந்தப் பேதங்களால் அவைகளுக்குப் பகையிடமிருந்து மறைவதற்கோ, ஆண் பெண் சேர்வதற்கோ ஏதேனும் உபயோகம் உளதோ என்று விசாரித்திருக்கலாம்.

கால் நடைகளுக்கு வரும் க்ஷயரோகம் என்ற தலைப்பின் கீழ் மடு என்று இரண்டு இடத்திலும் மடி என்று ஒரு இடத்திலும் பிரயோகம் காணப்படுகிறது. எல்லா விடத்திலும் மடி என்றே இருந்தால் பொருள் எளிதில் விளங்கும்.

பௌதிக (Physics) விஷயங்களில், நேர்மின் வாய், எதிர்மின்வாய் என்பதற்குப்பதிலாக (anode, cathode) என்று விக்ஞான உலகமெங்கும் வழங்கிவரும் சொற்களையே உபயோகித்திருக்கலாமென்று தோன்றுகிறது. எக்ஸ்ரேயின் உபயோகங்களைப்பற்றிச்சொல்லியிருப்பது மிகக் குறைவெனலாம். பரிணமம் (Evolution) என்பதை விவரிக்குமிடத்தில் டார்வின் எழுதிய இனங்களின் தோற்றம் (Origin of Species) என்னும் நூல் இக்கொள்கைக்கு முக்கிய ஆதாரம் என்று கூறப்படுகிறது. ஆனால் அந்த ஆதாரம் டார்வின் புதிதாகத்தெரிவித்த இயற்கையின் தேர்தல் (Natural Selection) என்ற கொள்கை என்று கூறப்படவில்லை. ஒருகால் இயற்கையின் தேர்தல் (Natural Selection) என்ற தலைப்பில் விவரிக்கலாம் என்றுலும் இந்தத் தலைப்பிலும் அதைப்பற்றி ஒரு குறிப்பு இருந்தால் சிறப்பாயிருக்கும்.

நீண்ட உரைகளுக்கு மாத்திரமாவது அவைகளை எழுதினவர் பெயரின் முதல் எழுத்துக்களை (initials) க்கீழே கொடுத்துப் புத்தகத்தின் முதலில் அவர்கள் யார் என்று விவரம் கொடுப்பது அவசியமென்று தோன்றுகிறது.

மாதிரிப் பிரதியில் காணும் வர்ணப் படங்களும் போட்டோக்களும் பாராட்டத்தக்க ஒரு அம்சமாகும். நடராஜர் படம் முதலில் கொடுத்திருப்பது கலைக்களஞ்சியத்திற்கு மிகவும் பொருத்தமானது. வீணையின் படத்தின்கீழ் எண்ணிட்டு அதன் உறுப்புக்களை விளக்கியிருக்கலாம்.

சிற்சில அச்சுப்பிழைகள் மாதிரிப் பிரதியில் காண்பவை புத்தகத்தில் திருத்தப்படும் என்பதில் சந்தேகமில்லை. 12 ஆம் பக்கத்தில் எஸ்க்ரே என்றும் 14 ஆம் பக்கத்தில் (molicule) என்றும் பிழைகள் காணப்படுகின்றன.

இக்கலைக்களஞ்சியத்தைத் தயாரித்துத் தமிழகத்துக்கு உதவும் பணியில் ஈடுபட்டிருக்கும் தமிழ்வளர்ச்சிக் கழகத்தாருக்கும், இக்காரியத்தைச் சீக்கிரம் முடித்துத்தர வேண்டும் என்பதில் உற்சாகமும் பெருமுயற்சியும் காண்பிக்கும் சென்னை கல்வி மந்திரி திரு. தி. சு. அவனாசிலிங்கம் செட்டியார் அவர்களுக்கும் தமிழகம் நன்றிபாராட்டக்கடமைப்பட்டிருக்கிறது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட அனைவரும் இப்பெரும் தமிழ்த் தொண்டுக்கு அவரவர்களால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

எம். ஆர். ராஜகோபாலன்.

எதிரொலி

ஜி.எஸ்.மணி

நாத ஆராய்ச்சியிலே அப்படிப்பட்ட பெரும் பித்து அவனுக்கு எப்படி ஏற்பட்டதென்றே அவனாலும் சொல்ல முடியாது. ஆயினும் எல்லை மீறிய பேரார்வம் ஒன்று எப்போதுமே அவனிடம் காணப்பட்டது. அந்த ஆர்வம் எதைப்பற்றியது என்பதுபற்றி யாராலும் ஊகிக்கவும் முடியாது.

எல்லா விதங்களிலும், வெளிப் பார்வைக்கு அவன் அசல் பித்தனைப்போலவே நடந்து கொண்டான். வெறித்த பார்வையுடன் எதையோ அடிக்கடி கவனித்துக் கேட்பான்; திடீரென்று அவன் முகம் மலரும்; மறுகணமே குவிந்துவிடும்; சூன்ய நோக்குடனே அவன் எதிலோ, தன்னையும் மறந்து லயித்துப்போவான்; மணிக் கணக்கிலே அதிலேயே ஆழ்ந்து விடுவான்; அப்போதெல்லாம் அவனுக்குத் தன்னுணர்ச்சியே இருக்காது; சுய உணர்வே கிடையாதென்றால் சுற்றுப்புறத்தைப் பற்றிய கவலையேது?

அவனை நன்றா யறிந்தவர்கள் அவனுக்கு, 'சப்த வேதி' என்று பெயரிட்டுக் குறிப்பிட்டார்கள்.

சப்த வேதி யென்றால் அபூர்வமானதொரு வில் வித்தையாம்; பொருள் கண்ணிற்குத் தெரியாமல்இருக்கச்சப்தத்தின் மூலம் அதை உணர்ந்துகொண்டு அம்பு எய்யும் கலையாம்; தசரதன் அந்தக் கலையை வெற்றியுடன் கையாண்டதாகச் சொல்லப்படுகிறது; அதன் மூலம்தான் அவன் பிற்காலத்திலே புத்திர சோகத்தால் உயிரிழக்கும்படி சாபம் பெற்றான் என்பதாக இதிகாசம் சொல்லிக் கொண்டு போகிறது.

விஞ்ஞான அறிவு வெகு வேகமாக முன்னேறிக்கொண்டுவரும் இந்த நவயுகத்திலும் 'சப்த வேதி'க்கு அடிகோலியாகி விட்டது.

என்னதான் இருந்தாலும் புராண இதிஹாசங்களுக்கும் அவனுக்கும் ஏணி வைத்தாலும் எட்டாது; விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் அவன் ஆராய்ச்சிக்கும் எத்தனை விதங்களில் முரண்பாடுகள் உண்டு என்பதை அவனும் அறிவான்.

நாதத்தின் மூலமாக எதையும் கண்டுபிடிக்க அவன் பேராவல் கொள்ளவேயில்லை; தன் ஆராய்ச்சிகளின் மீது அறிக்கைகள் விட்டுப் புகழும், பணமும், சம்பாதிக்கவும் அவன் ஆசைப்படவில்லை.

தன்னையும் மறந்து அவன் நாதத்திலேயே மூழ்கிவிட்டான்; கேட்கும் ஒலிகளில் ஒன்றிவிட்டான்; எதிர்ப்படும் சப்தங்களில் மயங்கி நின்றான்.

நள்ளிரவிலே, அமைதியின் ஆழத்திலிருந்து வெளிப்படும் சிறு சிறு சப்தங்கள், லேசாக வீசும் காற்றின் மெல்லொலி, கனத்து வீசும் புயலின் உரத்த குரல், இலைகளின் சலசலப்பு, உலகின் மறுகோடியிலிருந்து மெதுவாக மிதந்து வரும் ஒலியலை, பறவைகளின் கீதம்—முதலிய எல்லாவற்றிலுமே அவன் தனிப்பட்ட ஒரு இன்பத்தை உணர்ந்து அனுபவித்தான்.

அத்தகைய உணர்வு அவனுக்கு எவ்விதம் உண்டாயிற்று? குழந்தைப் பருவத்திலே நிகழ்ந்த ஏதோ நிகழ்ச்சியின் எதிரொலியா? அல்லது பித்துப் பிடித்த உள்ளத்தில் உண்டான வீண் பிரமைதானா?

வாழ்க்கையே சப்தச் சுழலின் மத்தியில்தான் ஓடுகிறது என்று அவன் உள்ளுணர்வு அறிவுறுத்தியது. நிசப்த மயமான வாழ்வு எப்படி இருக்கும்? ஒலியற்ற உலகம் எவ்விதம் இருக்கும்? அந்தப் பயங்கரத்தைக் கற்பனை செய்து பார்க்கக்கூட அவனால் முடியவில்லை.

பிறந்த குழந்தைகூட முதன் முதலிலே ஒலியின் மூலம்தான் அறிவுபெற முயற்சிக்கிறது; சப்தத்தை ஆதாரமாகக் கொண்டு தான் வாழ்வை உணரத் தொடங்குகிறது.

ஆரம்பமே அப்படி யிருக்கும்போது சாகுமளவும் ஒலிக்குள்ளாகவே புகுந்து புகுந்து புறப்படும் மனிதன் அனேக ஸந்தர்ப்பங்களில் தன் கூடவே ஓடிவரும் ஒலியைக் கவனிப்பதேயில்லை; அப்படிக் கவனித்தாலும் லக்ஷியம் செய்யாமல் புறக்கணித்து விடுகிறான்.

அகில உலகிலும் உண்டாகும் ஒலியெல்லாம், வெவ்வேறு வகையாக இல்லாமல் ஒரே விதமாகச் சப்தித்தால் எப்படி யிருக்கும்?

புருஷக் குரல்—பெண் குரல்—பறவையின் ஒலி—மிருகத்தின் கூப்பாடு—வெண்கல சப்தம்—வெள்ளி மணியோசை—இப்படிப் பல வகையில் புறப்படும் ஒலிகள் அனைத்தும் ஒரே மாதிரியாகவே இருந்தால் எப்படி யிருக்கும்?

அப்போதைய 'நாத இன்பம்' எவ்விதமிருக்கும்? அதை அவன் விரும்புவானா? அல்லது வெறுப்பானா?

'நாதம்' என்று எதைக் குறிப்பிடுகிறார்கள்? ஒலியேதான் நாதமா? அல்லது அவ்வொலிக்குப் பின்னால் தொடரும் மெல்லிய இழைவுக்குத்தான் அந்தப் பெயரா? அல்லது எவ்வொலிக்கும் அடியிலே—ஆழத்திலே—நடுமத்தியிலே—மேலே—அல்லது ஒலிகள் எல்லாம் கடந்து அப்பால்—வெகு தூரத்திலே—கேட்பதாக உணரப்படும் வெறும் கற்பனை தானா?

சட்டென்று வீணையை எடுத்து வைத்துக் கொண்டு மீட்டிப் பார்த்தான். பாட்டு ஒன்றும் வாசிக்கவில்லை; ஒவ்வொரு தந்தியாக வாளா மீட்டினான்; ஒலியின் கடைசியில் சுழன்றோடும் அந்த ஓங்காரம் தான் நாதமா?

வீணையின் தந்திகளை அவன் விரல்கள் மீண்டும் மீண்டும் மீட்டியபடியே இருந்தன.

அதிலிருந்து வெளிப்பட்ட அந்த நாத வெள்ளத்திலே அவன் ஆழ்ந்துவிட்டான்.

* * *

அவள் பெருமூச்செறிந்தாள்.

பக்கத்தில் இருந்த படுக்கையில் அவன் இல்லை.

மனமோகனமான இரவு இருந்தது; அவள் இருந்தாள். சேர்ந்து அனுபவிக்க அவன்தான் இல்லை.

அமைதியின் ஆழத்திலிருந்து வெளிப்படும் மெல்லிய பெருமூச்சை அனுபவிக்க எங்கே தொலைந்துபோய்விட்டானோ?

அவ்விடத்தியே இருந்திருந்தால் அமைதியற்ற உள்ளத்திலிருந்து வெளிக்கிளம்பும் உஷ்ணமான நெடுமூச்சை அருகிலேயே கேட்டிருக்கலாம்; அனுபவித்தும் இருக்கலாம்; ஆனால் சாந்தி நிறைந்த இரவின் குளுமையான மூச்சையுணர வெளியில்தானே போக வேண்டும்?

கனல் கக்கும் அவளிடம் குளுமையை உண்டாக்க அவனால் முடியவே முடியாதா? ஆயினும் அது அவனிடம் தான் இருந்தது; அதை அவள் அறிவாள்; ஆனால் அவன் அறிவானோ?

அதைப்போல் எத்தனையோ இரவுகள் வியர்த்தமாகவே கழிந்திருக்கின்றன; இன்னும் எத்தனை இரவுகளை அதேமாதிரி கடக்க வேண்டுமோ?

அவளிடம் இல்லாத இன்பத்தை அவன் வெளியில் என்று காணப் போகிறான்? அவளால் கொடுக்க இயலாததை அந்த வெறும் இரவு அவனுக்குக் கொடுத்துவிடுமா? உள்ள உறவின் அந்தரங்கத்திலே அடைய முடியாத ஆனந்தம் தனிமைக் குரலிலே கிடைத்து விடுமா?

அவளுக்கு ஆதங்கம் மிஞ்சிவிட்டது! 'விருட்' டென்று படுக்கையை விட்டெழுந்து வெளிப்பக்கம் போய்ப் பார்த்தாள்.

பால் நிலவு பொழிந்து கொண்டிருந்தது.

மிருதுவான தென்றல் உடம்பை வருடிச் சென்றது.

தூக்கம் கலைந்த பக்ஷியொன்று இனிய குரலெடுத்துப் பாடிக்கொண்டிருந்தது.

அவனைத்தான் காணோம். இந்த நடுநிசியில் எங்கேதான் போய் உட்கார்ந்து கிடப்பான்? என்னதான் செய்வான்?

ஏமாற்றத்துடன் திரும்பினாள்; கொல்லைப் புறக் கதவு திறந்திருப்பதைக் கவனித்தாள்; அங்கே போய்ப் பார்த்தாள்.

கிணற்றங்கரையிலே அவன் ஏகாந்தமாய் அமர்ந்திருப்பதைக் கண்டு, ஒரு நிமிஷம் திகைத்தாள்; இப்படித் தனிமையில் போய் உட்கார்ந்திருக்கப் பயமாய்த்தான் இருக்காதோ?

கதவுப் பக்கமாக நின்றபடி அவனை நிதானமாய்க் கவனித்தாள்: மெய்மறந்த நிலையில் தான் அவன் உட்கார்ந்திருந்தான். பார்வை பூமியில் நிலைத்துப் பதிந்திருந்தது.

அங்கே அப்படி என்ன பார்க்கிறான்? அல்லது எதைக் கேட்கிறான்?

சுற்றிலும் சூழ்ந்திருந்த நிசப்தத்தின் மேலாகத் தென்னங்கீற்றுகள் சலசலத்தன; நடுநடுவே பக்கத்திலிருந்த சவுக்குத் தோப்பிலே புகுந்து புறப்பட்ட காற்று மெதுவாக உய்-உய்யென்று ஒலித்தது. தூக்கம்கலைந்துபோன அந்தபறவையின்



சென்னை-600 005. 198062

குரல் இப்போது விட்டுவிட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது.

'இதென்ன பித்துக்கொள்ளித் தனமாய் இருக்கிறது' என்றெண்ணிய அவளுக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது; நேரே அவனிடம் போனாள்; அவன் தோளைப் பிடித்து ஆட்டினாள்.

அவன் திடுக்கிட்டுத் தலைநிமிர்ந்து பார்த்தான். "நீயா!"

"ஆமாம்; என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் இங்கே?"

"ஒன்றுமில்லை; இங்கே சவுக்குத் தோப்பில் காற்றுப் புகுந்து ஓடுகிறதே: அதனால் உண்டாகும் சப்தத்திற்கும் அலையோசைக்கும் உள்ள ஒற்றுமையை எண்ணிப் பார்த்தேன்."

"உங்களுக்கும்—எனக்கும் உள்ள ஒற்றுமைதான் அவையிரண்டுக்கும் என்று தெரிந்துகொண்டீர்களாக்கும்!" என்று வயிற்றெரிச்சலோடு சொன்னாள் அவள்.

"ஏன்?"

"எதற்காகத்தான் என்னைக் கல்யாணம் செய்துகொண்டீர்கள்?"

mall, N41kV

"உன் குரல் இனிமைக்காகவேதான்!" என்று அவன் பளிச்சென்று பதில் சொன்னதும் அவள் திகைத்துவிட்டாள்.

"என் குரலினிமையில்கூட உங்களுக்கு இப்போது சலிப்பு ஏற்பட்டு விட்டதாக்கும்?" என்று வினவினுள்.

"பழைய கவர்ச்சி உன் குரலில் இப்போது இல்லை என்பதும் வாஸ்தவம்தான்!" என்று அதற்கும் அவன் பதில் கொடுத்தான்.

"அடிக்கடி கேட்டுக் கேட்டுப் புளித்து விட்டதோ?" என்று அவள் முகத்தைச் சுளித்துக்கொண்டாள்.

"பருவத்திற்கேற்றபடி குரலும் மாறிக் கொண்டே வருகிறது; சிறுமியின் குரலொலி யுவதிக்கு இருப்பதில்லை; யுவதியின் குரலின் பத்தைக் கிழவியிடம் கேட்க முடியாது."

"நான் கிழவியாகி விட்டேனென்று முடிவு கட்டி விட்டீர்களா?" என்று அவள் கேட்டாள்.

அதற்குமட்டும் அவன் பதில் சொல்ல வில்லை; ஆனுல் வாய்விட்டுச் சிரித்தான்.

"நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்: இந்தச் சப்தப் பைத்தியம் உங்களை விட்டு நீங்காத வரையில் உங்களுக்கும் விமோசனம் இல்லை; எனக்கும் விமோசனம் கிடைக்காது" என்று அவள் மீண்டும் தீராத வயிற்றெரிச்சலுடன் சொன்னுள்.

* * *

எங்கும் மையிருள் கவிந்து கொண்டு கிடந்தது. வாடைக்காற்று பேயாய் அலைந்து கொண்டிருந்தது. கதவுகளின் இடுக்கு வழியாகவும், திறந்த ஜன்னல் வழியாகவும் 'உய்—உய்' என்று ஊளையிட்டபடி உள்ளே புகுந்தது.

அவன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அவள் தன் படுக்கையில் புரண்டு படுத்தாள்; இருட்டில் வெள்ளை தெரிந்தது.

"இன்னும் தூங்கவில்லையா நீங்கள்? இந்தக் கும்மிருட்டில் உட்கார்ந்து என்ன செய்கிறீர்கள்?"

"இருட்டில் உட்கார்ந்தபடி காற்றின் ஓலத்தைக் கேட்கிறேன்; ஊமைக் கோட்டான் உறுமுவது போலே படுகிறது."

"நாசமாய்ப் போச்சு!" என்றுள் அவள்; சிறிது நேரம் சென்ற பிறகு, "நிச்சயமாய்ச் சொல்லுகிறேன்: உங்களுக்குப் பைத்தியம் தான் பிடித்து விட்டது!" என்று மீண்டும் முணுமுணுத்தாள்.

அவன் வாய் திறக்கவில்லை.

அவள் பெருமூச்செறிந்தாள்.

வாடைக் காற்று வீசுவதுநின்றுவிட்டது.

அப்புறம், வாஸ்தவத்தில், எங்கோ, தூரத்திலிருந்து, ஒரு ஊமைக் கோட்டானே உறுமும் சப்தம் கேட்டது.

"ஊமைக் கோட்டானேதான் இப்போது உறுமுகிறது; ஆனுல் உங்களுக்குக் காற்று உறுமுவது போலவே படுகிறதாக்கும்!" என்றுள் அவள்.

அவனிடமிருந்து அப்போதும் பதில் கிளம்பவில்லை.

"நீங்கள் இந்தமாதிரியே இருந்து வந்தால் நான் எங்கேயாவது ஆற்றில்—கிணற்றில் விழுந்து என் பிராணனை விடவேண்டியது தான்; வேறு வழியில்லை" என்று மிகுந்த சலிப்புடன் சொன்னுள் அவள்.

நிசப்தம்தான் நிலவியது.

ஊமைக்கோட்டானின் ஹுங்காரம் வீட்டுக் கொல்லைபுறத்திலிருந்தே வரத் தொடங்கியது.

"அந்த ஹுங்காரத்திலும் ஓங்காரமே ஒலிக்கிறது!" என்று அவன் சொன்னுன் அப்போது.

இந்த முறை அவள் ஒன்றும் பேசவில்லை. ஆனுல் பெருமூச்செறிவது தெளிவாகக் கேட்டது.

"நல்ல பாம்பு படமெடுத்துச் சீறுவது போலே நீ பெருமூச்சு விடுகிருய்!" என்றுன் அவன்.

"ஐயோ-கடவுளே! உங்கள் உடம்புக்கு என்னதான் வந்து விட்டதோ—தெரியவில்லையே" என்று சொல்லி அவள் அழுது விட்டாள் பரிதாபகரமாக.

"என் உடம்புக்கு ஒன்றுமேயில்லை; கவலைப்படாதே" என்று அவன் அவளைத் தேற்றினுன்.

"பின் ஏனிப்படி மனம் போனபடி பிதற்றுகிறீர்கள்?"

"உளறவில்லை; உண்மையைத்தான் சொல்லுகிறேன். கொஞ்ச நாட்களாக நம் வீட்டுக் கொல்லைப்புறம்-மூங்கில் புதரிலிருந்து பாம்பு

SOLAR WORKS

12, THAMBU CHETTY STREET, MADRAS-1.

Manufacturers of:

All kinds of Envelopes, Cloth lined Bags,
&
Account Books

PRINTERS & BINDERS

•

Envelopes out of foreign manilla Paper, available from ready stocks at very competitive rates

•

Suppliers to Railways, Corporation of Madras, Postal Dept., Banks, Insurance Companies & other Public and Commercial Offices.

•

Expert men and the best materials always used. Our charges are moderate and would compare favourably consistent with high class workmanship.



உழைப்பின் மாண்பு......

தேர்ச்சிபெற்ற உழைப்பாளிக்குத்தான் உழைப்பின் பெருமையை நன்கு உணர முடியும்.

இந்தியாவுக்கென்று தனிச் சிறப்புடைய கடிகார வகைகளை கடந்த 76 ஆண்டுகளாகத் தயாரித்து வருவதில் நாங்கள் பெருமைப்பட உரிமை இருக்கிறது. **"வெஸ்ட் எண்ட்"** பரம்பரை இயல்புகளான நம்பிக்கை, உறுதி கவர்ச்சிகரமான தோற்றம் இவை ஒவ்வொரு வாட்சிலும் அமையப் பெறும்படி செய்வதில் எங்கள் தொழிலாளிக்கும் ஆர்வம் அதிகம். நீங்கள் எவ்விலை கொடுத்து வாங்கினாலும் விலைக்குச் சற்று அதிகமான வேலைத்திறன் பொருந்திய வாட்சுகளையே வழங்குகிறோம்.



"ஸெகண்டஸ் டோனா"

வெஸ்ட் எண்ட் பேடண்ட் எவர்ப்ரைட் ஸ்டீல்	... ரூ. 76/-
ரோல்ட் கோல்ட், இருபது மைக்ரான் ரகம்	... ரூ. 90/-

போதுமான ஸ்டாக்குகள் கைவசமில்லாமலிருப்பதனால் விளம்பரப்படுத்தப்படும் ஒவ்வொரு வாட்ச் வகையும் கொடுக்க முடியும் என்று உறுதியளிக்க இயலாது. எனினும் எங்களால் முடிந்தவரை தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறோம்.

வெஸ்ட் எண்ட் வாட்ச் கோ.,
பம்பாய் :: கல்கத்தா

WEST END WATCH CO.

BOMBAY CALCUTTA

ஒன்று சீறிக்கொண்டே யிருப்பதைத் தினமும், தவருமல் கேட்கிறேன்."

"பாம்பா?" என்று ரகசியக் குரலில் கேட்டு அவள் நடுங்கினுள்.

"ஆமாம்; எதற்காக நீ இப்படி பயந்து நடுங்குகிருய்?

"என்ன கஷ்டம் இன்னும் வரக் காத்திருக்கிறதோ, தெரியவில்லையே, பகவானே!" என்று அவள் ஏங்கினுள்.

"கஷ்டம் வருவானேன்?"

"அந்தப் பாம்பு நம் வீட்டினுள்ளே வந்து விட்டால்? நீங்களே அழைத்துக்கொண்டு வந்தாலும் வந்து விடுவீர்கள்! அதுதான் 'சப்தவேதி'யாயிற்றே. நீங்கள்! நல்லமகானுபவர்—எனக்கென்று வந்து வாய்த்தீர்கள்!" என்று உள்ளம் மிகவும் நொந்தவளாய் அவள் அலுத்துக் கொண்டாள்.

இப்போது அவன் பதில் சொல்லவில்லை! 'சப்த வேதி'யென்ற அந்தச் சொல் அவன் உள்ளத்திலே தீவிரமாக வேலை செய்யத் தொடங்கியது.

* * *

கிராமமே ஆழ்ந்த நித்திரையில் இருப்பதை இரவின் அமைதி தெளிவாக எடுத்துக்காட்டியது. நிர்மலமாயிருந்த வான வீதியிலே எங்கும் தவழ்ந்த சாந்தியை அனுபவித்துக்கொண்டு பூர்ணசந்திரனும் ஏகாந்தமாய்ப் போய்க்கொண்டிருந்தான்.

அவள் திடீரென்று தூக்கம் கலைந்து விழித்துக் கொண்டாள்; பக்கத்துப் படுக்கையை வழக்கம் போலே பார்த்தாள்.

அவன் இல்லை.

வீட்டுக் கொல்லைப்புறமிருந்து யாரோ இன்பமயமாகச் சீட்டியடித்துக் கொண்டிருந்த ஒலி காற்றில் தவழ்ந்துவந்து காதில் விழுந்தது.

நன்ருகக் கவனித்துக் கேட்டாள்; புன்னுகவராளி ராகத்தை யாரோ அதியற்புதமாக இழைத்துக் கொண்டிருந்தது தெளிவாகக்

கேட்டது. அவ்வளவு அழகாகச் சீட்டியடிக்கத்தெரிந்தவன் அந்தப் பக்கத்திலேயே அவன் ஒருவன்தான்.

அந்த நேரத்தில் புன்னாகவராளியை இசைத்துக்கொண்டு கொல்லைப்புறம் அவன் என்ன செய்கிறான்?

பதறியெழுந்தவளாய், கொல்லைப் புறம் ஓடினாள்.

நிலவொளியிலே அங்கே அவள் கண்ட காட்சி ரத்தத்தை உறையச் செய்துவிட்டது.

புன்னாகவராளியை இசைத்துக்கொண்டிருந்தவன் அவனே; அவனுக்கு ஆறேழு அடி தூரத்திலே ஒரு முரட்டு ஸர்ப்பம் படமெடுத்து ஆடிக்கொண்டிருந்தது; ராகத்தை இசைத்துக்கொண்டு அவன் போகும் பக்கமெல்லாம் இசையில் மயங்கி நின்ற அந்த நாகமும் பின்தொடர்ந்து கொண்டேயிருந்தது.

நின்ற இடத்திலேயே அவள் கல்லாய்ச் சமைந்துவிட்டாள்; சுய உணர்வு வரச் சில நிமிஷங்கள் ஆயின.

பெரிய மூங்கில் கழியொன்றை அவசரமாகத் தேடி எடுத்துக்கொண்டு பதட்டத்துடன் அவள் பாய்ந்தோடினாள்: வெறி பிடித்த நிலையில், "விஷப் பாம்புடனா உங்கள் விளையாட்டை வைத்துக்கொண்டு விட்டீர்கள்?" என்று அலறியபடியே கையில் பிடித்திருந்த கழியால் பாம்பின்மீது அடித்தாள்.

வெகுண்டு வந்த பாம்பு அவள் காலைக் கொத்திவிட்டு ஓடி மறைந்தது.

அவன் கற்சிலையாகி விட்டான்.

*　　　*　　　*

அப்புறம் உன்மத்தம் கொண்ட நிலையிலே அவன் எழுதி வைத்திருந்த சில வரிகளைக் கிராமத்தில் யார் யாரோ படித்துப் பார்த்தார்கள்; அந்த வரிகள் பின் வருபவை:

"ஓசை யின்பத்திலே என்னையும் அறியாமல் ஒரு வெறிகொண்டேன்; அதன்பலனாகப் பாம்பின் விஷப் பல்லுக்கு என் மனைவியின் பெருமூச்சையும் பலிகொடுத்துவிட்டேன். எனக்கு இருந்த ஒரு பந்தமும் அறுந்துவிட்டது. இனி என் வீட்டிலே ஓசை யின்பத்தைப் பெற்று அனுபவிக்க முடியாது; என் மனைவியின் பெருமூச்சிலே என் வீட்டுப் பாத்திரம் பண்டங்களின் ஓசையும் கரைந்துவிட்டது: இனி மீண்டும் அவற்றைக் கேட்டு அனுபவிக்க முடியாது. பாத்திரங்களெல்லாம் ஒலியிழந்து கிடக்கின்றன: என் வீடும் களையிழந்து விட்டது. அவள் பெருமூச்சுகளிலே நல்ல பாம்பின் உஷ்ணம் கலந்த சீறலை உணர்ந்து வந்தேன்; இனி அவள் பெருமூச்சைக் கேட்க முடியாது. ஆனால் பாம்பின் சீறலை உணரும்போதெல்லாம் கட்டாயம் அவள் பெருமூச்சையும் உணருவேன். இப்போது அவள் இங்கே இல்லை: ஆகவே எனக்கும் இங்கு வேலையில்லை. பாம்பு எங்குமிருக்கிறது; ஓசையும் உலகமெல்லாம் வியாபித்துளது; ஆகவே நானும் வேறெங்கே வேண்டுமானாலும் இருக்கலாம்; ஆனால் நிசப்தமயமாகி நிற்கும் இந்த வீட்டில் மட்டும் என்னால் இருக்கவே முடியாது; வளைக்கரங்களின் ஒலியின்றி நிற்கும் இந்த இடத்தில் இருக்கமாட்டேன்! இனிமையான குரலொலி இறந்துபோய்விட்ட இடத்தில் தங்கவே மாட்டேன்; என் வாழ்வின் எதிரொலியைத் தேடிக்கொண்டு நான் வேறெங்கோ போகிறேன்."

—:oOo:—

காவேரி சந்தா விகிதம்

சந்தா விபரம்	உள் நாடு	சிலோன், பர்மா & மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு
ஒரு வருஷம்	6 0 0	7 8 0
அரை வருஷம்	3 0 0	3 12 0
தனிப் பிரதி ஒன்றுக்கு	0 8 0	0 10 0

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாஸிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.

ஸர்குலேஷன் மானேஜர், காவேரி,
பெஸண்ட் ரோடு, கும்பகோணம்.

கே. எம். முன்ஷி

(மூலம்—குஜராத்தியில்)

ஹிந்தி மொழி பெயர்ப்பு—பிரவாசீ லால் வர்மா.

ஹிந்தியிலிருந்து தமிழில்—"சேதி"

பூதம்

1150ஆம் வருஷம்

முதுவேனிற் காலத்தின் இனிய மாலை நேரம் இரவில் ஒளிந்து கொண்டிருந்தது. ஸப்தமி. அஷ்டமியின் அர்த்தசந்திரன் வர வர ஒளி பெருகி ஏறிக்கொண்டிருந்தான். பட்டண் நகரம் செல்லும் பாதை ஆள் நடமாட்டம் அற்று, பயமுறுத்திக்கொண்டிருந்தது. அக்கம் பக்கத்திலுள்ள தோப்புகளின் மரங்கள் சலசலத்துக்கொண்டிருந்தன. தொலைவிலிருந்து வரும் நரியின் ஊளை அமைதியை அச்சுறுத்தும் வண்ணம் குலைத்துக் கொண்டிருந்தது. இப்படிப்பட்ட வழியில் கொள்ளைக்காரர்கள் பஹார்வடிகள் (ராஜாங்க விரோதிகள்) இவர்களைப்பற்றிக் கொஞ்சம்கூட அஞ்சாமல் இரண்டு குதிரை வீரர்கள் பட்டண் நகர் பக்கம் சென்று கொண்டிருந்தனர்.

முதல் குதிரை மேலிருந்தவன் வலிவும் உரமும் கொண்ட போர் வீரனைக் காணப்பட்டான். அவனுடைய பெரிய ஒளி பொருந்திய கண்கள், இருட்டிலே, பார்வையை ஏமாற்றி நிற்கும் பட்டண் நகரக் கோட்டையை நோக்கி யிருந்தன. அவன் ஓடும் குதிரையை இன்னும் தூண்டிக்கொண்டிருந்தான். அந்தக் காலத்து ராஜபுத்திரர்களைப் போலவே அவன் உடையணிந்திருந்தான். வண்டடைந்தாற் போலிருந்த அவன் நீளமில்லாத தாடி காதுடன் சேர்ந்திருந்தது.

பின்னால் வந்தவன் பதினேழு வயதுகள் நிரம்பிய அழகும், சஞ்சலமும், அவசரப் போக்கும் கொண்ட இளைஞன். அவன் அழகிய கண்கள் வேகமாகச் செல்லும் போதும் சுற்றிலுமுள்ள அழகை ரஸிப்பதில் குறையவில்லை. அவனும் மற்றவனைப்போல் ராஜபுத்திர உடையணிந்திருந்தான்.

உருப்புரியாத அழகுடன் சூழ்ந்து நின்று, அமைதி மயக்கி மிளிர்ந்து விளங்கிற்று. களைத்த உள்ளத்துக்கும் உவப்பும் உத்ஸாகமும் ஊட்டும் அந்தச் சூழ்நிலையில்கூட முதலில் சென்ற வீரன் மனம் அமைதி இழந்திருந்தது. அவன் புருவங்கள் நெளிந்து நெற்றியில் ஏறி நின்றன.'

கொஞ்ச தூரம் முன்னே சென்ற அவன் திடீரென்று குதிரையை நிறுத்தித் திரும்பி, "ஏன், திரிபுவன்! இந்த ஒற்றையடிப் பாதை வழி சென்றால் சீக்கிரம் பட்டண் நகரை அடைந்து விடலாம்—இல்லையா?" என்று கேட்டான். திரிபுவன் முறுவலித்துச் சொன்னான், 'எனக்குத் தெரியவில்லையே!

இது யாருடைய வயல் போலல்லவா காண்கிறது!'

"அதனால் என்ன? அதோ அருகில் ஜைன சந்நியாசிகள் உபாச்ரயம் (தங்கு

(ஹிந்திப்பிரதி பிரசுரகர்த்தாவான ஹிந்தி கிரந்த ரத்னாகர காரியாலயத்தைச் சார்ந்த க. ஸ்ரீ நாதுராம்பிரேமி அவர்கள் அனுமதி பெற்றது.)

மிடம்) இருக்கிறது. அங்கே சென்று மேலே போகவேண்டும்" என்று சொல்லி முதல் வீரன் மேலே சென்றான்.

ஒற்றையடிப்பாதை மிகவும்குறுகலாயிருந்தது. மேலே கவிந்திருந்த மரங்களின் மேகங்களைத் தாண்டிவர, சந்திர கிரணங்கள் சிரமப்பட்டுக் கொண்டிருந்தன. இருந்தாலும் குதிரை நல்ல கெட்டிக்காரக் குதிரை; நம்பகமுள்ள குதிரை. அதனிடம் உயிரை ஒப்புவித்துத் தைரியமாய்ச்சென்றான் வீரன்.

மையுடன் உலர்ந்துகாணப்பட்டது. மலர்ந்த பெரிய கண்கள் மங்கிக் காணப்பட்டன. கீழே விழுந்து கொண்டே அந்த வீரன் இதை எல்லாம் பார்த்து விட்டான். ஒரே நிமிஷம்: அவன் அவளுடைய ஒவ்வொரு நெளிவையும், அங்கத்தையும் படம் பிடித்து விட்டான்; ஒரே நிமிஷம் அவன் தன்னை மறந்தான். வெடுக்கென்று உதறியெழுந்து தூசியைக்கூடத் தட்ட மறந்து கல்லை நோக்கிப்பாய்ந்தான். யார் அது?...... ஆனால்......

சற்று நேரத்தில் பாதை அகன்று காட்டிற்று. மரங்களால் சூழப்பட்ட ஓர் களம் வந்தது. வீரன் தனக்குத் தானே யோசித்துக் கொண்டு இதையெல்லாம் கவனிக்காமல் மேலே சென்று கொண்டிருந்தான்.

திடீரென்று முன்னே சென்ற குதிரை கால் தள்ளாடிற்று; அது வேகத்தின் ஆவேசத்தில் அடித்துக்கொண்டு கீழே விழுந்தது. வீரனும் அதனுடனேயே கீழே விழுந்து விட்டான். கீழே விழும்போதும் உடல் வலியை மறந்து அவன் கண்கள் எதிரேயுள்ள ஓர் கல்லின் மேல் சென்றடைந்தன. நிலவும் மாலையின் மந்தஒளியும் சேர்ந்த அந்த அழகிய கனவொளியில் அவன் அதன் மேல் ஒரு மங்கையைக் கண்டான்.

அவள் ஆடம்பரமற்ற வெண்மையான புடவை அணிந்திருந்தாள். முக கமலம் இனி

கல்தானிருந்தது! வீரனின் கண்கள் சுழன்றன; அங்கங்கள் கழன்று நின்றன! சுற்றுமுற்றும் ஊடுருவிய கண்கள் ஒருவரையும் காணவில்லை. கனவா? கண்களைக் கசக்கினான். வெறி கொண்டவன் போல் உள்ளமுடைந்து பேந்தப்பேந்த விழித்தான். "இது என்ன பிரமை! கடவுளே" என்று முணுமுணுத்தான். முகம் வெளிறி, தயவுப் பிச்சை கேட்டது. உள்ளம் சுக்குநூறாக வெடித்துவிடும் போலிருந்தது. தலையின் சுமையைத் தாங்க இரு கைகளையும் இரு காதுகளுக்கடியில் தாங்கி அமுக்கினான். நெற்றியில் துளித்து எழுந்த வியர்வையைத் துடைத்துத் தள்ளினான். பெருமூச்சு விட்டான். உருப்புரியாத ஒரு பயத்தினால் அவன் உடல் துடித்தது.

இதற்குள் இளைஞனும் வந்து சேர்ந்து விட்டான். "அப்பா! இது என்ன பார்க்கிறீர்கள்? குதிரையிலிருந்து கீழே விழுந்து விட்டீர்களா?"

தந்தை மிகவும் சிரமப்பட்டு மனதை ஒரு நிலைப்படுத்தி, "இல்லை, அப்பா! குதிரை கொஞ்சம் வெடவெடத்து விட்டது" என்றான்.

"என்ன குதிரை களைத்து விட்டதா? நீங்கள் விழுந்துவிட்டீர்களா?" என்று சொல்லி, திரிபுவன் லேசாகச் சிரித்தான். குதிரையுடன் அருகில் வந்து அப்பாவின் முகத்தைப் பார்த்தான். அச்சம் காட்டும் தந்தை முகத்தைப் பார்த்து அவன் வாளாவிருந்தான். தந்தையின் குணம் அவனுக்குப் புதிதல்ல. இந்த மாதிரி சமயங்களில் சும்மா இருப்பதையே அவன் விரும்பினான். தந்தை உதட்டைக் கடித்துக்கொண்டு குதிரையருகில் வந்தான். வந்தவன் அதை இறுகப் பிடித்தான். சலித்துப்போய் அலக்ஷியமாய் அதன் முதுகில் கடிவாளக் கயிற்றை வீசி எறிந்துவிட்டு, மார்பில் முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு மிகுந்த யோசனையில் ஆழ்ந்து விட்டான். ஒரே நிமிஷத்தில் கிழத்தனம் வந்து அமுக்கி விட்டது போல் தோன்றிற்று.

பின்னால் படபடப்புள்ள பையன் தந்தையின் துயரைக் கண்டான். பேசி மேலும் அவன் துயரை அதிகரிக்க விரும்பவில்லை. மூடியவாயுடன் அவனும் குதிரையை ஆறுதலான நடையில் மேலேசெலுத்த ஆரம்பித்தான். முதல் குதிரையும் அதன் நடையில் போய்க் கொண்டிருந்தது.

கொஞ்ச நேரம் இதே மாதிரி நடந்தபிறகு முன் சென்ற வீரன் எண்ணக்கயிறு அறுந்தது. யாரோ சொன்னது காதில் விழுந்தது. "ஓய்! வேலி அடைத்திருக்கிறது. அந்தப் பக்கம் எங்கே போய் முள்ளில் மாட்டிக் கொள்ளப்போகிறீர்?"

அசுவாரோஹி ஒரு முறை மனதை ஸ்திரப் படுத்திக்கொண்டு—"ஏன் வழி அடைத்திருக்கிறதா?"

"ஆமாம், திரும்பி இந்தப் பக்கம் போம். வழி சரியாய் இருக்கிறது."

"இது யாருடைய இடம்?"

பின்னால் வந்த குமரன் சொன்னான்.—அப்பா தெரியவில்லையா? இது மந்திரி விமலரின் ஜைன மடம்."

"சரிதான்."

பையன் கேட்டான்—"பட்டண் நகரின் வாயில் இன்னும் எவ்வளவு தூரம் இருக்கிறது?"

"இதோ, இன்னும் இரண்டு வயலிடை இருக்கிறது. இந்த வழியே போ!" அந்த ஆள் வழியைச் சுட்டிக் காட்டினான். தந்தையும் தனயனும் பக்கத்தில் செல்ல ஆரம்பித்தனர்.

"மிகவும் நேரமாகிவிடும். கோட்டைக் கதவு மூடப்பட்டுவிட்டால் மிகவும் தொந்தரவாகிவிடும்."

பையன் சொன்னான்: "அந்தயதி வழியில் மிகவும் நேரம் கடத்திவிட்டார். அவர் சிறந்த அடியார் போலவே காணப்பட்டார்."

"பையா! இன்று சந்திராவதி ஜைனர்கள் பெருமையில் பருத்திருக்கிறார்கள். அவர்கள் பட்டண் நகரையும் தங்கள் வசமாக்கப்பார்க்கிறார்கள். என்ன செய்வது? என்னாலே ஒன்றும் முடியவில்லை!"

"அப்பா! இவ்வளவு இரைந்து பேசாதீர்கள்! யாராகிலும் கேட்டுவிடப் போகிறார்கள்."

“ஆம் அப்பா! மறந்துபோய்விட்டது. அதோபார். கோட்டை தென்பட ஆரம்பித்து விட்டது. திரிபுவன்! அந்த யதி நமக்கு முன்னமே கிளம்பிவிட்டாரே: இவ்வளவு நேரம் போய்ச் சேர்ந்திருப்பாரல்லவா?”

“போயிருப்பார். நாம் அசதியில் சற்றே தூங்கிவிட்டோம். அவர் கிளம்பிவிட்டார்.”

அவர்கள் பட்டண் நகர் வாயில் வந்து சேர்ந்ததும் கதவு சாத்தத் தயாராயிருந்தது. பேசாமல் அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். கொஞ்ச தூரம் சென்றதும் தந்தை குதிரையை நிறுத்தி, மகனிடம் “திரிபுவன்! நான் அரண்மனைக்குப் போகிறேன். நீ உன்னிடத்துக்குச்செல்” என்று சொன்னான்.

திரிபுவன் அன்பும் ஆதரவும் நிறைந்த கண்களால் கொஞ்ச நேரம் பார்த்துக் கொண்டேயிருந்தான். பிறகு சொன்னான்: “அப்பா தனியாகப்போகிறீர்களே! ஏதாவது நேர்ந்துவிட்டால்?”

“அட அசடே! எனக்கு என்ன நேரும்? அதற்கு ஒருவன் பலம் படைத்திருக்கிறானா என்ன?”

“அப்பா, காலம் சரியில்லை. தாங்கள் எடுத்திருக்கும் காரியமும் மிகவும்............”

“அதிலே பயமென்ன? இம்மாதிரி காரியங்கள் எனக்குப் புதியவையா?”

“ஆனால் மாமா மிகவும் உரம் கொண்டவராயிற்றே!”

“போடா போ. போய் நிம்மதியாய்த் தூங்கு. இப்படி எவ்வளவோ மந்திரியைப் பார்த்திருக்கிறேன்.”

“நல்லது நாளைக் காலையில் சமாசாரம் தெரிவியுங்கள்”

“நீ ஒன்றிற்கும் கவலை கொள்ளாதே” தந்தை சென்று விட்டார். பையன் சற்று நேரம் பொறுத்து, அதே பக்கம் அவனும் சென்றான்.

வருவதுரைத்தல்

ராஜபுத்திரன் அரண்மனையின் பின் பக்கத்தில் ஓர் சிறிய கதவருகே வந்து சேர்ந்தான். அது வேலைக்காரர்கள் வரப்போக என ஏற்பட்ட வழி. அவன் அதைத் தட்டினான். சற்று நேரத்தில் ஒரு மங்கை கதவைத் திறந்தாள்—யார் அது ‘பீமா?’

வீரன் சற்றே மலர நகைத்துச் சொன்னான்: “இல்லை. கொஞ்சம் சமரசேனைக் கூப்பிடுவாயா?”

அவள் வெட்கித் தலைகுனிந்து உள்ளே சென்றுவிட்டாள்.

வீரன் சற்று நேரம் பொறுத்தான். சலித்துப்போய்க் குதிரையைப் பக்கத்தில் ஒரு மூலையில் கட்டிவிட்டு உள்ளே நுழைந்தான். அவனுக்கு அந்த அரண்மனையில் மூலை முடுக்குகள் கூடத் தெரியும்போலும்! அவன் இடதுபுறமாக வேலைக்காரர்கள் இருப்பிடத்துக்குச் சென்று ஒரு வீட்டின் வாசற் கதவைத் தட்டினான்.

“இது யாரப்பா இப்பொழுது?” என்று சொல்லிக்கொண்டே ஒரு கிழவன் கதவைத் திறந்தான். வீரனைப் பார்த்த அவன் கண்கள் இமை அகன்று விரிந்தன!—‘யாரு?’

“அட, நான்தான்! இமை விட்டுப்போய் விடப் போகிறது! சத்தம் போடாதே. வா உள்ளே!”

வீரன் உள்ளே சென்றான். மறக்காமல் கதவைத் தாளிட்டான். சோப்தார் (gate keeper) கைகட்டி எதிரேநின்றான்.

“பிரபு! இந்தச் சமயம் இங்கே.........தாங்கள்?”

“ஸமர்! இங்கேதான் தற்சமயம் எனக்கு வேலையிருக்கிறது. இப்பொழுது வரவில்லை என்றால் வாழ்க்கை முழுவதும் தேஹஸ்தலத்தில் கிடந்து மடிய வேண்டியதுதான்.”

“ஆனால், எஜமான், மந்திரி முஞ்ஜால் அல்லது ராணி மீனல் தேவிக்குத் தெரிந்து போய் விட்டால்...........”

“தெரிந்தால் என்ன? மூன்று நான்கு நாட்கள் இவ்விதமே கடந்து விட்டால் பிறகு ஒன்றும் தொந்தரவிருக்காது.”

“எஜமான் சொற்படியே. பிறகு.........”

“பிறகு என்ன? சாப்பிட ஏதாவது இருந்தால் கொண்டு வா. பிறகு வைத்தியர் லீலாதரரைக் கூப்பிட்டு வா.”

“கடவுளே, அது முடியாதே. அவர் எப்பொழுதும் மகாராஜாவின் சமீபத்திலேயே அல்லவா இருக்கிறார்.”

“சரி, அவர் மாப்பிள்ளை ‘வாசஸ்பதி’ என்ன செய்கிறார்?”

“ஆம். அவருக்கு ஒழிந்து இருக்கும்; அவரிடம் என்ன சொல்ல?”

“சொல்லு...!...நீ யாருக்காக உபாத்தியாயராயிருக்கிறாயோ, அவர் உன்னைக் கூப்பிடுகிறார்!” என்று.

சோப்தார் கொஞ்சம் சாப்பிடக் கொடுத்தான். ராஜபுத்திர வீரன் அதைச் சாப்பிட்டான். அதற்குள் வெளியே சென்றிருந்த சேவகன் திரும்பிவந்தான்.

''ஸர்கார்—வாசஸ்பதி வருகிறார்.''

''சரி, நீ போ.'' அவன் வெளியேறி விட்டான்.

ராஜபுத்திரன் இங்கும் அங்கும் நடக்க ஆரம்பித்தான். அவன் உதடுகள் முணுமுணுத்தன....... 'நீயா? இந்தச் சமயம் எப்படி எங்கேயிருந்து......?' அவன் புருவங்கள் சுளித்திருந்தன. கண்களில் கவலைக்குறி ஒளித்து நின்றது. பரந்த தோள்கள் குனிந்தன. கொஞ்ச நேரத்துக்குள் ஒரு மெலிந்த சற்றுக்கூனிய ஓர் அறிவாளி வந்து சேர்ந்தான். எவ்வளவு கூட்டத்திலும் அந்த அந்தணனை மேதாவி என்று அறிந்துகொள்ளலாம். வாசஸ்பதி கஜானன பண்டிதன் காசியில் அத்யயனம் செய்தவன். இப்பொழுது அவன் பாடசாலையில் தலைமை உபாத்தியாயராயிருந்தான். ராஜவைத்தியன் லீலாதரருக்கு அவன் மாப்பிள்ளை. சிறந்த அறிவினாலும் உண்மையினாலும் அவனுக்கு அரசசபையில் தக்க மரியாதை இருந்தது. அவன் வந்து, 'சமர்சேன்' என்று கூப்பிட்டான்.

''சமர்சேன் இங்கில்லை. நான்தான் இருக்கிறேன். நானேதான் உம்மை அழைத்துவரச் சொன்னேன்.''

குரல் கேட்டு வாசஸ்பதி கலவரமடைந்தான். இருதயம் படபடத்தது. புத்தி தடுமாறி நின்றது.

''யார்? மண்டலாதிபதியா......?''

''ஆமாம், பண்டிதரே! கொஞ்சம் மெதுவாகப் பேசும். இது என்ன பாடசாலையா?''

''ஆனால் தாங்கள் இங்கே வரலாமோ? தைரியத்துக்கும் ஓர் எல்லை வேண்டாமா?''

''அட, தைரியத்தைவை ஒருபக்கம்மூட்டை கட்டி! நான் ஒரு காரியமாக இங்கே வந்திருக்கிறேன்.''

''என்ன அது?''

''நான் சிற்றப்பா கர்ணதேவரைப்பார்க்கப் போகிறேன்.''

''அது முடியாத காரியம். இராப்பகலாய் மீனல்தேவி (கர்ணதேவரின் சந்திராவதி நகரின் ஜைன மனைவி) உதயாமதி (கர்ணதேவரின் தாய்)அல்லது மூஞ்ஜால் கூடவே இருக்கிறார்கள்.''

''என்ன நான் என் சிற்றப்பாவைப் பார்க்கக்கூட முடியாதா?''

''உங்களுக்குத் தான் எல்லோரும் சத்துருவாயிற்றே''

''வாசஸ்பதி! இது என்ன பேச்சு? நான் சொல்கிறேன்; நீ என்னமோ பேசுகிறாயே! இந்தச்சமயம் இதுகூட உன்னால் முடியாதா? பின் எதற்காக வாத்தியார் வேலை பார்க்கிறாய்? எல்லாம் காலத்தின் போக்கு. பீமதேவன் பேரன் வாயைத் திறந்து கேட்க, வாசஸ்பதி இல்லை என்று மறுக்கிறான். ஊம்.''

''காலத்துக்கெதிர் மனிதன் பலம் என்ன செய்யும்?''

''இதற்காகாவிட்டால் உன் புத்தியை அடுப்பிலிடு. ஏதாவது ஒரு வழி கண்டுபிடித்துச் சொல்.''

''வழியா? இந்தச்சமயம் குஜராத்தின் அரசியல் கெட்டுக் கிடக்கிறது. அதை ஸ்ரீ ஹரிதான் காப்பாற்ற முடியும்.''

ராஜபுத்ர வீரன் அலுத்துக்கொண்டு சொன்னான்.

''ஸ்ரீ ஹரியை அவர் போக்கில் விடு. நேராகச் சொல்லப் போகின்றாயா, இல்லையா? எப்படி வேண்டுமானாலும் செய். இந்த வேலை நடந்துதான் ஆகவேண்டும்.''

தலையைச் சொறிந்துகொண்டே வாசஸ்பதி சொன்னான். ''எஜமான் அப்படியானால் ஒரு காரியம் செய்கிறீர்களா?''

''சொல்.''

''வணிகன் போல் தலைக்கட்டு அணியுங்கள். இதோ என் சால்வையைப் போர்த்துக் கொள்ளுங்கள். மிகவும் தலைபோகும் காரியம் தான். வாருங்கள் போகலாம். நான் உங்களை எங்காவது ஒளித்து வைக்கிறேன். சமயம் பார்த்து வைத்தியரிடம் போய்ச் சேரலாம்.''

''சரி.'' வீரன் தலைப்பாகையை மாற்றிக் கட்டிக்கொள்ள ஆரம்பித்தான்.

''மகாராஜ்! இதன் பலன் ஏதாவது விபரீதமானால் என் குற்றமாகாது.''

''அட ஏனப்பா அதற்குள் அலறுகிறாய்? நான் தயார். ஆனால் வாசஸ்பதி, ஓர் வார்த்தை.''

''கேளுங்கள். என் புத்திதான் உங்கள் சொத்தாயிற்றே!''

அஞ்சலி தேவியின்
சருமம் லக்ஸ் டாய்லட்
சோப்பை உபயோகப்
படுத்துவதால் மிருது
வாகவும் மென்மை
யாகவும் இருக்கின்றது.



" லக்ஸ் டாய்லட் சோப் என்னுடைய தவருமல் அழகு படுத்தும் முறை" என்று அழகிய அஞ்சலி தேவி சொல்கிருர். " அதனுடைய வெண்ணிறம் கொண்ட நுரை என்னுடைய சருமத்தை மிருதுவாகவும் தூய்மையாகவும் சுத்தம் செய்கின்றது. மென்மையான சருமத்தை விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் நான் செய்வது போல லக்ஸ் டாய்லட் சோப்பினுல் சுத்தம் செய்து கொள்ளவேண்டும்."

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்!

LTS 189-23 TM

வருத்தம் கொந்தளிக்கும் குரலில் வீரன் கேட்டான்: இறந்தவன் எப்பொழுது பூதமாகிறான்?

"மகராஜ் நீங்கள் கேட்கும் விஷயம் மிகவும் கூடமானது, சிக்கலானது, சாஸ்திரீயமானதுங்கூட. சிராத்த விதிகளை அவமதித்தாலோ, அல்லது கட்டுக்கடங்காத பேராசைகளின் விகாரத்தினாலோ ஆத்மா பிரேத லோகத்திலேயே தங்கி விட்டால் அது சமயம் வாய்த்தபோது உலகத்துக்குத் திரும்பி விடும்,"

"எதற்காக?"

"அன்பரிடம் சேர, அல்லது அவர்களை எச்சரிக்க."

"ஊம்" ராஜபுத்திரவீரன் சற்று உதடு பிரிய மங்கிய சிரிப்புடன் சொன்னான். மறுபடியும் அவன் முகத்தில் அவநம்பிக்கை மேகம் படர்ந்தது. பிறகு வாசஸ்பதி கிளம்பினான். அவன் பின்னே அந்த வீரனும் கிளம்பினான். இருவரும் அந்தச் சிறிய வீட்டை விட்டு வெளியேறினர். சங்கிலியைப் போட்டு மெதுவாக அரசன் கர்ணதேவன் படுத்திருக்கும் அறையை நோக்கிச் சென்றனர்.

அரண்மனையில் எங்கும் ஒரே அமைதி. ஒரு பக்கம் அரசன் உடல் நலன்பற்றிய கவலை; மறுபக்கம் வருங்காலத்தைக் குறித்த விசாரம்; எல்லா இருதயங்களும் அமைதி குன்றியிருந்தன. விளக்குகள் மங்கலாய் எரிய விடப்பட்டிருந்தன. வேலைக்காரர்கள் எல்லாம் மெதுவாகச் சப்தம் போடாமல் பதுங்கிப்பதுங்கி நடந்து கொண்டிருந்தனர். எல்லோருடைய முகங்களும் கவலையினால் பீடிக்கப்பட்டு இருந்தன. ஒரு இருட்டறை வழியாக வாசஸ்பதி வீரனை மேலே அழைத்துச் சென்றான். அரசன் படுத்திருந்த அறையின் பக்கத்தறை வரையில் அவர்கள் தடங்கலின்றிச் சென்றடைந்தனர். ஆனால் திடீரென்று எழுந்த வளையல்களின் 'கிலு கிலு' சப்தத்தைக் கேட்ட வாசஸ்பதி திடுக்கிட்டு நின்றான். வீரன் கையை அமுக்கி 'வந்தது ஆபத்து' என்றான். வீரனும் தணிந்த குரலில், 'அது என்ன சனி?' என்று கேட்டான். மஹாராணி வருகிறாள் போலிருக்கிறது. இப்படியே மேல்வெளித் தாழ்வாரத்துக்குள் சென்றுவிடுங்கள். சமயம் பார்த்து அழைத்துச் செல்கிறேன்."

"அடேடே!"

"இப்பொழுது அடேடேயுமில்லை, கிடேடேயுமில்லை. பேசாமல் சென்று இருங்கள்."

பாதி திறந்திருந்த அந்தக் கதவுக்குள் அவனை அடைத்து வாசஸ்பதி கதவைச் சாத்திவிட்டான்.

உள்ளே சென்ற வீரன் காதில் யாரோ சமீபம் வரும் அடிச் சத்தம் கேட்டது. தொடர்ந்து அதிகாரம் நிறைந்த குரலில், 'யாரது?' என்று கேட்ட சப்தமும் அடைத்த கதவைத் தாண்டி அவன் காதில் வந்து அடைந்தது.

வாசஸ்பதி பதில் சொல்லிக்கொண்டிருந்தான்:

"மாதாஜி! ஒருவருமில்லை. நான்தான்.

வீரன் உள்ளம் கொந்தளித்து எழுந்தது. அந்த மிகச் சிறிய அறையில் அங்குமிங்கும் அலைந்துகொண்டே "என்ன செய்வது? வழி ஒன்றுமில்லையா?" என்று தன் எண்ணத்துக்குக் குரல் கொடுத்துக் கொண்டிருந்தான்.

இருட்டிலிருந்து குரல் வந்தது: "வா சகோதரா, காட்டுகிறேன்!' ராஜபுத்திரன் குதித்தெழுந்தான், வாளில் கையைப் போட்டுக்கொண்டு—"யாரது?"

அஸ்தமன மடையும் சந்திரனின் அரை குறை வெளிச்சத்தில் யாரோ வருவது தெரிந்தது. வந்தவன் கொஞ்சம் எள்ளும் குரலில் "என்ன ராஜபுத்திர அரசே! அதற்குள் மறந்து விட்டீர்களா?"

"யார்? ஓகோ! யதியா? வழியில் சந்தித்தோமே! இந்த நேரத்தில் இங்கே எங்கே?"

"நீர் எங்கிருந்து வந்தீரோ அங்கிருந்துதான்! ஒருகால் நாம் சிநேகிதர்களாக வேண்டும் என்று விதியே எண்ணுகிறது போலும்!"

"ஆனால்.........நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள்?"

"தங்களை ஒளித்து உதவ ஒருவன் கிடைத்தாற்போல என்னை ஒளிக்கவும் ஒருவன் கிடைத்தான்."

ராஜபுத்திர வீரன் பற்கள் உதட்டுக்குத் தண்டனை கொடுத்தன. "யதிராஜ்! ஒருவர் மற்றவரை அறிய முயல்வதால் இந்தச் சமயம் லாபமில்லை. அதுதான் சரி. ஒன்று நாம் உயிருக்குயிரான சிநேகிதர்களாவோம்; அல்லது உயிரை உறிஞ்சும் சத்துருக்களாவோம்."

"இது நேரத்தின் அதிர்ஷ்டம். இப்பொழுது இங்கே எல்லோரும் விரோதத்தைப் பற்றித்தான் பேசுகிறார்கள்."

"இது ஜைனர்களின் உபகாரம்."

"ஜைனர்களா, ராஜபுத்திரர்களா?"

"கர்ணதேவர் காலம் கடந்தால் உண்மை வெளியாகி விடுகிறது."

"சரி, விடும் அதைப்பற்றிய பேச்சை."

ராஜபுத்திரன் கை பட்டு அவன் மீசைகள் படமெடுத்து எழுந்தன. "சரி அப்படியானால் சிநேகப் பேச்சுப் பேசலாம். தங்கள் பெயர் என்ன?"

"ஆனந்தசூரி. தங்களுடைய பெயர்?"

ராஜபுத்திரன் சற்றுச் சிந்தித்துச் சொன்னான். என்னை "தேவிசிங்" என்று சொல்லுவார்கள்."

யதி சற்று முறுவலித்துச்சொன்னார். "மண்டலேசுவரரும் பொய் சொல்லுவார் என்று இன்றுதான் எனக்குத் தெரிந்தது."

தேவிசிங் நொடித்து நின்றான். அவன் கை அவனறியாமலே வாளிடம் சென்றது. "நீர் யார்."

"வாளுருவ இது சமயமில்லை, மண்டலேசுவரா! இங்கே ஏதாவது நடந்தால் தங்களுக்குத்தான் அது பாரமாகும். எனக்கு ஒன்றும் நேராது."

ராஜபுத்திரன் விட்ட பெருமூச்சு அவன் உற்சாகத்தையும் வெளியேற்றிவிட்டது. களைத்த உள்ளம் உண்மை நிலையை அறிந்தது; கை வாளைவிட்டு நகர்ந்தது.

"ஆனந்தசூரி! நீ யார்? என்னைக் காட்டிக் கொடுக்கப் போகிறாயா?"

"இல்லை அரசே! தங்களை வருத்த நான் விரும்பவில்லை. ஆனாலும் கடவுளே தான் தங்களிடம் கோபம் கொண்டுள்ளாரே!"

"யதி மகாராஜ்! கடவுளுக்கு என்னிடம் கோபம் கொள்வது ஒரு விளையாட்டு. அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை."

"மண்டலேசுவரா? ராவணன் செருக்கும் சீர் குலைந்தது ஞாபகமிருக்கட்டும். இந்த நேரம் நான் எதிரியல்ல, வேண்டியவன். அந்த முறையில் சொல்லுகிறேன் கேளும். உம் காலம் முடிவடைந்து வருகிறது. பாக்கியிருக்கும் நாட்களை நல்ல விதத்தில் செலவழியும்."

"ஜைனர்களை முடிந்தவரை கசக்குவது தான் எனக்கு உகந்த நல்வழி. அந்தப்பாபிகள் ஏற்கனவே என்னைச் சூறையாடி விட்டார்கள். இன்னும் என்னைக் குலைப்பார்கள்—பரவாயில்லை!"

"இனி அவர்கள் உங்கள் கையில் கசங்க மாட்டார்கள்."

"ஏனாம்?"

"குரு தேவரின் வாக்கு."

"அது என்ன?"

"ஜைன தேவரின் விரோதிகள் என் கையினால் நிலையைப் புரிந்து கொள்ளப் போகிறார்கள்."

மண்டலேசுவரன் உடல் பதறிற்று. வாயடக்கிச் சும்மா நின்றான்.

"அரசே! வருஷக் கணக்காக நீங்கள் ஜைன தேவனின் எளிய அடியார்களை வதைத்து வந்திருக்கிறீர்கள். ஆகவே தற்பொழுது தங்களுக்கு மன்னிப்புக் கிடைக்காது. இருந்தும் தாங்கள் வீரர்தாம், குஜராத் தேசத்துக்கு ஆபரணம் போன்றவர்."

"தங்கள் மன்னிப்பை யார் வேண்டுகிறார்கள்?" வீரன் சிரிப்பில் ஏளனம் நகையாடிற்று.

"வேண்டாம். ஆனாலும் அரசன் இறந்தவுடன் பெரிய ஆரவாரம் நேரும். ஒருகால் எனக்குத் தகுதியான வேலை தென்பட்டால்......"

"யார், எனக்கா? உங்கள் அவசியமா?" இப்பொழுது மண்டலேசுவரன் வார்த்தையில் பெருமை சிரித்தது.

"ராஜா! நீங்கள் சூரர், வீரர், விஷயமறிந்தவர். தர்ம வேறுபாடு இல்லாவிட்டால் தங்கள் உயர்வில் எனக்கும் பெருமையே! இருந்தாலும் இன்று சந்தித்ததற்கு அடையாளமாக நான் ஓர் வாக்குக் கொடுக்கிறேன். ஞாபகம் வைத்துக்கொள்ளும். என்றாவது ஏதாவது வேலையிருந்தால் ஆனந்த சூரியிடம் சொல்லும்; அவர் செய்து கொடுக்கத் தயங்கமாட்டார்."

"யதிராஜ்! மண்டலேசுவரன் இரங்கியதில்லை. இரங்கவும் மாட்டான். ஜைனர்கள் பணத்திமிரில் அண்ணாந்து நடந்தால் எங்களுக்கும் எங்கள் தோள்வலியில் பெருமை உண்டு."

"தங்கள் இஷ்டப்படி! ஆனால் ஜாக்கிரதையாகவே இரும்."

"மண்டலேசுவரன் பயமறியமாட்டான்."

"இருந்தாலும் யமன் நல்லவனல்லவே!"

"துறவியே! சாவும் எனக்கு ஒரு விளையாட்டே"

"சரி, நான் போகிறேன். அந்த வழி வந்தேன். அதே வழி போகிறேன்." என்று சொல்லிவிட்டு, துவாரத்தின் வழியாக வெளியேறிவிட்டார்.

மண்டலேசுவரன் மனது எண்ணங்களை நெருட ஆரம்பித்தது. வாயும் மீசை மயிரைச் சுவைக்கத் தொடங்கிற்று. மாலையில் பார்த்த பூதமும் யதி சொன்ன விஷயமும் அவன் மண்டையில் சுற்றிச் சுற்றிக் குதித்து வந்தன. எவ்வளவு நாளாக அவனுக்குக் கிடைத்த சிறிய மண்டலத்தைத் தன் புய வலியால் ஒரு சிறு ராஜ்யமாக்கி யிருந்தான்! அவன் பெயர் குஜராத் முழுவதும் பரவியிருந்தது. ஆனல் தேஹஸ்தலத்தில் அடைபட்டுப் புழுங்குவது அவனுக்குப் பிடிக்கவில்லை. பட்டண் அவனுக்கு உலகத்தின் முடியாகப் பட்டது. அந்த முடியில் அழகிய பெரிய மணியாக அமருவதற்கு அவன் ஆசை குதி போட்டது. இந்தப் பக்கம் பட்டண் அரசாட்சி அவனைப் பலம் குன்ற வைக்க எவ்வளவோ முயற்சி செய்து கொண்டிருந்தது. அதன் முயற்சி பெரும்பாலும் தோல்வியில் முடிந்தது என்றாலும் மண்டலேசுவரனுக்குத் தொல்லையும் சுழலும் ஏற்படுத்துவதில் குறையவில்லை.

முஞ்ஜால்

ஆனந்தசூரி தாழ்வாரத்தின் மறுபக்கம் சென்றுவிட்டார். அவர் மனம் மலர்ந்து கொண்டிருந்தது. குருதேவரிடம் அனுமதி பெற்று அவர் சந்திராவதியிலிருந்து பட்டண் நகரம் வந்தபோது இவ்வளவு நல்ல சகுனங்கள் ஏற்படும் என்று கனவிலும் கூடக் கருதவில்லை.

"மகாராஜ்!" யாரோ ஒரு பெண் விளித்தாள்.

யதி தம் எண்ணக்குவியலிலிருந்து தலை தூக்கினர். "யார் அது ரேணுகாவா?"

"ஆம் ஆம், எழுந்தருளுங்கள்; மந்திரியிடம் தங்கள் கடிதத்தைச் சேர்ப்பித்து விட்டேன். அவர்கள் தங்களை அழைக்கிறார்கள்."

"எங்கே?"

"வாருங்கள் என்னுடன்" ரேணுகா அவருக்கு வழி காட்டிச் சென்றாள். யதிக்குக் கொஞ்சம் கலக்கம் ஏற்பட்டது. குஜராத் மந்திரி முஞ்ஜாலை யார் அறியார்? அவர் கொடுத்த ஹுண்டி பாக்தாத், வீனிஸ் நகரங்களில்கூட மதிக்கப்பட்டு வந்தது. சிற்றரசர்கள் மண்டலேசுவரர்களுக்கு அவர் பெயர் கேட்டவுடனேயே ஏற்பட்ட நடுக்கமே அவர் பெருமைக்குச் சாக்ஷியாக விளங்கிற்று. மாளவ அரசன் அவரைத் தம் பக்கம் சேர்க்க அவந்தி நகரின் அளவு மீறிய ஐசுவரியத்தையே தரத் தயாராயிருந்தான். பட்டண் நகரவாசிகள் அவரிடம் உயிரையே வைத்திருந்தனர். அவர் கேட்டால் உயிரையே தரவும் தயாராயிருந்தார்கள். அப்படிப்பட்ட ஓர் அதிகாரியிடம் முதன் முதலில் போகும்போது கலக்கம் ஏற்படுவது இயற்கையே!

ஒரு அறையில் இரண்டு மூன்று குமாஸ்தாக்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள். ஒரு மூலையில் ஆயுதம் தாங்கிய ஐந்தாறு வீரர்கள் குசு குசு என்று பேசிக்கொண்டிருந்தனர். யதியைப்பார்த்த அவர்கள் கண்கள் அங்குமிங்கும் சுழன்றன. ஒருவரை ஒருவர்பார்த்துக்கொண்டார்கள். ஆனல் வாய்மௌனமாகவேஇருந்தது. ஆனல் ரேணுகாவின் கை யதியைத் தங்கும்படி சங்கேதம் செய்தது. அவள் உள்ளே சென்றுவிட்டாள். சற்று நேரம் சென்று திரும்பி வந்த அவளுடன் யதியும் உள்ளே சென்றார்.

உள்ளே ஊஞ்சலில் மந்திரி அமர்ந்திருந்தார். அவர் கிட்டதட்ட முப்பத்தைந்து வயதடைந்தவராகக் காணப்பட்டார். அழகிய முகம்; அதில் அமைந்திருக்கும் கண்கள் வாளொத்த கூர்மை கொண்டு ஒளித்தன. கட்டமைந்து வலுப் பொருந்திய உடல். முறுக்கி விடப்பட்ட மீசைகூட இளமைக்கு வளம் ஊட்டிக் கொண்டிருந்தது. நெற்றியில் உள்ள கோடுகள் மனதின் வலிவு— வீணையின் சுருதிக் கம்பிகளாக விளங்கின. நீண்ட முடி தோளில் புரண்டு கொண்டிருந்தது. அதை அவர் வாரிக் கட்டிக்கொண்டிருந்தார்.

யதியை ஓர் தீக்ஷண்யமான பார்வை பார்த்துவிட்டு அவர் நமஸ்காரம் செய்தார். யதியை ஊஞ்சலில் அமர ஜாடை காட்டி, அவர் அருகே உள்ள ஓர் ஆசனத்தில் அமர்ந்தார்.

"வரவேண்டும்"

"மந்திரி மஹாராஜ்! நமஸ்காரம்." என்று சொல்லி ஆனந்தசூரி அமர்ந்தார். முதல் தடவை இந்தப் பெரிய மனிதனைப் பார்த்த அவர் மனதில் என்னென்னவோ எண்ணங்கள் எழுந்தன. முஞ்ஜாலின் பெருமை, அவ

பிரஸவ சமயத்தில் விஷ கிருமிகளால்
அபாயம்
நேரலாம் என்று கவலைப்பட்டேன்
தாய் கூறுகிறாள்:
கவலைப்பட வேண்டாம் நான் 'டெட்டால்' உபயோகிப்பேன்.
பிரஸவமானதும்
ஆம், விஷ கிருமிகளால் அபாயம் நேராமல் இருக்க 'டெட்டால்' பாதுகாக்கும்
உனக்கு ஒரு அருமையான மகன் பிறந்திருக்கிறான் உன் மனைவி டெட்டாலின் உதவியால் குணம் அடைவாள்
தாய் கூறுகிறாள்-
பிரஸவ சமயத்தில் 'டெட்டாலை'யே ஒவ்வொரு ஸ்திரீகளும் நம்பி உபயோகிக்கும் படியும், மற்றும் எல்லா சந்தர்ப்பங்களுக்கும் 'டெட்டால்' வீட்டில் வைத்திருக்கும்படியும் டாக்டர் சிபார்சு செய்கிறார்
DETTOL
'DETTOL'
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிட் 20-1 செட்லா ரோடு, கல்கத்தா.

ரிடம் ஜனங்கள் கொண்டிருந்த அன்பு, அவருடைய பரந்த வியாபாரம், உறுதியான ராஜநீதி, எதிரிகள் எள்ளும்படி அவருக்கும் மீனல்தேவிக்கும் உள்ள சம்பந்தம்—இவைகள் எல்லாம் ஒரே சமயத்தில் அவர் மனத்திரையில் வண்ணம்கொண்டு எழுந்தன. இவைகளைச் சுருட்டி வைத்து அவர் பேச ஆரம்பித்தார்.

"சந்திராவதியில் எல்லோரும் சுகம். பட்டணத்து சேட்டின் கடிதம் படித்துவிட்டீர்கள் அல்லவா?"

மந்திரி சற்று அழுத்தமான குரலில் "ஆனால் அவர் தம் தாயின் நிலையைக் குறிக்கவில்லையே! சித்தி எப்படி இருக்கிறார்கள்?"

"நான் வந்தபோது அவர்கள் நிலை கொஞ்சம் ஒரு மாதிரியாகத்தான் இருந்தது."

"சரி, தாங்கள் வந்த காரணம்? இந்தச் சமயம் எனக்கு நேரமில்லை என்பது தான் தாங்கள் அறிந்த விஷயமாயிற்றே!

"ஆம் மகாராஜ்! தங்களுக்குக் குறுக்கே நிற்க நான் வரவில்லை." மந்திரி சற்று யோசனையிலாழ்ந்தார். அவர் விரிந்த உதடுகள் ஓர் அலக்ஷியத்தைச் சற்று வெளிக்காட்டின.

"ஜைனபகவானுடைய கருணையால் அநேக காரியங்கள் என் கைகளால் நடக்க வேண்டியிருக்கிறதென்று குருதேவர் சொல்லியிருக்கிறார். இந்தச் சமயம் தங்ளுக்கு உதவவே நான் வந்திருக்கிறேன்."

"சரிதான். ஸௌபாக்கிய பாயீ, நீங்கள் மிகவும் கெட்டிக்காரர், வித்வான் என்றெல்லாம் எழுதியிருக்கிறார். ஆகையால் உங்களால் அநேக காரியங்கள் ஆகலாம். ஆனால் தாங்கள் ஒரே ஒரு வேலை செய்யுங்கள், போதும்." மந்திரியின் குரலில் அலக்ஷியம் சுண்டி நின்றது. "அது என்ன?"

"தயவு செய்து பட்டண் அரசியலில் சந்திராவதிச் சண்டையைக் கலந்து குழப்ப வேண்டாம்." மந்திரி இதை மெதுவான அழுத்தம் நிறைந்த குரலில் சொன்னார்.

யதி உடல் எழும்பிக் குதித்தது. இவர் எப்படி அறிந்து கொண்டார்? மந்திரியிடம் அவருக்குக் கொஞ்சம் பயம் ஏற்பட்டது.

"நான் சண்டை செய்ய வரவில்லை. பட்டணத்துச் சேட் எழுதிய பிரகாரம் தங்களையும், மகாராணியையும் பார்க்கவே வந்தேன். அவசியம் ஏற்படும் வரை இங்கேயே இருப்பேன்."

முஞ்ஜால் கொஞ்ச நேரம் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்; அவர் வார்த்தையில் நம்பிக்கை கொள்ள முடியாதவர் போல்.

"ஆனந்தசூரி! எனக்கு அதிகம்பேச வராது. தாங்கள் சந்திராவதியின் அதிகாரம்படைத்த ஜைனர்களின் பிரதிநிதியாக வந்திருக்கிறீர்கள். ஆனால் நான் என் அரசியலில் மதப் பற்றின் சூட்டை ஏற்ற விரும்பவில்லை. நீங்கள் அதைச் செய்ய விரும்பினால் உங்களுக்கும் எனக்கும் ஒத்து வராது. அப்படிச் செய்தால் என்னைச் சத்துருவாக எண்ணவேண்டி வரும் என்று இப்போதே எச்சரித்து விடுகிறேன்."

"வேண்டாம்; நான் சிநேகிதனாகவே தற்பொழுது வந்திருக்கிறேன். வேண்டுமானால் ஆதாரம் காட்டுகிறேன்"

"என்ன அது, பார்க்கலாமே?"

"ஒரு ரஹஸியம் சொல்லட்டுமா?"

"என்ன ரஹஸியம்?" அவர் சற்றே சிறுமைப்படுத்தும் குரலில் கேட்டார்.

"கர்ணதேவரின் சகோதரன் மகன் தேவபிரஸாத் அரண்மனைக்குள் வந்திருக்கிறான்."

முஞ்ஜாலின் சிரிப்பு அவரைக் குலுங்க வைத்தது. "ஆனந்தசூரி! சந்திராவதியில் இப்படித்தான் அரசியல் நடக்கிறதோ?"

"என் அப்படிக் கேட்கிறீர்கள்?"

"இது ரஹஸியமா? பட்டணத்துக்கு வெளியிலே நீங்கள் அவர்களைச் சந்தித்தீர்கள். இப்பொழுதுதான் மாடியில் கவலையின்றிப் பேசிக் கொண்டிருந்தீர்கள். எனக்குத் தெரியாதா? துறவியாரே! நீங்கள் ஜனங்களுக்கு மோக்ஷம் அளிக்கும் பாதையைச் சொல்லிக் கொடுங்கள்; என்னுடைய வேலையை நானே செய்துகொள்கிறேன்."

"மந்திரி மஹாராஜ்! மன்னியுங்கள். தங்கள் சக்தி எனக்குப் புதிது."

"நல்லது. என் ராஜநீதியில் இடைபுகுகிறவர்களை நான் மன்னிக்கிறதில்லை. இதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்." முஞ்ஜாலின் கண்கள் சீறின. "சரி போகட்டும். தாங்கள் சாப்பிட்டாய் விட்டதா?"

"மஹாராணியின் தர்சனம்தான் பாக்கி. இன்று எனக்கு உபவாசம்."

"சரி, அப்படியானால் என்னுடன் நடவுங்கள். நானும் அங்கேதான் செல்கிறேன்"

என்று சொல்லி எழுந்த மந்திரி அங்கே தொங்கிய சால்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு கிளம்பினர். ஆனந்தசூரியை அழைத்துக் கொண்டு வேறு வாசல் வழியாக நடக்க ஆரம்பித்தார். ஆனந்தசூரியின் கர்வம் ஒரு மாதிரி குலைய ஆரம்பித்திருந்தது. எதிரே பெருமை நடமாடும் நடையில் வேகமாகச் செல்லும் முஞ்ஜாலைப் பார்த்து யதி எண்ணமிட்டார்!—சந்திராவதியின் மற்றப் பெருமை எப்படியிருந்தாலும் பட்டண் நகரத்து மந்திரியைப் போன்ற ஒரு மனித ஏறு அங்கே இல்லை.

மகாராணியின் அறை வாயிலில் மந்திரி யதியை அங்கேயே நிற்கும்படி சைகை காட்டினர். அறையின் கதவு சாத்தப்பட்டு இருந்தது. வெளியே ஒரு பச்சை அகலில் தீபம் நெளிந்து அசைந்து கொண்டிருந்தது.

முஞ்ஜால் கைகள் பட்டவுடன் ஒரு கிழவி கதவைத் திறந்தாள். "யார் அது?"

"நான் தான்"

"வாருங்கள், மஹாராணி தங்கள் வரவைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்." 'இது யார்?'

"இது தான் சந்திராவதி நகர்த் துறவி' கிழவி, நீ இங்கேயே இரு, நான் கூப்பிட்ட பிறகு வரலாம்" கிழவி அங்கேயே தங்க முஞ்சால் உள்ளே சென்றார்.

யதி, முஞ்ஜால் மீனல் தேவியைப் பற்றி அநேக விஷயம் கேள்விப்பட்டிருந்தார். ஆகா! எப்படியாவது அவர்கள் இருவரும் பேசுவதைத் தம் காதால் இன்று கேட்க முடிந்தால்! யதி கர்ணதேவ் தலைநகரின் பெரிய மனிதர்களுடைய பழக்கம் பெறவே வந்திருந்தார். வந்த காரியமும் கடவுள் கிருபையால் எளிதாகவே நிறைவேறி வந்து கொண்டிருந்தது. அவர் இப்பொழுது கௌரவம் வாய்ந்த பெரிய மனிதர்களில் எல்லாம் தலைசிறந்த ராணியைப் பார்க்கப் போகிறார். கதவு எப்பொழுது திறக்கும், ராணி மீனல் தேவியை எப்போது பார்க்கலாம், என்று துடித்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார். முஞ்சாலின் பெருமையைக் குறைக்க வழி தோன்றாத வரையில் எல்லாம் வீண். மீனல் தேவியைப் பற்றி அவர் கொஞ்சம் அறிவார். அவருடைய இந்த முயற்சியில் வெற்றிக்கு ராணியின் போக்குத் தான் உதவியாயமைய வேண்டும். ஆகவே ராணியுடன் எவ்விதம் பேச்சுக் கொடுக்கலாம்? என்று எண்ண ஆரம்பித்தார்.

இண்டோ கமர்ஷியல் பாங்க்
லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:- **மாயவரம்**

சென்ட்ரல் ஆபீஸ்:- **மதராஸ்**

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 25,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 21,25,000
செலுத்தப்பட்ட மூலதனம் ...	ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு	ரூ. 10,00,000

பிராஞ்சுகளும், ஸப் ஆபீஸ்களும் தென்னிந்தியாவிலுள்ள முக்கியமான பட்டணங்களில் இருக்கின்றன

சகலவிதமான பாங்க் அலுவல்களும் நடத்தப்படும்

S. N. N. சங்கரலிங்க அய்யர்
மேனேஜிங் டைரக்டர்

மாளவ அரசனின் சொத்து

தந்தையின் குதிரை கண்ணுக்கு மறைந்ததும் திரிபுவனும் அவன் ஆணையை மறந்து அதேவழியில் செல்ல ஆரம்பித்தான். தந்தை மனம் எவ்வளவு பதைத்திருந்தது என்று அவன் அறியான். ஆனால் அவன் மனம் ஆனந்தம் நிறைந்திருந்தது. அவனுக்குப் பட்டண் நகரம் இன்பக்கனவின் உருவாய் விளங்கிற்று. ஆனால் என்ன அதிர்ஷ்டம்! அவன் இங்கு அதிக நேரம் தங்கியிருக்க முடிகிறதில்லை. அவன் மெதுவாக அரண்மனை அருகில் சென்று மற்றொரு பக்கம் திரும்பினான். கடைசியில் ஒரு மூலையில் தனியான ஒரு ஜன்னல் தென்படவே அதன் கீழே சென்று குதிரையிலிருந்து இறங்கினான். கீழே கிடந்த ஓர் கல்லை எடுத்து, சாத்தியிருந்த ஜன்னல் கதவின்மேல் அடித்தான். சற்று நின்று மற்றொரு கல்; இன்னும் சற்று நின்று இரண்டு மூன்று சேர்த்து. இதற்குப் பதிலாக ஜன்னல் கதவு திறந்து கொண்டது. அதே சமயம் ஒரு தளிரிள மங்கையின் சிரித்த முகம் வெளியே வந்தது. அந்த முகம் சாவதானமாய் அங்குமிங்கும் பார்த்த பிறகு கதவு முழுவதும் திறக்கப்படவே அந்த மங்கை சுவருக்கு வெளியே நீட்டியிருக்கும் முகட்டுக்குள் வந்தாள். வந்தவள் கீழே பார்த்து 'யாரது?' என்றாள்.

"அடி, யார்க்காரியே? எவ்வளவு நேரம் தவம் செய்ய வைப்பாய்?"

"யாரது? போகப் போகிறாயா இல்லையா?' வார்த்தைகள் கேலிச் சிரிப்பில் புதைந்து பின்னி வந்தன.

"எங்கே அனுப்பப் பார்க்கிறாய்? கயிற்றைக் கட்டு, மேலே வருகிறேன்."

"கயிறா? மூன்று நாளாய் விட்டதே, அறுந்து போய்!'

"பிரஸன்னா; விளையாடாதே! அப்பாவேலை; அதனால் தான் வரவில்லை.'

"அப்படியானால் எனக்கு இப்பொழுது வேலை இருக்கிறது, திரும்பிப் போ" என்று சொல்லிக் கொண்டே அந்த இளமங்கை ஆணியிலிருந்து கயிற்றை எடுத்து முகட்டின் மரக் கிராதியில் கட்டினாள்.

"திரும்பி எப்படிப் போவேன்: க்ஷத்ரியனல்லவா, நான்!"

"உண்மை தான். இரவில் திருட்டுத்தனமாக வீடு நுழைவதும் க்ஷத்திரியன் வேலை தானே!"

"உனக்காக எதுவும் செய்யத் தயார். சரி' சரி, போதும் கட்டு" என்று சொல்லிக் கொண்டே கயிற்றைப் பிடித்துக் கொண்டு பாய்ந்து ஏற ஆரம்பித்தான். இரண்டு கை மாறு உயர ஏறியிருப்பான்; அதற்குள் அந்தப் போக்கிலிச் சிறுமி முடிச்சைக் கொஞ்சம் தளர்த்தி விட்டாள். கயிறு அவிழ்ந்தது; காதலனும் நழுவி விழுந்து விட்டான். திரிபுவன் சிரித்துக் கொண்டே எழுந்து நின்றான்.

"அடி சண்டிகே! யாராவது காவலாளி வந்து விட்டால் தலைபோய்விடும், தெரியுமா? நீயும் தப்பமாட்டாய்!"

"அது உன் அதிர்ஷ்டம்! நான் என்ன செய்யட்டும். சரி கயிற்றை மேலே எறி, மறுபடி கட்டுகிறேன்."

திரிபுவன் கயிற்றை எறிந்தான். பிரஸன்னா மறுபடி கட்டினாள். இமை கொட்டுமுன் கயிற்றில் தொத்தி மேலே ஏறி வந்து மரக் கிராதியைக் கையால் அமுக்கி அப்புறம் வந்து குதித்தான். குதித்தவன் அப்படியே சென்று பிரஸன்னாவைத் தாவிப் பிடித்தான்.

"இந்தா, உன்மேல் ஆணை; என்னைப்பிடிக்காதே."

"ஏனாம்?"

"எனக்கு உன்னிடம் கோபம்; மூன்று நாளில் என் உயிரே போய்விட்டது." முகத்தை முறித்துச் சொன்னாள் மங்கை.

"ஆகாகா! உயிர் எங்கே போய்விட்டது பார்க்கிறேன்" அவளைப் பிடிக்கத் தாவினான், அவள் பூனையைப் போல் உள்ளே போய்விட்டாள். தொடர்ந்து ஓடிய திரிபுவன் அவளைப் பிடிக்குமுன் உள்ளே ஓடிய அவள் ஊஞ்சலின் மேல் ஏறி நின்று அதை ஆட்ட ஆரம்பித்து விட்டாள்.

"அட, நிறுத்து; என்ன உயிரை விடப் பார்க்கிறாயா?"

"எங்கே பிடி பார்க்கலாம் தைரியத்தை" பிரஸன்னா ஊஞ்சலின் ஆட்டத்தை அதிகரித்துக் கொண்டே சொன்னாள். அவள் கண்களில் விஷமமும் நகைபுரிந்து நாட்டியமாடிக் கொண்டிருந்தது. திரிபுவனைக் கிண்டுவதற்காக ஆடின ஆட்டத்தின் வருத்தத்தால் அவள் முகம் சிவக்க ஆரம்பித்து விட்டது. தலைமயிரும் அவிழ்ந்து புரள அவள் ஊஞ்சல் வேகத்தை அதிகரித்தே சென்றாள்.

"பிரஸன்னா, பார், பார்; விழுந்து விடப் போகிறாய்!"

"அது உன் குற்றம் தான். ஏன் வரவில்லையாம்? இப்பொழுது நான் இறங்கப் போவதில்லை. முடிந்ததைச் செய்து கொள்."

ஆட்டத்தின் மேல் ஆட்டம். அவள் உட்கார்ந்து உட்கார்ந்து ஆட்டிவிட்டுக் கொண்டிருந்தாள். பிரஸன்னா தன்பால் இழுக்கும் இன்ப மோகினியின் பயங்கர ரூபம் எடுத்திருந்தாள், திரிபுவனின் உயிர் ஊசலாடத் தொடங்கிற்று. கயிறு அறுந்தால்? என்று எண்ணும்போதே அவன் உள்ளம் பொங்க ஆரம்பித்தது. பார்த்துக்கொண்டே இருக்கும்போதே, இமைகொட்டிப் பிரிக்குமுன்னே, பிரஸன்னா, கைகளை விட்டுவிட்டாள். வருவது போவதைக்கவனியாமல் ஆடும் ஊஞ்சலிலிருந்து குதித்தும் விட்டாள். குதித்தவள் எதிர் பாராவண்ணம் திரிபுவன் மேல் பாய இருவரும் கீழே விழுந்து ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு உருண்டனர்.

"துஷ்டை! என்ன அமர்க்களம் செய்கிறாள்." என்று சொல்லிக்கொண்டே திரிபுவன் கையால் ஒன்றிரண்டு வைத்துவிட்டான். அவளும் பின்வாங்கவில்லை.

"சரி. சரி எழுந்திரு. விருந்தாளிக்கு மரியாதை போதும். என்ன கஷ்டம் நான் இங்கே வந்தேன்? தலையைப் பார்; மோதிச் சுற்றுகிறது."

"என் கை மட்டும். தோல் சிராய்த்து ரத்தம் வருகிறது."

"நல்லவேளை. கவலை நீங்கிற்று. நான் இதோ போகிறேன்."

"போகிறாயா? எதற்காக வரவேண்டுமாம்?"

"ஏனா? நீதானே சொன்னாய் போ என்று, போகிறேன்."

"அப்படிச் சொல்லாதே; இனிமேல் இங்கேயே இருப்பாயல்லவா?"

திரிபுவன் சற்று யோசனையுடன் சொன்னான்: "நிச்சயம் சொல்வதற்கில்லை; ஒன்றும் புரியவும் இல்லை; மேகங்கள் புரண்டு சூழ்ந்து வருகின்றன."

"உங்கள் அப்பாவும் மிகவும் அறிய முடியாதவராயிருக்கிறார்."

"பிரஸன்னா! நீ அவரைப் பற்றி என்ன அறிவாய்? உலகில் அவரைப் போல் வீரன் கிடையாது; நரபுங்கவன் இல்லை: மேலும் உன் அத்தை செய்து வரும் இன்னல்களை அவர் மட்டும்தான் பொறுக்க முடியும்."

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 ***SUNDARI ELIXIR***
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 ***PHOSPHORUS OIL***
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 ***MASTANA PILLS***
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 ***DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA***
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

"அத்தையைப்பற்றி மட்டும் பேசாதே. அவள் உலத்கதிலேயே தனி" பெண் தீங்குர லில் கர கரப்பும் கசப்பும் கலந்து வந்தன.

'மண்டலாதிபதியும் உலகிலேயே தனி தான்.;'

"அது இருக்கட்டும்; நாம் இப்படி ஒவ்வொரு மாதமும் சந்திக்கிறோம் என்று யாருக்காவது தெரிந்து விட்டால்......?"

"தெரிந்தால் என்னவாம்? ஏதாவது திருட்டுத்தனம் செய்கிறோமா?"

"இல்லை, இருந்தாலும் அத்தை அறிந்தால் உரித்து விடுவார்கள்."

"ஆமாம்...... அது போகட்டும்; பாரஹட் எப்படி இருக்கிறார்."

"அவர் நாளுக்குநாள் துரும்பாகிக் கொண்டு வருகிறார். ஆனால் சதா உன்னுடைய ஞாபகம்தான் அவருக்கு."

"சரி வா; போய்ப் பார்த்து வரலாம். பிறகு போகும்படி ஆகிவிடும்."

"வரவில்லை. அதற்குள் அங்கேபோ, இங்கேபோ. சரி வா." அவள் திரிபுவனைப் பாரஹட்டிடம் அழைத்துச் சென்றாள்.

ஸாமல் பீமதேவனின் (திரிபுவனின் தந்தையின் தந்தை க்ஷேமராஜர். அவர் தந்தை பீமதேவ். 1022—1072 வரை அரசாண்டவர். பட்டண் அரசர் கர்ணதேவருக்கும் தந்தை.) காலத்திலிருந்தே விருது பாடுகிறவன். அவனுக்கு இப்போது வயது தொண்ணூறு. கண்கள் பார்வை இழந்து விட்டன. நாக்குப் பேசும் வன்மை குன்றி விட்டது. ஞாபக சக்தியும் ஓய்வு எடுத்துக் கொண்டுவிட்டது. ஆனாலும் இளமையில் கண்டு பாடிக் களித்த தோழன் பீமதேவனின் கீர்த்தியை எண்ணி எண்ணியே வாழ்ந்து வந்தான். அரண்மனையிலேயே ஒரு பக்கத்தில் வசித்து வந்தான். எல்லோருக்கும் அவனிடம் ஆதரவும் மரியாதையும் உண்டு. அவன் பிரஸன்னா திரிபுவன் இருவரிடமும் அளவு கடந்த பிரியம் வைத்திருந்தான். இவர்கள் அவனிடம் சென்றபோது அவன் விரிப்பில் உட்கார்ந்திருந்தான். பக்கத்தில் ஒரு வேலைக்காரன் உக்கா நிரப்பிக் கொண்டிருந்தான். அவர்கள் வந்ததும் வேலைக்காரன் போய்விட்டான்.

'பார்ஹட்ஜீ ஜய் சோம்நாத்!'

மார்பில் சாய்த்திருந்த தலையைத் தூக்கி ஒளியிழந்த கண்விழிகளைச் சுழற்றிக் கொண்டே, "யாரப்பா அது?" என்றான் கிழவன். "ஏன் தெரியவில்லையா?"

"யார் திரிபுவன் பாலனா? வா; வா இன்று வது ஸாமல் ஞாபகம் வந்ததா? ரொம்ப நாளாயிற்றே"

"தங்களை விட்டு எங்காவது போவேனா? உடம்பு எப்படி இருக்கிறது, சொல்லுங்கள். நாளுக்கு நாள் இப்படி இளைத்து வருகிறீர்களே."

"தம்பி! வேண்டியவர்கள் போய்விட்டார்கள். வீரர்கள் வழி நடந்துவிட்டார்கள். கர்ணதேவனும் போகவழிபார்க்கிறார். நானோ கிழவன். போகவேண்டியவன் தானே."

"பிறகு யார் புத்தி சொல்வார்கள்?"

"புத்தி? புத்தி யாருக்கு வேண்டும்? பட்டண்நகரமும்போகத்தானே இருக்கிறது! அதற்குத்தான் அதன் கௌரவமே வேம்பாய் விட்டதே. வீரம் கசக்கிறதே!" கிழவன் தலையை அசைத்துக்கொண்டே சொன்னான்.

"சரிதான்பரர்ஹட்ஜீ! தங்களுக்குப்பழைய விஷயங்கள்தான் பிடிக்கின்றன."

பாரஹட் கொஞ்சம் படபடத்துச் சொன்னான். "பின் புதிது என்ன இருக்கிறதாம்? இரத்த ஆட்டத்தை நிறுத்தி அரசர்கள் சூழ்ச்சியில் இறங்கிவிட்டார்கள். சண்டைக்கனம் என்றால் பயந்து விதவைபோல் பதுங்குகிறார்கள். ஒவ்வொரு நாளும்தான் கேள்விப்படுகிறோமே ஒன்றொன்று புதிது புதிதாக!"

"பிரஸன்னா கேட்டாள்: ஸமீபத்தில் என்ன கேட்டீர்கள், அப்படி? இவ்வளவு கோபிக்கிறீர்கள்?"

"குழந்தாய், பிரஸன்னா! என்ன சொல்ல? மாளவ அரசன் பட்டண் நகரின் பெயரைக் கேட்டுப் பதுங்கிக் கொண்டிருந்தான். இன்று அவனுக்கு லஞ்சம் கொடுக்கிறார்களாம். அவன் பலம்இன்று இவர்களை அலற வைக்கிறது. அவனைக் குஷிப்படுத்த முயற்சி நடக்கிறது!"

பிரஸன்னா உதட்டைக் கடித்து ஒதுங்க விழித்து, திரிபுவனைப் பார்த்தாள்.

திரிபுவன் கேட்டான்: "ஊம், இது என்ன இது?"

"புடவை அரசாங்கம் செலுத்தினால் பிறகு என்ன ஆகும்? பெண்ணுக்குப் புத்தி காலடியில் தானே இருக்கிறது."

திரிபுவன் "ஆனால் விஷயமென்ன?" என்று வற்புறுத்திக் கேட்டான். பிரஸன்னாவுக்கு விஷயம் தெரியும். திரிபுவன் அதைக் கேட்

டால் எரிந்து விழுவான். தெரியக்கூடாது. அவள் வார்த்தையை மாற்ற ஆரம்பித்தாள்.

''ஏதாவது தொலையட்டும்; தங்கள் இருமல் எப்படி இருக்கிறது?''

''பார்ஹட் ஜீ! சொல்லுங்கள். பூராவும் சொல்லிவிடுங்கள். நானும் தான் தெரிந்து கொள்கிறேனே! தங்களைவிட்டால் யார் தான் எனக்குச் சமாசாரம் சொல்லுவார் கள்?''

பார்ஹட்: ''என்ன?'' என்று ஆரம்பித் தான். பின்னால் நின்ற பிரஸன்னா உடல் வெளிறிப் பதறினாள்

''அட அப்பா, என்னுடைய பிரஸன்னாவை மாளவ ராஜனுக்குக் கொடுக்கப் போகிறார் களாம். ஆஹா! பட்டணைப்பற்றி என்ன தான் புகழ்வது? பெண்ணைக் கொடுத்து உடன்படிக்கை? பீமதேவர் இல்லையே, இருந் தாலல்லவா தெரியும்........'' அவன் ஏதோ பாட ஆரம்பித்தான். திரிபுவன் ஆர்த்தான்.

''உண்மையிலேயா?'' அவன் கண்கள் வயிர ஒளி கொண்டு நின்றன. ''பிரஸன்னா மாளவராஜனுக்கு மாலையிடுவாளோ? என்ன பிரஸன்னா, உண்மைதானே?''

பிரஸன்னாவுக்கு ஏதாவது தோன்றினால் தானே? அவள் தலைகுனிந்து வாய் புதைத்து நின்றாள். திரிபுவன் முகத்தில் பயமுறுத்தும் கோபம்தாண்டவம்புரியஆரம்பித்தது.அவன் மூக்கு மலர்ந்து துடித்தது. பட்டணுக்கும் மாளவத்துக்கும் தலைமுறை தலைமுறையாகச் சண்டை. அதை வளர்ப்பதில் தான் பெருமை என்று நினைத்திருந்தனர். சத்துருவுக்கு எதி ரே குனிந்து கொடுத்துச் சமாதானம்கொள் வதை ராஜபுத்திரன் சாவைக்காட்டிலும் கெடுதலாக எண்ணினான்.

''பிரஸன்னா! சொல்ல வெட்கமாக இருக் கிறதா? போகத் தயார்தானே?'' கிழவன் வருத்தத்தால் மயிரைச் சுரண்டிக் கொண் டிருந்தான். இடையிடையே உக்காவும் முணு முணுத்துக்கொண்டிருந்தது.

''அத்தை சொல்லிக் கொண்டிருக்கிறாள்.''

''அத்தை? மீனல்தேவி? அவளுக்கு என்ன அதிகாரம்...?''

கொஞ்சம் யோசியாமல் திரிபுவன் சொல்லி விட்டான். பின்னாலிருந்து வந்த அதிகாரம் நிறைந்த ஓர் இனிய குரல் எல்லோரையும் பிரமிக்க வைத்தது.

''மீனல் தேவியின் அதிகாரத்தைப் பற்றிக் கேட்கிறது அது யார்?''

வாசலில் பன்னிரண்டு வருஷப் பையன் ஒரு வன் நின்று கொண்டிருந்தான். அவன் முகத் தில் கர்ணதேவரின் அழகு அலங்கரித்து நின் றது. கண்களில் மீனல் தேவியின் ஒளி பொருந்திய குளுமை காணப்பட்டது. அவ மானம் அடைந்த அதிகாரத்தின் உக்கிரரூபம் போல் நின்ற அந்த இளம் சிங்கம் கண்களை உருட்டி எல்லாரையும் விழித்துக் கொண்டி ருந்தான்.

பார்ஹட் சொன்னான் ''யார் ஜயதேவனா? வா. ஸோலங்கி வம்ச விளக்கே வா!.''

ஜயதேவன் தூக்கி எறிந்து கேட்டான். ''என் தாயைப்பற்றி இவ்விதம்பேசும் இவன் யார்? ஏன் இங்கே வந்தான்?''

திரிபுவனும் அதே குரலின் எதிரொலியில் பதில் சொன்னான். ''அரண்மனையில் உனக்கு எவ்வளவு அதிகாரமுண்டோ வர, அவ்வளவு உரிமை எனக்கும் உண்டு. இதைப் பிறகு சொல்லுகிறேன்; இப்பொழுது போகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே யாரும் தடுப்பதற்கு முன்னமேயே திரிபுவன் அங்கிருந்து பாய்ந்து ஓடிவிட்டான். அவ னுக்குத் திடீரென்று ஒரு பயம் ஏற்பட்டு விட்டது. ஜயதேவன் அடையாளம் புரிந்து கொண்டுவிட்டால் தந்தைக்குத் தொந்தர வாகும். தந்தை இந்தச் சமயம் அவனை ஒரு வருமறியாமல் இருக்கச்சொல்லி இருந்தார். பிரஸன்னாவும் பார்ஹட்ஜீயும் ஒருவரிடமும் சொல்லமாட்டார்கள். ஆனால் இளவரச னுடன் விவாதிப்பது தலையைக் கொள்ளிக் கட்டையால் சொரிந்தது போலாகும். அவன் வேகமாகக் கீழே இறங்கினான். முத லில் ஏறிய அறைக்குள் வந்து சேர்ந்தான். அவன் வில் அம்பு அங்கேயே கிடந்தன. அவைகளை அங்கேயே விட்டு முகட்டுக்கு வந்தான். பிரஸன்னாவும் அவன் பின்னால் ஓடி வந்திருப்பது அவனுக்குத் தெரியாது.

''திரிபுவன் கொஞ்சம் இரு. ஏன் இப்படி ஓடுகிறாய்?''

திரிபுவன் பிரஸன்னா மனம்பதறக் கேட் டான்: ''பின் ஏன், என்னவேலை? உஜ்ஜயினி ராணிக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?''

''கொஞ்சம் கேட்கமாட்டாயா?''

''நீ முதலில் அரசியாகு. பிறகு கேட்டுக் கொள்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டே கோபத்தின் பேயாட்டவெறியில் கீழே குதித் தான்; குதிரைமேல் ஏறிக்கொண்டு அங் கிருந்து சென்றுவிட்டான்.

பிரஸன்னா எவ்வளவு நேரம் அவனையே பார்த்திருந்தாளோ, தெரியாது.

அவள் சொல்லிக் கொண்டாள்:

''அப்பா, பிள்ளை இரண்டு பேருக்குமே இவ்வளவு ஆத்திரம் ஆகாது!''

(தொடரும்.)

கர்நாடக ஸங்கீதம்

II

ராக பத்ததி

கலாதாஸன்

ஸங்கீதத்திற்கு ஆதாரமாயிருப்பது நாதம். நாதமென்பது வெறும் சப்தமல்ல. சாதாரண ஒலிக்கும் நாதத்திற்கும் வித்தியாசமுண்டு. பாடுவதற்கும் சாதாரணமாகப் பேசுவதற்கும் எவ்வளவு பேதமுண்டோ அவ்வளவு பேதமுண்டு நாதத்திற்கும் வெறும் ஒலிக்கும். ஸங்கீதத்திற்கு ஆதாரமாயிருக்கும் நாதம் ஒரு கட்டுப்பாடுள்ளது. ஒரு முறைப்படி த்வனிக்கும்.

ஒலி என்று பொதுவாகச் சொல்லப்படுவது காற்றிலேற்படும் சலனத்தினுலுண்டாகிறதென்பது சாஸ்திரீயமாகக் கண்டுபிடித்திருக்கப்பட்ட ஒரு விஷயம். அதில் யாதொரு சந்தேகத்திற்கும் இடமில்லை. காதிற்கினிமையான ஒலிதான் ஸங்கீதத்திற்கு ஆதாரமாக இருக்கும் நாதம். இதை ஸ்வரமென்றும் கூறுவது வழக்கம், (musical note). இந்த ஸ்வரங்களில் பலவகைகளுண்டு; பற்பல சாமான்களிலிருந்து உண்டாகிற நாதம் அவைகளுக்குத் தக்கபடி வேறுபடுகிறது. சிலர் பேசுவது பாடுவது ஸங்நமாயிருக்கிறது. வேறு சிலர் தொண்டையிலிருந்து வரும் ஒலி கம்பீரமாகக் கேட்கிறது. ஒருவனுடைய தொண்டையிலிருந்து உண்டாகும் ஒலியே சில சமயத்தில் உச்சமாக இருக்கிறது. வேறு சில சமயங்களில் மந்தமாக த்வனிக்கிறது. கடைசியில் சொன்ன பேதம்தான் ஸங்கீதத்திற்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டியது. ஒலிக்காதாரமாக இருக்கும் காற்றுச் சலனம் (ஸ்பந்தனம் (Vibration) வேகமானுல் சப்தத்தின் தீக்ஷண்யதை கூடும், அதிக வேகமானுல் க்ரீச் என்றுகூடக் கேட்கும்; சலனம் குறைந்தால் நாதத்தின் கூர்மை குறையும். ஒரு ஸ்வரத்தைக் கூட்டுவது குறைப்பது என்பது இப்படிச் சலனங்களை வேகப்படுத்துவது மந்தப்படுத்துவதுதான்.

இயற்கையில் சில ஸ்வரங்கள் சேரும்போது இனிமையேற்படுகிறது. விநாடிக்கு 240 சலனமுடைய ஒரு ஸ்வரத்தையும் அதனுடைய சலனங்களுக்கு இரண்டு பங்கு வேகமுடைய அதாவது 480 சலனங்களாலேற்படுகின்ற ஸ்வரத்தையும் சேர்த்தால் அவ்விரண்டும் கலந்து மிகவும் இனிமையாக இருக்கும். இரண்டும் ஒன்ருவது போல் தோன்றும். அதேமாதிரி $1\frac{1}{2}$ பங்கு வேகமுள்ள, அதாவது 360 சலனங்களையுடைய ஸ்வரத்தோடு சேர்க்கும்போது வேறு ஒரு வகை இனிமை ஏற்படுகிறது. மேலும் $1\frac{1}{3}$ மடங்கு வேகமாயிருக்கும், அதாவது 320 சலனங்களால் ஏற்படும் ஸ்வரத்துடன் சேர்த்தாலும் ஒரு வகை இனிமை ஏற்படுகிறது. இவைகளைவாதி ஸ்வரங்களென்பார்கள். முதலில் கூறின இரண்டு ஸ்வரங்களை அதாவது 240, 480 சலனங்களுடையவைகளை எல்லையாகக் கொண்ட இடையை ஸ்தாயி என்று கூறுவார்கள். இந்த இடையில் படிப்படியாக அநேக ஸ்வரங்களை ஸ்தாபித்து, அவைகளை அடிவாரங்களாகக் கொண்டு, பலவிதத்தில் அவைகளை உபயோகிப்பதால் ராகம் என்பதுண்டாகிறது. ஒரு ஸ்தாயிக்குள் உள்ள பல ஸ்வரங்களுக்குள் உள்ள சிறு இடைகள்தான் ச்ருதி எனப்படுவது,

நமது ஸங்கீதத்திற்கு ராகம்தான் பிரதானம். ராக ஞானத்திற்கு ச்ருதி ஞானம்இன்றியமையாதது. அதனுல்தான் "ச்ருதிர்மாதா" என்று பெரியார்கள்

கூறியிருக்கிறார்கள். ச்ருதி ஞானம் இல்லாதவன் ஸங்கீதம் தாயில்லாக் குழந்தை மாதிரிதான். ஒரு ஸ்தாயியில் 12 ச்ருதிகள், 16 ச்ருதிகள், 22 ச்ருதிகள் இருக்கின்றன என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். இவைகளுக்குள்ள இடைகள் ஸமமானவையல்ல. 53 ஸம இடைகளிருக்குமாயின் நமது ஸங்கீதத்துக்கு வேண்டிய ஸ்வரஸ்தானங்கள் ஒருவாறு கிடைக்குமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஸாதாரணமாக ஒரு ஸ்தாயியில் 12 ஸ்வர ஸ்தானங்களை அமைத்துத்தான் நமது ஸங்கீதக் கலை ஏற்பட்டிருக்கிறது.

முற்காலங்களில்ஸங்கீதம் லக்ஷ்யமாகத்தான் இருந்திருக்கவேண்டும். காதுக்கினிமையாயிருக்கிற சிலஸ்வரச்சேர்க்கைகள்தான் பிரசாரத்திலிருக்க வேண்டும். முதன் முதலில் ராக ஸ்வரூபம் ஏற்பட்டது ஸாம கானத்திலிருந்துதானென்று எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அதில் முதலில் 5 ஸ்வரங்களும் பிறகு 7 ஸ்வரங்களும் உபயோகப்பட்டு வந்தன. பிறகு வாதி ஸம்வாதி ஸ்வரப்ரஸ்தார ரீதியில் வேறு ஸ்வரஸ்தானங்களும் ராகங்களும் லக்ஷியத்திலேற்பட்டன. அவைகளுக்குப் பெயர்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பழைய ராகங்கள் பாவம், ரஸம் இவைகளை ஆதாரமாகக் கொண்டவைகளாகத்தான் இருந்திருக்கவேண்டும். சாஸ்திரம், லக்ஷணம், கணக்கு முதலிய நிர்ணயங்கள் பிறகுதான் ஏற்பட்டிருக்க வேண்டும்.

ராகங்களை மேளமென்றும், ஜன்யமென்றும் திட்டப்படுத்தி, ஒரு லக்ஷண முறைக்குள் கொண்டுவந்தது வேங்கடமகி. வேங்கடமகிக்குமுன்னமேயே அநேக ஜன்ய ராகங்கள் பிராபல்யத்தையடைந்திருந்தன. சில மேள ராகங்கள் புதிதாகத் தோன்றின. சில ராகங்கள் இந்தப் பத்ததியில் பெயருக்கு மாத்திரமே இருந்தன அல்லாமல் அனுஷ்டானத்தில் பிரசாரமடையவில்லை. அவருக்குப் பிற்காலம் சில புதிய மேள ஜன்ய ராகங்கள் பிராபல்யத்தை யடையும்படி ஸ்ரீ தியாக

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான தழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளைதெரு,
தெப்பக்குளம் போஸ்ட்.

ராஜ ஸ்வாமி முதலிய பெரியார்கள் அந்த ராகங்களில் கிருதிகளையமைத்து அவைகளுக்கு ஒரு தனி அழகையும், பாவத்தையும், ரஞ்சகத்வத்தையும் கொடுத்தார்கள். உதாரணமாக, கரஹரப்ரியா என்கிற மேள ராகம் தியாகய்யர் காலத்துக்கு முந்தியிருந்ததாகத் தெரியவில்லை. புரந்தரதாஸரோ, முத்துசாமி தீக்ஷதரோ, சாமா சாஸ்திரியோ. க்ஷேத்ரக்ஞரோ அந்த ராகத்தைக் கையாண்டதாகத்தெரியவில்லை. அதில் அழகான கிருதிகளைக் கவனம் செய்து, அதற்கு ஒரு தனி ஸ்வரூபத்தைக் கொடுத்தது தியாகராஜ ஸ்வாமிதான். அதை ஒரு பெரிய ராகமாக விஸ்தாரம் செய்து பிரசாரத்தில் கொண்டுவந்த பெருமை கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யருக்குத்தான். அதுபோலவே ஷண்முகப்ரிய ராகம் சாமரம் என்ற பெயரில் இருந்திருந்தாலும் அதற்குப் பிராதான்யம் வந்தது கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர் அதைக்கையாண்டதால்தான். ஹரி காம்போதி என்பது ஒரு மேள ராகம். அநேக இனிமையான ஜன்ய ராகங்களுக்குக் கர்த்தா. ஆனால் இன்று அதை அநேகம் பெயர் பாடினாலும் அதற்கு ஒரு தனி பாவத்தைக் கொடுத்து ரஞ்சனையுடன் விஸ்தாரமாகப் பாடுவது சிரமம்தான். அப்படிப் பாடினால் கமாஸிலோ நாட்டக்குறஞ்சியிலோ போய்விழும். இவைகளைக் கலக்காமல் பாடினால் ருசியில்லாமல் வெறும் ஸ்வரச் சேர்க்கையாகத் திரும். ஆனால் இந்த மேளத்திலடங்கிய பல ஜன்ய ராகங்கள் தொன்றுதொட்டுப் பிரசாரத்திலிருந்து வந்திருக்கின்றன. வேங்கடமகி ஏற்படுத்திய மேள ஜன்ய பத்ததி ஸங்கீதத்திற்கு ஒரு சாஸ்திர லக்ஷணத்தைக் கொடுப்பதற்குமட்டும்தான் திறமுள்ளது; கலை யென்று சொல்லத்தக்கது எப்போதும் லக்ஷ்யத்தைச் சார்ந்தது. நமது அனுபவத்தில் பார்க்கலாம்; சில மேள ராகங்கள் பத்ததியில் கணக்கிற்கு மட்டும் இருக்கின்றனவே யல்லாது விசேஷமான ருசியுள்ளவைகளாகக் காணப் படவில்லை. அது போலவே உசேனி, காபி, பிஹாக், செஞ்சுருட்டி முதலிய சில ராகங்கள் சட்ட திட்டங்களுக்குட்பட்டவை யல்ல, ஆனால் பாவம் நிறைந்தவைகளாக வழங்குகின்றன.

ஒரு ஸ்தாயியில் 12 ஸ்வர ஸ்தானங்களை அமைத்து, அவைகளுக்கு 16 பெயர்களைக் கொடுத்திருப்பதால் 72 மேளங்களுண்டாகின்றன. ஒரே ஸ்வரத்திற்கு இரண்டு பெயர் கொடுக்காமலிருந்தால், 12 ஸ்வர ஸ்தானங்கள் தானிருக்கும், 32மேள ராகங்கள் தான் ஏற்படும். அதே மாதிரி சுத்த மத்யம ராகங்கள், ப்ரதி மத்யம ராகங்கள் என்ற பிரிவில்லாமல் இரண்டு மத்யமங்களையும் மற்ற விக்ருதி ஸ்வரங்களைப்போலவே உபயோகிப்பதானல் 120 மேளங்கள் உண்டாகும். இவையெல்லாம் வீண்கணக்குக்குமட்டும் தானுபயோகம். ஏட்டுச் சுரைக்காய் மாதிரிதான். உணர்ச்சியை ஆதாரமாகக் கொண்ட கலைக்கு அவசியமல்ல.

நம்முடைய ராக பத்ததியைச் சற்றுக் கவனமாக ஆராய்ச்சி செய்து பார்த்தால் சில நுட்பமான விஷயங்கள் புலப்படும். நாம் ஸ்வர ஸ்தானமென்பது ஒரு கிலுப்தமான ஸ்தானமல்ல. ஷட்ஜம், சுத்த மத்யமம், பஞ்சமம் இவைகள்தான் கிலுப்தமாக நிர்ணயிக்கப்பட்ட, மாற்றமில்லா ஸ்தானங்களையுடையவை. மற்ற ஸ்வரங்கள் அந்தந்த ராகங்களை அனுசரித்து நுட்பமான மாறுதல்களையடையும். கரஹரப்ரியாவில் வரும் நிஷாதமும் தைவதமும் ஹரிகாம்போதியில் வரும் ஸ்வரங்கள்தான். ஆனால் உபயோகப்படும் ரீதியில் கொஞ்சம் வித்தியாசப்படும். அதே மாதிரி சில ராகங்களில் ஒரு ஸ்வரத்தை யசைத்துப் பிடிக்க வேண்டிவரும், மற்றொன்றில் சுத்தமாக அசைவில்லாமல் பிடிக்கவேண்டும். இதே மாதிரி ஒரு ஸ்வரத்தை நீட்டிக் குறுக்கிப் பிடிப்பதால் பல வித்தியாசம் ஏற்படும். இந்த மாதிரியுள்ள நுட்பமான மாற்றங்களினால்தான் உண்மையான ராக பாவம் வெளிவரும். கிலுப்தமான ஸ்வரங்களையே உடைய ஹார்மோனியம், Piano முதலிய வாத்தியங்களைக் கொண்டு நமது ராகங்களை வாசிக்க முடியாது. சில ராகங்களை ஒருதினுசாக வாசிக்கலாம். ஆனால் பொதுவாக நமது ராகங்கள் அத்தகைய வாத்தியங்களைக் கடந்தவை. ஆகையால்தான் நமது ஸங்கீதத்தை அடையாளப்படுத்தி எழுதுவது சிரமம். காதால் கேட்டு ஸ்வர ஸ்தானத்தை யறியலாமே அல்லாது

ஸ்வரப்படுத்தி அடையாளங்களுடன் எழுதி வைத்ததைக் கொண்டுமட்டும் நிர்ணயிக்க முடியாது. இதனுல் ஸ்வரப் படுத்தி எழுதி வைப்பது அனுவசிய மென்று நினைக்கக்கூடாது. ஞாபகத்திற் காக எழுதி வைப்பது மிகவும் உப காரமானது. ஆனுல் முதலில் காதால் கேட்டிருக்க வேண்டும். இல்லாமற் போனுல் பாவமே மாறிப் போகலாம்.

இந்தக் காரணத்தைக் கொண்டுதான் ச்ருதி பேதம் என்னும் முறையை வெகு ஜாக்ரதையாகக் கையாள வேண்டு மென்று சொல்லுவது. ஒரே ஸ்வரம் வெவ்வேறு ராகங்களில் வெவ்வேறு விதத்தில் உபயோகப்படுவதால் ச்ருதி பேதம் செய்யும்போது ஸ்வர பேதமேற் படலாம், ராகம் கெட்டுப்போகலாம்.

ராகங்கள் தற்கால நிலையை அடைந் திருப்பது திடீரென்று வந்ததல்ல. வெகு கால்மாகப் பெரியார்களால் ஆராய்ச்சி செய்யப்பட்டும், அனுபவத்தில் கொண்டு வரப்பட்டும், பற்பல மாற்றங்களையடைந் தும் வந்தவைகள். முகாரி, வராளி, மோஹனம், ஸாவேரி முதலிய ராகங் கள் வெகு காலமாகப் பழக்கத்திலுள்ள வைகள். பைரவி ராகம் முகாரிக்குப் பிறகுதான் வந்ததாகத் தோன்றுகிறது. உசேனி, பிஹாக், கமாஸ் முதலிய ராகங் கள் பிற்காலம்தான் நமது பத்ததியில் உட்படுத்தப்பட்டன. யமுனு கல்யாணி, செஞ்சுருட்டி முதலியராகங்கள் வடக்குத் தேச முறையிலிருந்து ஸ்வீகரிக்கப்பட் டன. ஹம்ஸத்வனி ராகம் ராமஸ்வாமி தீக்ஷிதரால் கற்பிக்கப்பட்டது. கதன குதூஹலம் பட்டணம் சுப்பிரமணிய அய்யரவர்களால் ஸ்ருஷ்டிக்கப்பட்டது. முத்தையா பாகவதர் வலஜி என்ற ராகத் தைக் கற்பித்தார். மேலும் அநேக ராகங் களின் ஸ்வரூபம் தியாகப்ரும்மம் செய்த கிருதிகளால் தான் தெரியவருகிறது. சாருகேசி, கலாவதி, நளினகாந்தி, நபோ

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்ரையின் உபயோ கத்தினுல் நின்றுபோனது நீங்கும். வருங் காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுத லின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியா விலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக் கானவர்கள் உபயோகிக்கின்றூர்கள்

சாதாரண கேஸ்களுக்கு	...	...	ரூ 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு	...	...	ரூ 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு	...	...	ரூ 8

(வி. பி. அணு 12 கூட)

தயாரிப்பவர்கள்:-

MRS. P. DEVEE, F.D.S. (C.M.)

Tollygunge, CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும்:—

ஹாரி & சன், 93, சைனுபஜார் ரோடு, மதராஸ்.
ராகவன் & கம்பெனி, ஸ்ரீ நரசிம்ஹராஜா ரோடு, பங்களூர் ஸிடி.
நாதம் & கம்பெனி, மட்டஞ்சேரி, கொச்சி.
ஷா கம்பெனி, மங்களூர். (S: K.)
L. M. முகர்ஜி & சன்ஸ லிமிடெட், 167, தராம்தோலா தெரு; கல்கத்தா.
சிவாநந்த சித்தர் மெடிகல் ஹால், 92, கடல் தெரு, கொழும்பு, & 768, லோவர் தெரு, பாத்துல்லா (ஸிலோன்)

மணி முதலிய ராகங்களின் லக்ஷணம் அய்யரவர்கள் உருப்படிகளிலிருந்துதான் தெரியவருகிறது. சாருகேசி ராகத்தை வெறும் சங்கரதோடி யாக்காமல் ஒரு தனி பாவத்துடன் வெளிப்படுத்த வேண்டுமானால் "ஆடமோடிகலதா" என்ற உருப்படியைக் கொண்டுதான் ஸாதிக்க முடியும். அல்லாமல் வெறும் ஸ்வரங்களைக் கொண்டு ஒரு மேள ராகமாகப் பாடினால் சங்கரதோடி யாகும், தனி ஸ்வரூபம் வெளிப்படாது.

சுபபந்துவராளி என்கிற மேள ராகம் தேசீயதோடி என்ற பெயரால் நேபோகட யுண்டே என்ற கிருதியில் தியாகராஜ ஸ்வாமியால் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சிலர் சொல்லுகிறார்கள். வேறு சிலர் அது வராளி ராகத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது என்கிறார்கள். சுபபந்துவராளியை ஒரு தனி பாவத்துடன் வராளி, பந்துவராளி கலக்காமல் பாடமுடியும். அதற்கு வேண்டிய சிரமம் எடுத்துக்கொள்பவர் சிலரே. வட இந்தியாவில் தோடி என்று வழங்கி வருகிற ராகம் நமது சுபபந்துவராளி தான். ருசிகரமாக அதைப் பாடலாம். ஆனால் நமது வித்வான்களில் பெரும்பாலருக்கு அதிகக் கச்சேரிகள் ஏற்படுவதாலோ, வேறு எக் காரணத்தாலோ, இப்படிப்பட்டகாரியங்களில் கவனத்தைச் செலுத்தச் சௌகரியம் கிடைப்பதில்லைபோலும். அதுமட்டுமல்ல. சில வித்வான்கள் இந்தமாதிரி விஷயங்களில் சிரத்தை எடுத்துக் கொண்டு அபூர்வ ராகங்களுக்குத் தனி ஸ்வரூபத்தைக் கொடுத்துப் பாட முயற்சி செய்தால் அவர்களை உற்சாகப்படுத்துவதில்லை என்பதோடுமட்டுமில்லாமல் அவர்களை மட்டம் தட்டுவதுமுண்டு. நானே இதைப் பார்த்திருக்கிறேன்; அபூர்வ ராகங்களை யாராவது பாடினால், "என்னடா இது! தோடி, சங்கராபரணம் முதலிய ராகங்களையே இன்னும் பூர்ணமாகப் பாட முடியவில்லை. இந்தப் பாக்குவெட்டி ராகங்களெதற்கு" என்று பரிஹாஸம் பண்ணுவதை நானே கேட்டிருக்கிறேன். சற்றே கவனித்துப் பார்த்தால் இப்படி சொல்வது எவ்வளவு தவறென்பது விளங்கும். கலைவளர்ச்சிக்கு ஓரளவில்லை. தோடி முதலிய சிரஞ்சீவி ராகங்களை எவ்வளவு விஸ்தாரம் செய்தாலும் முடிவில்லை. அது அந்த ராகத்தின் தன்மை. அதனால் வேறு சின்ன ராகங்களைப் பாடக்கூடாதா? புதிய ராகங்களைப் பாடி ரஞ்சிப்பிக்க முயலக்கூடாதா. பெரிய ராகங்களை அதிக விஸ்தாரமாகப் பாடிப் பழகாத சிலர் சில சின்ன ராகங்களை வெகு அழகாகவும் ரஞ்சகமாகவும் பாடி நம்மைப் பிரமிக்கச் செய்வதைப் பார்த்திருக்கிறோம். காலஞ் சென்ற ஸ்ரீ கிட்டப்பா ஹரிகாம்போதி, சூர்யகாந்தம், பவப்ரிய முதலிய மேள ராகங்களை எப்படிப் பாடினாரோ தெரியாது. சுபபந்துவராளியை வெகு அழகாகப் பாடி யிருக்கிறார். எந்தப் புற்றில் எந்தப் பாம்பிருக்குமோ யார் கண்டார்கள்? மனதை விசாலமாக வைத்துக்கொண்டு, நல்லதை எந்த இடத்தில் கண்டாலும் கிரஹிக்க ஸந்நத்தமாக இருப்பதுதான் உண்மையான கலைஞனுடைய நோக்கமா யிருக்க வேண்டும்.

மேலும் விஜயநாகரி, கௌடமல்லாரு முதலிய ராகங்கள் அபூர்வமானாலும் புதியவைகளல்ல; நமது நூல்களில் அந்த ராகங்களுக்கு லக்ஷணகீதங்களிருக்கின்றன. தியாகப்ருமம் அவைகளைக் கையாளாததால் பிரசாரமேற்படவில்லை. ஸ்ரீ முத்தையா பாகவதரவர்கள்தான் அந்த ராகங்களில் உருப்படிகளை இயற்றிப் பிரசாரத்திற்குக் கொண்டு வந்தார். இன்னும் இப்படிப்பட்ட அநேக ராகங்கள் பூர்வீக கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன; ஆனால் அவைகளில் பாட்டுக்களில்லாததால் அவைகளின் பாவம் தெளிவாகவில்லை. அதற்குத் தக்க பக்குவமுள்ளவர்கள், நன்றாகத் தியானம் செய்து, அவைகளைக் குறித்துச் சர்ச்சைகள் நடத்தி, அவைகளுடைய தனித் தன்மையை உணர்ந்து அவைகளில் உருப்படிகள் செய்வது ஸங்கீத தேவதைக்குச் செய்யும் ஓர் உயர்ந்த கைங்கர்யமாகும்.

டால்டாவில் தயாரித்த
ஜிலேபிகளை குழந்தைகள்
மிகவும் விரும்புகிருர்கள்!
தண்ணீர் ஊற்றி
2 கப் மைதாமாவில்
பிசைந்து நெகிழச்செய்து கொள்ள
வும். பிசைந்தமாவை மூடி இரண்டு
தினங்கள் வைத்திருக்கவும். ½ பவு
ண்டு சர்க்கரையில் நீர்க்க பாகுதயா
ரித்து அதில் ½ தேக்கரண்டி குங்குமப்
பூவும் சில சொட்டுகள் பன்னீரும்
சேர்த்துக்கொள்ளவும். பிசைந்த மா
வில் 1 தேக்கரண்டி தயிர்விட்டு நன்
ருக கலந்துகொள்ளவும். கலவை
யை ¼ அங்குலம் குறுக்களவுள்ள
துவாரம் வழியாக ஊற்றவும். தகரப்
போணியில் அல்லது உலர்ந்த கொட்
டாங்கைச்சியில் துவாரம் செய்து
இதற்காக உபயோகிக்கலாம். டால்
டாவை குழிவுகுறைந்த வாணலியில்
நன்ருக சூடாக்கி மாவை வட்ட'வட்
டமாக பிழிந்து வறுத்தெடுக்கவும்.
பிறகு சிறு சூடான பாகில் போடவும்.
சிலமணி நேரம் ஊறின பிறகு ஜிலே
பிகளை அப்புறப்படுத்தி நல்லகாகிதத்
தில் பரப்பி உலரவைக்கவும்.
போஷாக்குகளை இழக்காமல்
காய்கறிகளை சமைப்பது
எப்படி?
இலவசமான ஆலோசனை
களுக்கு இன்றே—அல்லது
என்று வேண்டுமானுலும்—
எழுதுங்கள்!
தி டால்டா
அட்வைஸரி
ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353,
பம்பாய் 1
HVM. 95-23 TM
DALDA
VANASPATI

சென்ற இதழ் தொடர்ச்சி

இதுதான் உலகம்

கே. சுந்தரம்மாள்

மறு நாள்! சிவகுமார், ராம் குமார், கலீல் மூவரும் பண்ணையின் பங்களாவில் நுழைந்த சமயம் தபால்காரன் ரிஜிஸ்டர் கவரை அவர்கள் முன் நீட்டினான். கையெழுத்திட்டு அவனை அனுப்பிவிட்டுக் கவரைப் பிரித்தான் சிவகுமார்.

“பண்ணைக்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென்றும், இனி அவனோ, அவனது சந்ததியார்களோ, இப்பண்ணையின் மீது யாதொரு பாத்தியமும் கொண்டாட முடியாதென்றும், தான் இனி இந்தப் பக்கமே வருவதில்லையென்றும், விடுதலைப் பத்திரம் விபரமாக எழுதி, ரிஜிஸ்டர் ஆபீசில் பதிவு செய்து அனுப்பப்பட்டிருந்தது. அதைப் படித்ததும் ராம்குமாரின் முகம் மலர்ந்து காட்டியது. சிவகுமாரின் முகம் சோகத்தைச் சித்திரித்தது.

அடுத்தாற்போல் உஷாவின் தாயாரின் கடிதத்தைப் படித்தார்கள்.

“எட்டு நாளைக்குள் எவ்வளவு மாறுதல்? உஷாவின் தியாகத்திற்கு அவளைக் கோவிலில் வைத்துக் கும்பிட வேண்டும்” என்றார் ராம் குமார்.

பதில் பேசாமல் தன் விலாசமிட்ட கவரைப் பிரித்தான்.

அன்பரே!

இவ்விதம் அழைப்பதற்கு எவ்வளவு ஜன்மங்களெடுத்தாலும் எனக்கு உரிமையுண்டு. நான் இவ்விதம் செய்தது தியாகமா? துரோகமா? என்று நீங்கள் கேட்கலாம். பண்ணையின் கண்களால் பார்த்தால் தியாகம் எனத் தோன்றலாம். உங்கள் மனக் கண்ணாடியில் துரோகமாகத் தோன்றலாம். ஏன், ஹுமாயூனுக்குக்கூட நான் மனப்பூர்வமாகத் துரோகமே செய்கிறேன். வயிரத்தை வயிரத்தினாலேயே அறுக்க முடியும். சூழ்ச்சியைச் சூழ்ச்சிகளினால்தான் வெல்ல முடியும். நடந்த விஷயம் இதுதான். ஹுமாயூன் கலகத்திற்கு ஏற்பாடு செய்வதையும், பட்டாமணியம் பதில் நடவடிக்கை எடுக்கத் தீர்மானிப்பதையும், அவரும், சிவசங்கரன் அவர்களும் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த ஒருவர் என்னிடம் தெரிவித்தார். (பெயரைக் குறிப்பிடாததற்கு மன்னிக்கவும்) சற்று நேரம் சிந்தனை செய்து பார்த்தேன். கலகம் விளைந்தால்? புத்திரனை இழந்த ஸ்திரீகளும், கணவனை இழந்த மனைவிகளும் கதறும் காட்சி என் மனத் திரையில் தோன்றின. இவைகளுக்குக் காரணம் உஷா. உஷா ஒருத்தியைக் காக்க இவ்வளவு இரத்தம்? என்பதை நினைக்கவே முடியவில்லை. உஷா ஹுமாயூனுக்கு அர்ப்பணமானால் எங்கும் நிம்மதி. ஆனால் சிவகுமார்! உஷாவின் மனக்கோட்டை! அன்பின் வேகம் திகைக்கச் செய்தது. காதலுக்கும் கடமைக்கும் சற்று நேரம் போராட்டம் நடந்தது. கடைசியில் விதியின் பேரிலேதான் கடமைக்கு இடமேற்பட்டது. விதியின் ரூபமாக ஹுமாயூன் வந்துவிட்டான். விதியை ‘வெல்ல முடியாது’ என்ற முடிவில் மாறுவேஷத்துடன் நானே அவனிடம் கடிதம் கொண்டுபோய்க் கொடுத்தேன் என்னை என் வீட்டில் சந்திக்குமாறு.

நான் குறிப்பிட்டிருந்தபடி காலை எட்டு மணிக்கு அம்மா கோவிலுக்குச் சென்றிருந்த சமயம் வந்தான். வேலைக்காரியைக் கடைக்கு அனுப்பிவிட்டு நானே வாசலில் நின்று வரவேற்றேன் அவனை. பிறகு இரவே நான் எழுதி வைத்திருந்த பத்திரத்தில், அவன் கையெழுத்திட்டால் உஷா அவன் வசமாவாள் என்று சொன்னேன். பத்திரத்தைப் படித்துவிட்டு,

“என் சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொள்வதில் உனக்கு வருத்தமிருக்காதே?” என்றான்.

"சந்தேகம் நிவர்த்தியாவது அத்யாவசியம்" என்றேன்.

"நான் கையெழுத்திடுவதற்கு நம்பிக்கை வேண்டுமே" என்றான்.

"நீங்கள் இதைப்போல் எழுதிக் கையெழுத்திட்டு ரிஜிஸ்டர் செய்து என்னிடம் காண்பித்தால், அந்த க்ஷணமே உங்களுடன் புறப்பட்டு விடுவேன். இருவருமாகவே சென்று அடுத்த ஊரில் போஸ்ட் செய்து விட்டுப் போவோம், சரிதானே" என்றேன்.

"அவ்வளவு போதும். ஆனால் என்னை மனப்பூர்வமாக விரும்புகிறாயா?" என்றான்.

"இதற்கு என்ன பதில் சொல்லுவது! ஒரு திருப்தி என்னவென்றால், உண்மையில் அவன் நான் நினைத்தபடி முரடனல்ல. வழக்கிற்குக் கட்டுப்படக்கூடியவன். என்மீது ஏற்பட்டிருப்பது உண்மையான அன்பு என்பது. அதனால் அவனை என்னிஷ்டப்படி நடக்கச் செய்வது அவ்வளவு கஷ்டமல்ல என்பது புலனாகவே, 'இதுவரை உங்களை நெருங்கிப் பார்த்துப் பேசியதில்லை. இப்பொழுது பேசியதிலிருந்து தாங்கள் முரடனல்ல. அன்புக்குரியவர் என்று தெரிந்து விட்டது. இப்பத்திரமில்லாமலே உங்களுடன் வந்து விடுவேன். ஆனால் என் கடன் தீர்க்கப்படுவது கடமையல்லவா? எனக்குரியவர்தானே என் கடனைத் தீர்க்க முடியும். நீசத்தனமான தொழிலிலிருந்து என் தாயாரையும் என்னையும் காத்தவர்கள் பண்ணையார்கள். நான் இன்று உன்னத நிலையிலிருப்பது சிவகுமாரின் அரிய முயற்சியால். அவரும் நானும் கல்யாணம் செய்துகொள்ளுவோம் என்பது ஊராரின் அபிப்பிராயம். நடப்பது ஒன்றும் நினைப்பது ஒன்றும் ஆவது உலக இயல்பு. எங்கள் மனம் விரும்பினாலும், இயற்கைக்குப் புறம்பான எங்கள் காதல் நிறைவேற முடியாதென்பதை எங்கள் உள்ளம் அறியாமலிருக்க முடியுமா? அவருடன் தொழிலில் மாத்திரம் பங்கெடுத்துக் கொண்டு, தேசத்தொண்டு செய்து வருவதாகவே தீர்மானித்தேன். வாழ்க்கையில் அவருடன் பங்கு பெறும் பாக்கியம் சிவசங்கரனின் மகள் சந்தியாவதிக்குத்தான் உண்டு.

'தற்சமயம் உங்கள் விவகாரம் காதில் பட்டதும் எனது வெகுநாளைய விருப்பம் நிறைவேறத் தக்க தருணம் கிடைத்தது என்று மகிழ்வுற்றேன். சிங்கப்பூர் முதலிய இடங்களில் வசிக்க வேண்டும்; கோஷா முறையை அனுஷ்டித்துப் பார்க்க வேண்டும் என்பது. அது உங்களால் நிறைவேற்றப்படும் என்று நம்புகிறேன்' என்று கடைக் கண்ணால் அவனை நோக்கினேன்.

"ஆஹா! என்ன பாக்யம் செய்தேன்? ஊர்ப் பேச்சைக் கேட்டு இரத்தம் சிந்தத் தயாராக இருந்தது எவ்வளவு மூடத்தனம்? அல்லாவே கண் திறந்தார்; உன்னை எனக் களித்தார். உஷா என்னுடையவள் என்றால் தீயில் குதிப்பதற்குக்கூடத் தயார்" என்று முடிப்பதற்கு முன்,

"ஐயோ அப்படிச் செய்து விட்டால் என் விருப்பம் எப்படி நிறைவேறும்" என்றேன் வரவழைத்த சிரிப்புடன்.

"ஆஹா, எவ்வளவு அழகாகப் பேசுகிறாய்! உன் கட்டளை எதுவானாலும் செய்வேன் என்பதற்காகச் சொன்னேன்" என்றான்.

"சரி. ஓர் நிபந்தனை. இவ்வேற்பாடுகள் இரகசியமாகவே இருக்க வேண்டும். வெள்ளிக்கிழமை இரவு என் ஆஸ்பத்திரியில் தயாராக இருப்பேன். தாங்கள் காருடன் அவ்விடம் வர வேண்டும். நீங்கள் தயார் பண்ணின ஆட்களை, தகுந்த சன்மானத்துடன் அவர்கள் இருப்பிடத்திற்கு அனுப்பி விட வேண்டும். காரணம், கலகத்தால் நன்மையுண்டாகாது என்று தாங்கள் தீர்மானிப்பதாகச் சொல்ல வேண்டும். என்ன?" என்றேன்.

"அப்படியே. தேவியின் உத்தரவைச் சிர மேற்கொள்ளுவேன். ரிஜிஸ்டர் செய்த பத்திரத்தை உன் கண்ணில் காட்டிய பிறகே நீ வண்டியில் ஏறலாம்" என்றான்.

பிறகு சற்று அருகில் வந்து என் கையைப் பற்ற முயன்றான். நான் இரண்டடி பின் சென்று, "சிங்கப்பூர் சென்று, உங்கள் வழக்கப்படி மணம் செய்த பின்புதான் என்னைத் தீண்ட முடியும், சற்றுமுன் தாங்கள் கேட்ட "நம்பிக்கை" எனக்கும் வேண்டுமல்லவா? தவறினால் எனது மிருத தேகத்தைத்தான் தீண்ட முடியும்" என்றேன்.

"உன் இஷ்டபடியே நடக்கிறேன்; குரான் மீது ஆணை வைக்கிறேன். இப்பொழுது உன் கைக்கு ஒரு முத்தமட்டும்" என்றான் வெறிபிடித்த பித்தன்.

"எல்லாம் சிங்கப்பூரிலே" என்றேன். அதற்குள், ஆஸ்பத்திரியிலிருந்து போன் வந்து விட்டபடியால், அத்துடன் சென்று விட்டான்.

எல்லா ஏற்பாடுகளும் என் விருப்பப்படி நடந்தேறின. எனது மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள, உங்கள் ரிவால்வரை எடுத்து வைத்துக்கொண்டேன். இதுவரை என்

வீட்டில் உட்கார்ந்து எழுதினேன். தற்சமயம் ஓர் ரயில்வே ஸ்டேஷனில் உட்கார்ந்து எழுதுகிறேன்.

அவன் ஏதோ சில சாமான்கள் வாங்கிவர ஊருக்குள் சென்றிருக்கிறான். பத்திரத்தை என் கையில் கொடுத்து, அருகிலிருந்த போஸ்டாபிஸில் ரிஜிஸ்டர் தபாலாக அனுப்பச் சொன்னான். என் கடிதத்தையும் முடித்துக்கொண்டு அனுப்பிவிடுவேன். அம்மா பாதியிரவில் விழித்துக் கொள்ளாமலிருக்கப் பாலில் மயக்க மருந்தைக் கலந்து கொடுத்தேன். இதுவரை எல்லாம் சரியாகப் போய்விட்டன. இனிமேல் நினைத்த காரியம்தான் என் வாழ்க்கையையே பாதிக்கும் விஷயம். கப்பலில் போகும் பொழுது, தந்திரமாக அவனை மேல் தளத்திற்கு அழைத்துச் சென்று அவனைக் கடலில் துயிலச் செய்துவிட்டு, பிறகு நானும் சமுத்திர ராஜனைச் சரணமடைந்து விடுவதாகத் தீர்மானித்திருக்கிறேன்.

அன்பரே! இதுவரை என் மனதிற்கு விரோதமாகப் பேசி, நாடகம் நடித்தேன். ஓர் அரிய தியாகம் செய்கிறோம். ரோஜாப் பண்ணையை ரத்தம் சிந்தாமல் காத்தோம். இந்துமதி தேவியார் என்னைத் தங்களிடமிருந்து விலகச் செய்ய அநேகவிதச் சூழ்ச்சி செய்தும் தோல்வியடைந்தார். இன்று அவர் பிரயத்தனமில்லாமல் உங்களைவிட்டு விலகிவிட்டேன் என்ற நினைப்பில் எல்லா வேலைகளையும் தவக்கமின்றிச் செய்து முடித்தேன். இந்தச் சமயம் எனது மனநிலை எவ்விதமிருக்குமென்பதைத் தங்கள் உள்ளம் அறியும். ஓவெனக் கதற வேண்டும் போலிருக்கிறது. நாம் ஆற்று மணலில் உட்கார்ந்து எழுப்பிய கோட்டைகள், ஆஸ்பத்திரியில் இருவருமாகச் செய்யும் வேலைகள் யாவும் என் மனத்திரையில் தோன்றி நெஞ்சைப் பிளக்கின்றன. தாங்கள் அயல் நாட்டிலிருக்கும் பொழுது, உங்களது அன்புமிக்க கடிதங்களாலும், மறுபடியும் பார்ப்பது நிச்சயம் என்ற நினைப்பினாலும் பிரிவுத் துக்கத்தைத் தாங்கும் சக்தி ஏற்பட்டது. இப்பொழுது இனிமேல் இந்த ஜன்மத்தில் பார்க்க முடியாது என்ற நினைப்பு என்னைத் தஹிக்கிறது. ஆனால் இவ்வேதனை இன்னும் ஐம்பத்துநாலு மணி நேரந்தான். பிறகு சமுத்திர ராஜன் மடியில் நீங்காத துயிலில் ஆழ்ந்து விடுவேன். தங்களை என்னை மறக்காதீர்கள் என்று நான் கேட்கப்போவதில்லை. என்னை மறந்து, தாங்கள் சந்தியாவுடன் வாழ்க்கைப் பாதையில் பிரயாணம் செய்தால்தான் என் ஆத்மா சாந்தியடையும். நான் உங்கள் மீது கொண்டது உண்மையான காதலென்றால் உங்களது சந்தோஷகரமான வாழ்க்கையைத்தானே என் மனம் ஏற்கும்? நான் இவ்விதமெல்லாம் எழுதுகிறேனே தவிர, என் பிரிவால் தங்கள் மனம் எவ்விதம் தவிக்குமென்பதை என் அந்தராத்மா அறிவுறுத்தாமலில்லை. உங்களுக்கு நான் மனமாரத் துரோகம் செய்யமாட்டேன் என்பதும் தாங்கள் அறிந்த விஷயமே. என்னை மன்னித்து விடுங்கள்.

இன்னும் மூன்று நாளில் "கப்பலில் கோரக் கொலை. ஒரு ராக்ஷஸப் பெண்ணின் கோரச் செயல். ஆடவனைக் கடலுக்குள் தள்ளி தானும் விழுந்துவிட்டாள். காப்பாற்ற முடியாமற் போய்விட்டது" என்ற தலையங்கங்களுடன் வரும் பத்திரிகைகளைப் பார்ப்பீர்கள். ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். கப்பல் டிக்கெட் வாங்க எனது பெயரை அவனாகவே மாற்றிச் சொல்லிவிட்டான். 'நீ அழகாக இருக்கிறாய். மும்தாஜ் என்பதே எனக்கு மிகவும் பிடித்தமானது' என்றான். 'சரி' என்றேன். இனிமேல் என்னால் எழுத முடியவில்லை. நிச்சயம் மறு ஜன்மத்தில் தம்பதிகளாக வாழ்வோம். என் ஆவி உங்களின் ஒவ்வொரு பணியிலும் கலந்து கொள்ளும். நமது ஆஸ்பத்திரியில் தான் என் ஆவி நிரந்தரமாக வசிக்கும். உங்களைப் பிரிவதைவிட, ஏற்ற பணியைச் செய்ய முடியாமற் போய்விட்டதே என்பது தான் மிகவும் வருத்தமாக இருக்கிறது. இவ்வளவெல்லாம் எதனால் வந்தது. விதி, அது செய்த சதி, தாசி குலத்தில் பிறந்ததற்கு அபராதம். அன்பரே போகிறேன்! போகிறேன்! போகிறேன்! ரோஜாப்பண்ணையும் அதன் யஜமானர்களும் நீடூழி வாழ்க. அன்பரே கடைசி வேண்டுகோள். என் அன்னைக்குரிய கடமையை நான் செய்யவில்லை. அவள் உங்கள் அடைக்கலம். அன்பரே உஷா காலம் போய்விட்டால் சந்தியா காலம் வந்துதானே ஆகவேண்டும். நமஸ்காரம். என்னுடைய ஒவ்வொரு எழுத்தும் சத்தியத்தின் பெயரால் பொறிக்கப்பட்டது.

இப்படிக்குத் தங்கள் அடியாள்
அபாக்யவதி
உஷா

கடிதத்தைப் படித்து முடித்ததும், உலகமே சுழலுவது போன்ற உணர்ச்சி தோன்றினது. கடிதத்தைத் தமயன் மீது வீசியெறிந்துவிட்டு "உஷாவின் ரத்தத்தின் மீதா, பண்ணை நிலைத்தது? உஷா! உஷா! உன்னை விட்டா நானிருக்கப் போகிறேன்? இதோ நானும் வந்தேன்" என்று வெறிபிடித்தவன் போல் வெளியே ஓடினான். கல் தடுக்கி

விழுந்தவன், மண்டை கல்லில் மோதவே நினைவை இழந்தான்.

மூன்று நாளைக்குப்பின் சுய நினைவு வரும் பொழுது கட்டிலில் படுத்திருப்பதையும், பக்கத்தில் கலீல் உட்கார்ந்திருப்பதையும் உணர்ந்தான்.

"கலீல் என்னவாயிற்று?"

"நீ பிழைத்தாயே, அது ஒன்றுதான் ஆன விஷயம்."

"ஏன் பிழைத்தேன்? கலீல், உஷாவைத் தேடிப் போவதற்கென்ன? நீ ஏன் என் பக்கத்திலிருந்தாய்?"

"போனேன்."

"என்னவாயிற்று?"

"உஷா போய்விட்டாள். அப்பாதகன் தப்பிவிட்டான். பெண்ணைக் கொலை செய்ததாக அவன்மீது ருஜு ஏற்பட்டு, அரஸ்ட் செய்திருக்கிறார்கள். குமார்! உஷாவை இனிக் காணமாட்டோம்" என்று குமாரை அணைத்த வண்ணம் விம்மினான்.

"ஐயோ! இதுவா உன்கதி! கலீல், உடனே கடலில் தேடவில்லையா?"

"தேடினார்களாம். சடலம்கூடக் கிடைக்கவில்லையாம்."

"அப்படியானால் என் உஷா இறக்கவில்லை. வா போய்த் தேடுவோம்."

"ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாது தற்சமயம் உன் நிலைமை. தப்பியிருந்தால் தானே உன்னிடம் வந்துவிடுவாள்."

"ஐயோ! விதியே, இப்படியா சதி செய்தாய்" என்று கத்தினான். உடனே மயக்கம் வந்துவிட்டது.

* * *

"ரகுபதி ராகவ ராஜாராம், பதித பாவன சீதாராம்" என அன்று சுக்ரவார சாயங்காலமாதலால் ரோஜாப்பண்ணையின் தொழிலாளர் யாவரும் சலவைக் கற்களால் நிர்மாணம் செய்த ஐந்து கோபுரங்களையுடைய மஹாலின் நடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் உஷாவின் பிரதிபிம்பமெனத் தோன்றும்படி

ஆயுர்வேத வித்வான் 'B.V. பண்டிட்' அவர்களின்
சத்வைத்யசாலை. நஞ்சன்கூடு.
"நஞ்சன்கூடு பல்பொடி"
I.D.L நெ 61, மெடிகேட் [பல் உபாதைகளுக்கு]
குழந்தைகளுக்கு
காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை
கர்ஜன் கோரோஜனை மாத்திரை
பாலக்ஸ் பேதியாக மாத்திரை
ஜ்வரேக் [எவ்வித ஜ்வரங்களுக்கும்]
ஜிஞ்சிப் [அஜீர்ண பித்த சமனி]
கூலெக்ஸ் [உஷ்ண சமன ஸ்நான தைலம்]
வியாதி விபரம் ஸ்டாம்புடன் எழுதவும்.
ஸான்டலக்ஸ் நறுமண சரும ரக்ஷிணி முகப்பரு, புண், சொறி குணமடைய.
காஷ்மீர்-குஸும் கூந்தல் செழிப்புக்கு நீங்களே தைலம் செய்ய உதவுகிறது.
மைசூர் "பிரேமலீலா" உயர்தர ஊதுபத்திகள்
'அகர் ஸ்பெஷல், ஜவாது, ஜெயலக்ஷ்மி'
யுனைடெட் கன்ஸர்ன். 54, பந்தர் தெரு, மதறாஸ்.
டிப்போக்கள்: மதுரை, கோவை, கும்பகோணம், பம்பாய்.

நகமுதல் சுயரிறமாக, அதி அற்புதமாகச் செதுக்கப்பட்ட உஷாவின் சிலைக்கு வழிபட்டு இருபுறமும் நின்றுகொண்டு பாடினர்கள். மஹாலைச் சுற்றிப் புஷ்பங்கள்நிறைந்த நந்த வனம்ரமணீயமாகத்தோற்றமளித்தது. மதில் சுவருக்கும் மஹாலுக்கும் உள்ள இடைவெளி சுமார் 50 கஜமிருக்கலாம். மதில் வாயிற்படி வரை ஜனங்கள் நின்றுகொண்டிருந்தார்கள்.

பஜனை முடிந்து யாவரும் போன பின்பு, தலையில் ஓரிரண்டு கருமயிரைத் தவிர நரையுடனும், அழுக்கேறிய பர்த்தாவினுல் தன்னை மூடிக்கொண்டு கண்ணில் கறுப்புக் கண்ணுடியுடனும் நின்ற, ஒரு குஜராத்திப் பெண் பிள்ளையைப் பார்த்த காவற்காரன்,

"ஏனம்மா நிற்கிருய்?" என்ருன்.

"நான் வடக்கே வெகுதூரத்திலிருந்து ஊர் ஊராய் யாத்திரை செய்துகொண்டு வந்தேன். இந்த ஊரின் விசேஷத்தைப் பற்றியும், இக்கோவிலைப்பற்றியும் பக்கத் தூரில் கேள்விப்பட்டேன். பார்த்துப்போக லாமென்று வந்தேன். இன்றிரவு இக்கோவிலிலேயே படுத்திருந்துவிட்டுக் காலையில் சென்றுவிடுகிறேனப்பா" என்று பாதி ஹிந்தியும், பாதி தமிழுமாகக் கலந்து சொன்னுள்.

"வெளியே சத்திரம் வேண்டியது இருக்கிறது; அங்கே போ" என்ருன்.

"புண்ணியம் உண்டு. என்னை விரட்டாதே. இரவுபொழுது இவ்விடம் இருக்கிறேன்" என்ருள்.

காவற்காரன் தர்க்கம் செய்யும்பொழுது ராம்குமாரும், இந்திராவும் அவ்விடம் வந்தவர்கள், "என்னடா தர்க்கம் செய்கிருய்" என்ருர்கள்.

காவற்காரனிடம் கேட்டபடியே இவர்களிடமும் கேட்டாள் கிழவி.

"அதற்கென்ன, தாராளமாக இருந்துவிட்டுப்போ. வெளியே குளிரும். ஹாலுக்குள்ளேயே ஒரு பக்கமாய்ப் படுத்துக்கொண்டிரு. என் தம்பி பத்து மணிக்குமேல் வந்து இவ்விடம்தான் இரவைக் கழிப்பான். அவன் உள்ளே இருக்கக்கூடாதென்ருல் வெளித் தாழ்வாரத்தில் படுத்துக்கொள்" என்ருர்.

"வாழையடி வாழையெனத் தழைத்தோங்குங்கள்" என்று வாழ்த்திவிட்டு, ஹாலின் ஓர் மூலையில் சுருண்டு படுத்துக்கொண்டாள்.

சிலை மீதிருந்த இரத்தின ஹாரத்தை, எடுத்துத் துடைத்து மறுபடியும் சிலையின் கழுத்தில் போட்டாள் இந்திரா. அருகில் கூடையிலிருந்த புஷ்பத்தை எடுத்து இருவரும் சிலையின் பாதத்தில் போட்டார்கள்.

"அம்மா! உஷா. எந்தவகுப்பானுலென்ன? குணமே பிரதானம். உனது தியாகக் கொடியில் ரோஜாப்பண்ணை மறுமலர்ச்சி பெற்றது. நீ விரும்பிய ரத்னஹாரத்தை அன்று உனக்களிக்க மறுத்தேன். இன்று இதோ உன் சிலையில் பூட்டி மகிழ்கிறேன். அதற்குரியவள் நீயன்றி வேறு யார்? என்றென்றும் என் சந்ததியார்கள் குல தெய்வமாக வணங்குவார்கள். தெய்வமாக நின்று எங்களைக் காப்பாற்று. பெண்ணினத்திற்கே பெருமை தந்த பாக்கியவதியே, உன்னை வணங்குகிறேன்" என்று சிலைக்கு நமஸ்காரம் செய்தாள் இந்திரா.

"உஷா, உங்கள் அன்பை அறியாத கசடனுகிவிட்டேன். என் குமாரின் வாழ்க்கைக்கு நானே யமனுக வந்தேன். எனக்குச் சொல்லுவதற்கு வார்த்தைகளே யில்லை. உன் குமாரைக் காப்பாற்று" என்று ராம்குமார் கரங்குவித்தார். இருவரும் சற்று நேரம் சிலையை உற்று நோக்கியவண்ணம் நின்ருர்கள். கண்களில் நீரருவி பெருகியவண்ண மிருந்தது. நீண்ட மூச்சு அவர்கள் சோகத்தை வெளிவிட்டது. இருவரும் திரும்பிச் சென்ருர்கள். இவைகளையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த குஜராத்தி மாது, "இதுதான் உலகம்" என்று தனக்குள் சொல்லிச் சிரித்துக் கொண்டாள்.

அவர்கள் சென்றதும் சந்தியாவளி கையில் புஷ்பத் தட்டுடன் வந்தாள். சிலையின் பாதத்தில் மலர்களைத் தூவினுள். "உஷா! உன் உயிருக்கு யமன் நானுகவன்ருே வந்தேன். அன்று நான் வந்து சொல்லாவிடில் உனக்கு ஒன்றும் தெரிந்திருக்காது. கலகம் வரும், தானே அடங்கிவிடும். உன் வாழ்வு சீர்பெற்றிருக்கும். உஷா நான் மஹா பாதகி. உன் பிரிவால் ரோஜாப்பண்ணையே தவிக்கிறது. உஷா! இதற்குப் பிராயச்சித்தம் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ஆனுல், நீ வாழ்வை யிழந்து சென்றதற்குக் காரணமான நான் மட்டும் சுக வாழ்வு பெறுவதா? அது ஒருநாளுமில்லை. என் ஜீவன் முடியு மட்டும் கன்னிகையாகவே யிருந்து உலக வாழ்வைத் துறந்து, உனது சிலையடியில் கதறி, என் உயிரை விடுவதே எனது வாழ்வின் வேலை. "கதறிக்கதறி என் பாவத்தைக் கண்ணீரினுல் உன் பாதத்தில் கழுவிச் சுகம் பெறுவேன்" என்று சிலையின் பாதத்தில் முகத்தைப்புதைத்துக்கொண்டு, கோவெனக் கதறிப் பலவிதமாகப் புலம்பினுள். பிறகு நிமிர்ந்து சிலையை நோக்கி, உன் சிவகுமார் சன்னியாசியைப்போல் வாழ்வது உனக்குத்

தெரியுமா உஷா! விதி ஏன் இவ்விதம் சதி செய்தது. அன்பு உஷா! சிவகுமார் அன்பிற்கு உவமை எங்குமே இருக்க முடியாது. உஷா! தினம் உன் காலடியிலேயே அவரின் இரவு கழிந்து வருகிறது. உன் வாய் திறந்து பேசு வாயோ! உஷா! என்னை மன்னிப்பாயா?" என்று புலம்பிவிட்டுச் சென்றாள்.

"அடபாவமே! சந்தியா, அவன்மீது காதல் வைத்த தோஷமா உனக்கு இந்தக் கதி?" என்றாள் குஜராத்தி மாது தனக்குள்ளாக.

பிறகு ஒருவரும் வரவில்லை. சாவடியில் பத்து மணியடிக்கும் அறிவிப்பு ஊதிற்று. சிவகுமார் அவ்விடம் வந்தான். சுருண்டு படுத்திருந்த குஜராத்தி மாதின் மனம் திக்கென்றது. தலையோடு கால் மூடியவண்ணம் துணியின் இடுக்கு வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கதவைத் தாளிட்டுவிட்டுச் சிலையின் பக்கத்தில் வந்து நின்ற சிவகுமார் கூடையிலிருந்த புஷ்பத்தை எடுத்து சிலையின் தலைமீது கொட்டினான்.

"உஷா! அவர்களைப்போல் நான் உன்னைத் தெய்வமாகப் பூஜிக்க மாட்டேன். உன்னைப் பூஜிப்பதற்காக இம்மந்திரத்தையும் உன் சிலையையும் எழுப்பும்படி நான் கேட்கவில்லை. உன் சிலையில் முட்டிக்கொண்டே என்றோ என் பிராணனை விட்டிருப்பேன். ஆனால், எந்தச் சேவைக்காக நீ உன்னையும் உயிரையும் பணயம் வைத்தாயோ, அப்பணியை நிறைவேற்றினால்தான் உன் ஆத்மா சாந்தியடையும் என்பதற்காகவே வாழ்ந்து வருகிறேன். ஆனால் உஷா! ஏனிப்படிச் செய்தாய்? உன் குமார் பேடியென்பதா உன் அபிப்பிராயம்? அக்கசடனுக்கு உன்னைப் பலியிடவா இவ்வளவு பாடுபட்டேன்? உஷா காலம் போனால் சந்தியா காலம் வருவது உலக இயற்கையாக இருக்கலாம். என் விஷயத்தில் எப்பொழுதும் அந்தகார காலம்தான் நிலைத்து நிற்கிறது. ஒரு காலமும் போவதுமில்லை, வருவதுமில்லை. உஷா! உஷா! என்று எவ்வளவு தரம் அழைத்தாலும் நீ பேச மாட்டாயா? பேசு! பேசு! உஷா பேசு" என்று புலம்பியபடி சிலையைத் தழுவி முகத்தோடு முகம் சேர்த்து வைத்துக் கொண்டான். அரை நிமிஷம் சென்றது. மூடிய கண்ணைத் திறந்தான். மின்சார தீபம் அணைந்து அந்தகாரம் சூழ்ந்தது,

"உஷா! இதற்காகக் குத்துவிளக்கை நான் ஏற்றப்போவதில்லை. என் மனம்போல் புறமுமிருக்கிறது' என்று முடிக்குமுன்,

"அன்பரே" என்றகுரல் கேட்டது.

"யார்?"

"ஏன், நான்தான்"

"யார்? கேட்டகுரல்போல் தோணுகிறதே"

'அன்பரே நான்தான்',

"உஷா!"

"ஏன்"

"நீயா பேசுகிறாய்?" என்று சிலையின் வாயில் கை வைத்துப் பார்த்தான்.

"ஆம், நான்தான்பேசுகிறேன்"

"எவ்விடமிருந்து பேசுகிறாய்? இரு, இதோ விளக்கைப்போட்டுப் பார்க்கிறேன்."

"வேண்டாம்' விளக்கைப் போட்டால் நான் இவ்விடமிருக்கமுடியாது. உங்களுடன் பேச முடியாது. என் உருவத்தை நீங்கள் பார்க்க முடியாது. அதனால் தயவு செய்து விளக்கைப் போடாதீர்கள்"

"அப்படியானால் நீ........ "

"நான் சுய உருவத்திலில்லை. பேயுருவம். உள்ளன்பினால் பிணைக்கப்பட்டதினால், சுயநலமற்ற தியாகத்தினால் உங்களிடம் வந்து பேசமுடிகிறது. ஏன் உங்களை ஸ்பர்சிக்கக்கூட முடியும், நீங்கள் பயப்படாதிருந்தால்."

"பயமா! உஷா ஒருகாலத்தில் நான் பிசாசு என்பதை நம்பாதிருந்தேன், இன்று அதை நம்புவதே பரம திருப்தியாக இருக்கிறது. எங்கே என் அருகில் வா" என்று கைகளை நீட்டினான்.

கைக்குள் பாய்ந்த உஷா அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மினாள். இறுக அணைத்தவண்ணம் "உஷா! என் உஷா? நிஜமாக நீ இறந்து போனாயா? இப்பொழுது எனது ஆலிங்கனத்திற்குள்ளிருப்பது பேயுருவமா?" என்றான் காதருகில்.

"ஆமாம் அன்பரே. நான் பிசாசுதான்"

"பிசாசிற்கு உருவம் கிடையாது என்பார்களே. பட்டுச்சேலையும் மகமல் ஜாக்கெட்டும், கையில் வளையல்களும், நீண்ட பின்னலும், தலையில் புஷ்பமும் பேய் என்பதை நம்பமுடியவில்லையே!"

"மோகினிப் பிசாசு சர்வாலங்கிருத பூஷிதையாக இருக்குமென்பதை நீங்கள் கேட்டதில்லையா? உங்களுடன் பேசி மகிழ

வேண்டும் என்று பகவானை மனமார வேண்டித் தவம் செய்தேன்., பகவான் மனமிரங்கி உன்னத லக்ஷ்யம் கொண்ட சிவகுமாருக்காக, உன்மீது மாசுமறுவற்ற தெய்வீகக் காதல்கொண்ட சிவகுமாருக்காக, குறிப்பிட்ட சில சமயம் உனக்குச் சுய உருவம் கிடைக்குமென்றார். வரம்பெற்றதும் தங்களைக் காண வந்தேன். உட்கார்ந்து கொண்டு சாவகாசமாகப் பேசலாமா?"

"அதோ அந்த மேடைதான் எனக்குப் படுக்குமிடம், முக்கால்வாசிநாளும் உன் சிலையின் பாதத்திலேயே தூங்கிவிடுவேன். மேடைமீது உட்காரலாம் வா,"

"உலகில் உயிருள்ள பொழுது கிடைக்கும் மரியாதையைவிடச் சிலையாக மாறும் பொழுது கிடைக்கும் மரியாதை அனந்தம்," என்று மடிமீது தலைவைத்துப் படுத்துக் கொண்டாள் உஷா.

"உஷா! நீ எவ்விதம் கடலில் குதித்தாய்? ஏன் என்னை வெறுத்தாய்?"

"உங்களை வெறுத்திருந்தால் இன்று வருவேனா? விஷயங்களைச் சொல்லத்தானே வந்தேன்." சொல்லுகிறேன் கேளுங்கள்; நான் எதற்காக அவனுடன் செல்லத் தயாரானேனென்பது எனது கடிதத்தினால் தாங்கள் அறிந்திருப்பீர்கள். கப்பலேறியதும் தலை சுற்றினது. படுக்கையை விரித்துப் படுத்துக்கொண்டேன். சிங்கப்பூர் போகும் வரை என் அறைக்கு அவன் வருவதில்லையென்று பிரமாணம் செய்திருந்தானாதலால் கதவைத் தாழிட்டுக்கொண்டே படுத்து விட்டேன். அருமையான கனவு உலகத்தில் சஞ்சரித்தேன்.

"கப்பல்மேல் தட்டில் தனியாக நின்று சுருண்டுவரும் அலைக்கும் இருண்டுவரும் என் மனதிற்கும் உள்ள ஒற்றுமையில் சென்றது மனம். தோளில் கை வைத்த உணர்ச்சி ஏற்படவே திரும்பினேன். சிவப்புநாடா கழுத்தில் தொங்க. நம்ம குழந்தைகள் 'மதர்' என்று சொல்லுவார்களே, அவள் நின்று கொண்டிருந்தாள்.

'என்னவேண்டும் தங்களுக்கு?" என்றேன்.

"உனது மனத்துயரம் தெரிய வேண்டும்" என்றாள்.

"மனத்துயரமா" என்றேன். அப்பொழுதிருந்த மனநிலைமையில் அவள் மார்பில் முகத்தைப் புதைத்து அழவேண்டும் போலிருந்தது. மேலே வார்த்தை வெளிவராமல் கண்ணீர் நிறைந்த என்னைப்பார்த்து!,

"நான் கப்பலேறியது முதல் உன்னைக் கவனித்து வருகிறேன். அக் கசடன் உன்னைப் பலவந்தமாக அழைத்துச் செல்கிறானென்பது தெரிய வந்தது. உன் போன்று துன்பமுற்றவர்களுக்கு உதவி புரியவே இறைவன் எங்களை அனுப்பியிருக்கிறார். கண்ணே, உன் துயரத்தை வெளியிடு" என்றாள்.

"உங்கள் பெயர், பண்ணையின் பெயர் இரண்டையும் சொல்லாமல் விஷயத்தை ஒருவாறு சொல்லி முடித்தேன்."

"வைரத்தை வைரத்தினாலேயே அறுக்க முடியும். அவனை வஞ்சகமாகவே ஏமாற்றி விடலாம். என்னுடன் ஒரு வேலைக்காரியை அழைத்துவரப் பாஸ் வாங்கினேன். கப்பலேறும் தருணம் அவள் வரமுடியாமல் போய் விட்டது. புறப்படும் சமயத்திலேற்பட்ட குழப்பத்தில் ஒரு ஆள் குறைந்ததை அதிகாரி கவனிக்க முடியவில்லை. அது விஷயம் பிறகு சொல்லலாமென்றிருந்தேன். சொல்லாதது தற்சமயம் நல்லதாகப் போய்விட்டது. இப்பொழுது மணி பன்னிரண்டு. யாவரும் நல்ல நித்திரையிலிருக்கிறார்கள். நீ எனது அறையில் படுத்துறங்கு. இந்த உடைகளைக் களைந்து விட்டுப் பஞ்சாபி டிரஸ் அணிந்து கொண்டு அந்தப் பெட்டியிலேயே இருக்கும் கண்ணாடியையும் கண்ணில் போட்டுக் கொண்டுவிடு. உன்னை அடையாளம் கண்டு பிடிக்கமுடியாது. நான் உனது பெட்டியைத் தூக்கி, கடலில் தொப்பென்று போட்டுவிட்டு நீ கடலில் குதித்து விட்டதாகச் சத்தம் போடுகிறேன். பிறகு என்னுடன்...... இந்த ஊரில் கொஞ்சநாள் தங்கிவிட்டுப் பிறகு திரும்பிப் பம்பாய்க்கு வந்து, காந்தி ஆசிரமத்தில் சேர்த்து விடுகிறேன். நீ மக்கள் பணியில், அஹிம்சையின் ஜோதியில், சத்யத்தின் ஒளி வீச வாழ்க்கை நடத்தலாம். விதியுண்டானால் காதலனையும் அடைவாய்" என்றாள்.

"கப்பலேறும்வரை அவனைக் கொன்றுவிட வேண்டுமென்ற ஆவல் உச்ச நிலையை அடைந்திருந்தது. கப்பலேறிப் புறப்படும் சமயம் அதில் ஒரு தொண்டர் பிரயாணம் செய்வதினால் "அஹிம்ஸா பரமோதர்மா! வாழ்க பாரதமாதா! தியாகமே வாழ்க்கையின் பயன்!" என்றெல்லாம் கோஷங்கள் எழுந்தன. இவையெல்லாம் மனதில் ஏதோ ஒருவிதமான சஞ்சலத்தைக் கொடுத்தன. மேல் தட்டில் நிற்கும்பொழுது, நீரில் சந்திரனின் பிரதி பிம்பத்தில் புத்தரின் கருணை முகம் கண்டேன். கடலில் அவனைத் தள்ளினால் என்று நினைத்தபொழுது, "மகளே, இதுவா உன் பிறப்பின் லட்சியம்?" என்று புத்தர் கேட்பதுபோன்ற பிரமை தோன்

றிற்று. அதனால் அவனைத் தள்ளும் யோசனையைக் கைவிட்டு நான் மட்டும் விழும் சிந்தனையிலிருக்கும் சமயமே அவள் வந்தாள்.

"அந்தச்சமயம் அவளின் சொற்கள் சஞ்சீவி போல் தோன்றினபடியால் மறு பேச்சின்றி ஒத்துக்கொண்டேன். யாவும் எங்கள் திட்டப்படி வெற்றிகரமாக்வே நடந்து முடிந்தன. பிறகு காந்தி ஆசிரமத்தில் நிம்மதியாக வேலை செய்தாலும் உங்களை மட்டும் மறக்க முடியாமலிருக்கிறது. இந்த மாதிரி என் சிலைக்கு மரியாதை நடப்பதாகக் கேள்விப்பட்டு இவ்விடம் வந்தேன். தங்களின் பரிதாபகரமான வாழ்க்கையைப் பார்த்ததும் எனது தியாக உணர்ச்சி மறைந்துவிட்டது. சிலையிருந்த இடம் ஆஸ்பத்திரியாகமாறுகிறது. சந்தியாவும் உஷையும் குமாரின் வாழ்க்கையில் இன்றியமையாதவர்களாகிவிடுகிறார்கள். ஆனால் உஷா, நீ தான் என் முழு அன்பிற்கும் உரியவள் என்று தாங்கள் என்னை அழைத்துக் கொள்ளுகிறீர்கள். திடுக்கிட்டுக்கண் விழித்தேன். தலையணை என் ஆலிங்கனத்தில் அகப்பட்டுக் கொண்டிருந்ததைக் கண்டேன்.

"இந்தக் கனவு பலிக்காதா? என்று ஏங்கினேன். பிரயோஜனம்? சுற்று முற்றும் ஒருவரும் தென்படவில்லை. மனதைக் கல்லாக்கிக் கொண்டு கடலில் குதித்துவிட்டேன். மறுபடி கண் விழிக்கும்பொழுது தியாகத்திற்குப் பலியான பிசாசுகளின் கூட்டத்தில் நிற்கக் கண்டேன். பிசாசு என்றால் கோர ரூபமாக இருக்கவில்லை. மனித உருவுடன் ஆடையணிந்தே நின்றார்கள். அவர்களுடன் நானும் சேர்ந்துகொண்டு பேசலானேன். எனக்குத் தங்களைக் காணவேண்டும் என்ற ஆவல் மிகுதியாகவே ஏகாக்கிர சிந்தையாகப் பகவானை வேண்டினேன்.

"இந்த மாதிரி ஒருவருக்கும் செய்ய முடியாது. உங்களது உள்ளன்பிற்காக இது செய்ய முடிகிறது. குறிப்பிட்ட சில சமயத்தில் உன் சுய உருப்பெற வரமளிக்கிறேன்." என்றார் பகவான். அடுத்த நிமிஷம் உங்களிடம் வந்துவிட்டேன்."

"அப்படியானால் இனி என்னைவிட்டுப் போகமாட்டாயே"

"மனதைவிட்டுத்தான் போகமாட்டேன். சூரிய ரச்மியால் எனக்கு உருவம் கிடைக்காது. அதனால் விடியும் முன் நான் சென்றுவிடவேண்டும்."

"நான் விடாமல் பிடித்துக் கொண்டிருந்தால்?"

1949-ஆம் ஆண்டு

உங்களுக்கு வைத்திருப்பது என்ன?

அறியவேண்டாமா? என்றைய தினம் என்ன ஸம்பவம் நடக்க இருக்கிறது என்பதை எளிதில் நீங்கள் அறிந்துகொண்டுவிடலாமே! இன்றே ஒரு கார்டு எழுதுங்கள். உங்கள் முழு விலாஸமும் நீங்கள் நினைக்கும் ஓர் புஷ்பத்தின் பெயரும் கண்டு எழுதுங்கள் போதும். எழுதும் தேதியிலேயிருந்து வரும் பன்னிரண்டு மாதங்களுக்கு உங்களுக்கு கிடைக்கப்போகும் லாபம், நஷ்டம், எந்த வியாபாரத்தின் மூலம் எந்தவிதமாக ஏற்படப்போகிறது என்ற விபரம், வேலை எப்பொழுது கிடைக்கும், சம்பளம் எப்பொழுது உயரும், பரீக்ஷையில் நீங்கள் தேறுவது முதலான எல்லா விஷயங்களையும் மாதவாரியாகப் பலன் குறித்து ரூ. 1—4—0க்கு வி. பி. யில் அனுப்பிவைக்கப்படும்.

★

தபால் செலவு தனி.

இங்கிலீஷிலேயே எழுதியனுப்பவும்

Shree
Swami Yogiraj Jyotish Asram,
C. K. PHAGWARA. (Kapurthala State)

“பிடியிலிருந்து தானாகவே பேயுலகம் சென்றுவிடச் செய்யும் சக்தி. நான் நினைத்த பொழுது வருவதற்கும் முயற்சி செய்கிறேன். இவையிருக்கட்டும். ஒரு முக்கியமான விஷயம் பற்றி உங்களிடம் சொல்லவேண்டும். நான் சொல்வதைச் செய்வீர்களா?”

“சொல்லு! சொல்லு உஷா! எதுவானாலும் செய்கிறேன்.”

“பேயுலக மஹாநாடு கூடும்பொழுதெல்லாம் சிலவிஷயங்களைப்பற்றி விவாதிப்போம். நம்ம ஊரில் மலையாண்டித் தேவன் ஹரிஜன ஆலயப் பிரவேசமாக மிகவும் பாடுபட்டு, கடைசியில் அந்த விவகாரத்தாலேற்பட்ட அடிதடி சண்டையில் இறந்துபோனாரல்லவா? அவரின் சிலை நிறுத்தப்பட்டு, பள்ளிக்கூடத்திற்கு அவர் பெயரையும் வைத்தார்கள். எதற்காக? அவர் ஆத்மா சாந்தியடையுமென்று. ஆனால் அவரின் ஆத்மா என்ன சொல்லுகிறது தெரியுமா? ‘இதனாலெல்லாம் எனக்குத்திருப்தி ஏற்படவில்லை. ஆலயப் பிரவேசம் செய்தால்தான் சாந்தி” என்றார். மஹாநாட்டில் இதுபோல் பொதுநலத்திற்காகப் பாடுபட்ட அநேகம்பேர்களும் அகால மரணம், துர்மரணம் இவைகள்தானே கைமேல் கண்ட பலன். அவர்களெல்லோருமே, சிலையும், பெயரும் வேண்டவே வேண்டாம். லக்ஷ்யம் கைகூடினால் துர்மரணத்தினாலேற்பட்ட பாபம் நீங்கப் பெற்று எங்கள் ஆத்மா சாந்தியடையும். பேயுலகத்தினின்றும் விடுதலையும் கிடைக்குமென்கிறார்கள்.”

“அப்படியானால் உன் விருப்பமென்ன சொல். செய்துவிடுகிறேன்.”

“என் லக்ஷ்யம் சேவை. இந்தச் சிலையை எடுத்துவிட்டு, அதில் தர்ம வைத்யசாலை ஏற்படுத்த வேண்டும். தாங்கள் குதூகலத்துடன், மக்களுக்குச் சேவைசெய்யவேண்டும். ‘உஷா உஷா’ வென்று ஏங்கக்கூடாது. சந்தியாவைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்.”

“எல்லாம் நீ சொன்னபடி செய்கிறேன். ஆனால் மனிதனின் லக்ஷ்யம் ஹ்ருதயத்தில் ஒருத்திக்குத்தான் இடமளிக்க முடியும் என்பதுதான். அதை நிறைவேற்ற நீ எனக்கு அனுமதியளிக்கவேண்டும். சந்தியா, உன் வாழ்வு பாழானதினால் தானும் வாழ விரும்பவில்லை. அதைத் தடுக்க நான் யார்? மூன்று நாளைக்குள் இவ்விடம் ஒரு நவீன ஆஸ்பத்திரியாகிவிடும். ஆனால் உஷா என்னுடன் வைத்யம் செய்ய வருவாளா?”

“வெளியுலகிற்குத் தெரியாமல் தங்களுடன் பணி செய்வாள். நாட்கள் பல சென்றுவிட்டால் உங்கள் கண்ணிற்கு மட்டும் படும்படியாக இந்த ஹாலுக்குள்ளேயே உங்களுடனிருக்க வரம் வாங்கி வருவாள்.”

“நிச்சயமாகச் செய்வாயா?

“சத்தியமாகச் செய்வேன்.”

“இப்பொழுது போய்விடுவாயா?”

“சூரியோதயத்திற்குள் என் உருவம் மறைந்துவிடும்”

“அதுவரை நாம் பேசிக்கொண்டேயிருப்போம். நாளைக்குக் கலிலிடம் மட்டும் சொல்லலாமல்லவா?”

“சொல்லுங்கள். அவரும் உங்களுடன் ஒத்துழைப்பார். தேவர் விருப்பத்தை நிறைவேற்ற அவர்தான் தகுதியுள்ளவர். சரி, பாதியிரவிற்கு மேலாகிவிட்டது. நீங்கள் படுத்துக்கொள்ளுங்கள். நான் உங்கள்பாதங்களை வருடிக்கொண்டே பேசுகிறேன். இந்தவிருப்பத்தை நிறைவேற்ற முடியுமா?”

“சரி உன்னிஷ்டம்.”

கால்களைவருடியவாறே பேசிக்கொண்டிருந்தாள். இன்பமயமான ஸ்பர்சம், காணாததைக்கண்ட ஆனந்தம். இவைகளில் மிதந்த குமாரை நித்ராதேவி அணைத்துக்கொண்டு, உஷாவை விடுதலைசெய்தாள்.

மெதுவாக எழுந்திருந்து, அவன்முகத்தைச் சற்றுநேரம் நோக்கிவிட்டு, மெதுவாகக் கதவைத்திறந்துகொண்டு வெளியே வந்தாள். காம்பவுண்டு வாசற்படியில் நின்றுகொண்டு சிலையை நோக்கினாள்.

“உண்மையாக நடந்தவற்றைக் கனவு என்று உரைத்தேன். விடிந்து ஹாலுக்குள் கிடக்கும் பர்த்தாவைப் பார்த்துவிட்டு, உஷாவின் பேய் என்று பிரஸ்தாபம் பரவும். தேவி இதுதான் நான் செய்யக்கூடிய தியாகம்” என்றாள். இருளிலும் சிலையின் கழுத்திலுள்ள ரத்தினஹாரமும், மஹாலின் ஸ்தூபியும் பளபளவென்று மின்னின. “உயிருள்ள என் கழுத்தில் இந்த மாலையைப் போடுவது பாபமென்றான் இந்திரா. எனது உருவான கற்சிலையின் கழுத்தில் அவளே பூஜித்து அணிவித்தாள். நான் ரோஜாப்பண்ணையில் வாழத் தகுதியற்றவள் என்றார்கள். எனது சிலைக்கு மஹோன்னதமான மஹால். சமுகத்தின் கருணை இதுவே. தேவி “இதுதான் உலகம்” என்று கையெடுத்துக் கும்பிட்டு விட்டு இருளில் மறைந்தாள் உஷா.

முற்றிற்று.

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

ரஜியா

ஹரிணி

ஹிந்தியிலிருந்து மொழி பெயர்ப்பு

சாயங்காலவேளை. குளிர்ந்த காற்று மெல்லென வீசிக்கொண்டிருந்தது. ஆற்றோரத்திலுள்ள பெரிய பாறையின் மீது உட்கார்ந்து கொண்டிருந்தாள் ரஜியா. அவள் மனம் எதைப் பற்றியோ எண்ணமிட்டுக் கொண்டிருந்தது. ஆற்றின் அக்கரையில் எதை அப்படி கண்ணிமைக்காமல் உற்றுப்பார்க்கிறாள்? அவள் கண்களிலுள்ள ஏக்கம் அவள் யாருடைய வரவையோ எதிர்பார்க்கிறாள் என்பதைக் காட்டியது. "தாஹர்! நீ இனிமேல் திரும்பிவரவே மாட்டாயா?" என்று அவள் வாய் முணுமுணுத்தது.

நன்றாக இருட்டி விட்டது. பொன்னிறமான அவளுடைய மேலாடை காற்றில் அசைந்து படபடவென்று சத்தமிட்டது. தன்னை மறந்திருந்த ரஜியா அந்தச் சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டாள். சுற்றிலும் ஒரு முறை பார்த்துப் பெருமூச்சு விட்டு, "தாஹர்! என்னை எப்படி உன்னால் மறக்க முடிந்தது? மரணத்தைத் தவிர வேறு எதுவும் நம்மைப் பிரிக்க முடியாது" என்று அன்றொருநாள் நீ கூறிய வார்த்தை என்ன வாயிற்று? விவாக தினத்தன்று நீ கூறிய வார்த்தைகளை அதற்குள்ளாகவா மறந்து விட்டாய்? என்னால் மறக்க முடியவில்லையே! "ரஜியா, ஆயிரம் தான் கஷ்டம் வரட்டும், உன்னை ஒரு க்ஷணம்கூட விட்டுப் பிரிய மாட்டேன்" என்றாயே. ஆனால் ஒரு வருஷம் கூட முடியவில்லை. அந்த விபசாரி ஜுபேதாவுடன் ஓடிவிட்டாயே! இன்று எங்கேயிருக்கிறாய்? தாஹர்! தாஹர்! நீ ஒருநாளும் வர மாட்டாயா? அல்லா! ஏன் மனிதர்கள் இவ்வளவு வஞ்சகமும், பொய்யும் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள் என்று அறிய முடியவில்லையே! தாஹர்! அன்று ஒரு......" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்த ரஜியாவின் அருகில் ஒரு குதிரை வீரன் வந்து நின்று, "அம்மணி! நகரத்திற்குச் செல்ல வழி எது?" என்று கேட்டான்.

ரஜியா அலட்சியமாக, "இதோ, இந்தப் பக்கமாகப் போனால் அரை நாழிகையில் போய்ச் சேரலாம்" என்றாள்.

"தயவு செய்து சற்றே கூட வர முடியுமா" என்றான் பணிவாக அவ்வீரன்.

ரஜியா வேண்டா வெறுப்பாக எழுந்து நடக்கலானாள். குதிரை வீரன்—அந்நகரத்தின் இளவரசன் சிராஜ்—யோசனையில் ஆழ்ந்த வண்ணம் அவள் பின்னே சென்று கொண்டிருந்தான். சிராஜ் ரஜியாவிடம் மோகம் கொண்டு, அடிக்கடி அங்கு வந்து அவளுடைய குடிசையைச் சுற்றி வட்டமிட்டுக்கொண்டிருந்தான். ஆனால் கணவனுடைய—அன்பின் நினைவில் தன்னை மறந்து ஆழ்ந்து கிடந்த ரஜியா, அவனைக் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கவில்லை.

கடைசியில் சிராஜ் வேறு வழியில்லாமல், அவள் கவனத்தைக் கவரவே வழி தெரியாதவன்போல் பாசாங்கு செய்தான். நாற்சந்தி கூடுமிடம். ரஜியா முன்னே சென்றாள். சிராஜ் குதிரையைக் கையில் பிடித்து மெல்ல மெல்ல அவள் பின்னே சென்றான். திடீரென்று குதிரை மீது தாவி ஏறினான். கூடவே ரஜியாவையும் தூக்கி உட்கார வைத்தான். இவைகள் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்தன.

ரஜியா ஒரு கணம் திகைத்தாள். ஆனால் மறு விநாடி சட்டென்று நிமிர்ந்து, "யார் நீ! இது என்ன அக்ரமம்? நான் பட்டாணியப் பெண். ஜாக்கிரதை!" என்று கர்ஜித்தாள்.

சிராஜ் மெதுவாக: "ரஜியா! கோபிக்காதே. நீ இல்லாமல் என்னால் உயிர் வாழமுடியாது. நீ ஏன் இந்த வறுமையில் கிடந்து உழல வேண்டும்? இளவரசன் சிராஜ் உன் காலடியில் சேவை புரியக் காத்திருக்கிறான்" என்றான்.

ரஜியா மறுபடியும் திடுக்கிட்டாள். அவள் உடல் நடுங்கியது. பிறகு மெதுவாகச் சமாளித்துக்கொண்டு, "மகராஜ்! அப்படியானால் தாங்கள் பரதேசிகளின்மீது கருணையுடனிருக்கும் நீதி வாய்ந்த நமது அரசரின் குமாரரா?" என்றாள்.

"ஆமாம்!" என்று சொல்லிக்கொண்டே குதிரையை அடர்ந்த காட்டின் பக்கமாகச்

செலுத்தினான். ரஜியா கெஞ்சினாள், அழுதாள், கதறினாள். "சர்க்கார்! என்னை விட்டு விடுங்கள். என்னைப்போன்ற அபலைகளின் மானத்தைக் காப்பது உங்கள் கடமையில்லையா? வேண்டாம். மானமிழந்த பிறகு நான் எப்படி நாலுபேர் முகத்தில்விழிப்பது? சர்க்கார்! தயவு காட்டுங்கள்" என்று வேண்டினாள். மோக வெறியில் சுழன்ற சிராஜ் இதையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளவேயில்லை. குதிரை போய்க்கொண்டிருந்தது. மனித சஞ்சாரமற்ற இடம். சிராஜ் கீழே இறங்கினான். ரஜியா கோப வெறியில் தன்னை மறந்தாள். "சீ! துஷ்டா! தூர நில். அருகில் வந்தால் பிறகு வருந்த நேரிடும். ஜாக்கிரதை!" என்றாள்.

சிராஜ் அலக்ஷியமாகச் சிரித்தான். அவள் அருகில் நெருங்கினான். வேறு வழியில்லை.

ரஜியா இடுப்பிலுள்ள கத்தியை உருவி அவன் மார்பில் குத்திவிட்டாள்.

* * *

தர்பார் மண்டபம். நியாய விசாரணை. அரசன் சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறான்; புத்ரசோகத்தினால் அவன் முகம் வாடியிருந்தது. கண்கள் சிவந்திருந்தன. சபையில் பயங்கர நிசப்தம் குடிகொண்டிருந்தது. துக்கச் சாயை படர்ந்த முகத்துடன் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தனர் யாவரும். அரசனுடைய வலது பக்கத்தில் மந்திரி உட்கார்ந்து வழக்கு விஷயமான காகிதங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான்.

அரசன் கடுமையான குரலில் குற்றவாளிக் கூண்டில் நிற்கும் ரஜியாவைப் பார்த்து, "நீ ஏன் இவ்வளவு கடுமையான குற்றம் செய்தாய்? என் குழந்தையைக் கருணையற்றுக் கொன்றுவிட்டாயே. என்ன காரணம் பெண்ணே!" என்றான். ரஜியா தலைகுனிந்தாள். கண்ணீர் பொங்கி வழிந்தது. மெதுவாக, "மகாராஜா! நான் என்ன செய்யட்டும். என் கற்பைக் காத்துக் கொள்ள அச்சமயம் எனக்கு வேறு வழி தெரியவில்லை. என் கத்தியின் உதவியைத் தான் நாடவேண்டியிருந்தது. நான் எவ்வளவோ வேண்டினேன், சர்க்கார்! அவர் என்னிடம் தயவு காட்டவில்லையே." என்றாள்.

சற்று நேரம் ஒரே மௌனம். பிறகு அரசன் மந்திரியைப் பார்த்து, "மந்திரி! இந்தப் பெண்ணைக் கொலையாளி என்றுதான் தீர்மானிக்கவேணுமா?" என்றான்.

மந்திரி ஆச்சரியத்தினால் மலர்ந்த கண்களுடன் அரசனை உற்றுக் கவனித்தான்.

"ஏன் தீர்மானிக்கக் கூடாது சர்க்கார்! அவளே குற்றத்தை ஒப்புக் கொள்ளுகிறாளே."

"ஆமாம். உண்மைதான். ஆனால் மந்திரி! குற்றம் செய்தவன் இளவரசன். அரசனாயிருந்தும் நீதியை மீறினவன். ஒரு ஏழைப் பெண்ணை அவமானம் செய்வது—கற்பைக் கொள்ளையடிப்பது—பெரிய குற்றமல்லவா? தீரயோசித்துப் பார்த்தால் அவனுடைய குற்றத்திற்கு ஏற்ற தண்டனைதான் கிடைத்திருக்கிறது. ஆகவே இந்தப்பெண் குற்றமற்றவள். இதனால் நகரத்திலுள்ள வாலிபர்களுக்கு நல்லபாடம் கற்பிக்கப்பட்டிருக்கிறது!" என்று கம்பீர

1893 - 1948

ரகம் - சேவை

சென்ற 55 ஆண்டுகளாக உண்மையான பொருள்களுக்கும் உன்னத சேவைக்கும் நாங்கள் நல்ல பெயரைக் காப்பாற்றி வந்திருக்கிறோம். கடந்தகாலத்தைப் போலவே எதிர்காலத்திலும் எங்கள் பெயர், நல்லரகத்திற்கும், யாருக்கும் இணையற்ற சேவைக்கும் உத்தரவாதமாக இருக்கும்.

வீக்கம்ஸி ஜுவல்லர்ஸ்

1893-ல் நிறுவப்பட்டது

112, சைனா பஜார், சென்னை.

மாகக்கூறி, 'ரஜியா! நான் உன்னை விடுதலை செய்துவிட்டேன். நீ போகலாம்" என்றான்.

சபையில் ஒரேகலகலப்பு. அரசன் எழுந்து சென்று விட்டான்.

*   *   *

அரசன் தன் இளைய குமாரன் அன்வார்காளை, மெக்காவுக்கு அனுப்பி விட்டான். அங்கே அவர்களுடைய குலகுரு ஜமால்கான் அவனுக்கு நல்ல உபதேசங்களைச் செய்யவேணுமென்று ஏற்பாடு. இவனாவது கெட்டவழக்கங்களிலிருந்து தப்பி, நல்ல குணவானாக விருக்க வேண்டுமென்பது அரசனுடைய ஆசை.

சில தினங்களில் அன்வர்கானின் குணவிசேஷங்களைப்பற்றி நகரமே புகழ்ந்து கொண்டாடியது. அங்கே சென்று வந்த பெரியவர்கள் அவனை வாயாரப்புகழ்ந்தனர். அதைக்கேட்ட அரசன் மகிழ்ச்சியடைந்தான். கூடவே, "ஐயோ! என் சிராஜ்கானையும் இப்படி அனுப்பியிருந்தால், அவன் உயிரை இழந்திருக்க நேரிட்டிருக்காதே" என்று எண்ணிக் கண்ணீர் விட்டான்.

வருஷங்கள் ஓடின. அரசன் இறந்த செய்தி மெக்காவுக்கு அறிவிக்கப்பட்டது. அன்வர்கான் திரும்பி வந்தான். நவாப் சையத்கானின் பெண் மகதாப் அவனுக்கு மனைவியானாள். இப்பொழுது அன்வர்தான் அரசன். காலம் ஓடிக்கொண்டிருந்தது.

ரஜியா இப்பொதும் தினமும் நதிக்கரையிலுள்ள அந்தப் பாறைமீது உட்கார்ந்து அக்கரையைப் பார்த்து, எண்ணமிட்டுக் கொண்டிருப்பாள். பட்டணத்திலுள்ள வாலிபர்கள் முன்பெல்லாம் அவளைக் கண்ணால் பார்க்க ஆசை கொண்டு, ஆற்றோரம் சுற்றுவார்கள். ஆனால் இப்பொழுது அவளுடைய நிழலைக் காண்பதற்குக்கூட அவர்களுக்குப் பயமாயிருந்தது. நகரத்திலுள்ள மக்கள் யாருமே அந்தப் பக்கம் வருவதில்லை. ரஜியாவுக்கோ இதைப்பற்றி எல்லாம் கவலையே யில்லை, தன்னுடைய தந்தை பழங்களையும், புஷ்பங்களையும் எடுத்துக் கொண்டு நகரத்திற்கு விற்கச்சென்றவுடனே பாறையின் மீது வந்து உட்கார்ந்துவிடுவாள். பிறகு நன்றாக இருட்டின பிறகுதான் குடிசைக்குள் செல்வாள். அலுக்காமல் சலிக்காமல் தன் கணவன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பாள். தாஹர்! தாஹர்! என்று அவன் பெயரைச் சொல்லிக் கொண்டே யிருப்பாள். இதுதான் அவளுடைய தினப்படி வேலை.

அன்வர்கான் அரச பதவியை ஏற்ற தினம் தன்னுடைய சகோதரனின் படத்தினருகே சென்று வணங்கி, "அண்ணா! இந்தப் பொறுப்பை வகித்து அரசாளவேண்டியவர் நீங்களல்லவா? அநியாயமாக ஒரு சிறு பெண்ணின் கத்திக்கிரையாகி விட்டீர்களே! அந்தப் பெண்ணிடம் மோகிக்க அப்படி என்னதானிருந்தது?" என்று கூறிக் கண்ணீர் விட்டான்.

"அந்தப் பெண் அப்படி என்ன உயர்ந்தவளா? என்ன விசேஷம் அவளிடம்? ஒரு முறை அவளைப் பார்த்துவிட்டால்"........." எவ்வளவுதான் மறக்க முயன்றாலும், இந்த எண்ணம் அவனைவிட்டு அகலவேயில்லை.

ஒரு நாள் சாயங்காலம். குதிரையைக் கொண்டுவரும்படி உத்தரவிட்டான். அவன் வெளியே செல்லப் புறப்பட்டதும் மந்திரியும் சர்தார்களும் அருகில் வந்து நின்றனர். மந்திரி மெதுவாக, "மகாராஜ்! தனியாகவா செல்லுகிறீர்கள்?" என்றார். "ஆமாம்! வஜீர் சாகப்! சீக்கிரம் திரும்பிவிடுகிறேன்." என்றான் சிரித்துக்கொண்டே.

மந்திரி தயங்கிக்கொண்டே "அந்தக் கிழவன் யூசப்கானின் குடிசைக்கருகே போக வேண்டாம்மகாராஜ்!"என்றான். "பயப்படாதேயுங்கள். அங்கே போகமாட்டேன்." என்று சொல்லிக்கொண்டே குதிரையைத் தட்டிவிட்டான்.

சிறிது நேரத்தில் குடிசைக்கு எதிரில் வந்து நின்றது குதிரை. அவன் மெதுவாக அதைத் தட்டிக் கொடுத்து "குரல் கொடு ருஸ்தம்." என்றான். அந்தக் குறிப்பை அறிந்த குதிரை மெதுவாகக் கனைத்தது. உள்ளே வேலையாக இருந்த ரஜியா குதிரையின் கனைப்பைக் கேட்டுத் திடுக்கிட்டாள். ஜன்னலருகே வந்து எட்டிப் பார்த்தாள். அங்கே நின்ற புதிய மனிதனைக் கண்டு அதிசயத்துடன் வெளியே வந்தாள்.

"மிகவும் தாகமாயிருக்கிறது. கொஞ்சம் தண்ணீர் தரமுடியுமா?" ரஜியா உள்ளே சென்று தண்ணீர் கொண்டு வந்தாள். அவளுடைய அழகிய கையைக் கண்டு மெய் மறந்து நின்றான் இளவரசன். தண்ணீரை வாங்கிக்கொள்ளக்கூட மறந்து விட்டான். ரஜியாவின் கண்களில் கனல் பறந்தது. கம்பீரமாக நின்று அவனைப்பார்த்தாள். இளவரசன் தன்னைச் சமாளித்துக்கொண்டு, தண்ணீர்வாங்கிச் சாப்பிட்டான். பிறகு "அம்மணி! இந்த உபகாரத்தை அரசன் ஒருநாளும் மறக்கமாட்டான். வந்தனம்;" என்றான்.

"என்ன! நீங்கள்தானா எங்கள் அரசர்? பரிசுத்தமானவர், நல்ல நடத்தைக்கிருப்பிடம் என்று உலகம் புகழும் எங்கள் அரசர் நீங்கள்தானா?.........வாருங்கள், எங்கள் பாக்கியம். இப்படி வரவேணும். இதுதான் எங்கள் தோட்டம்!" என உபசரித்தாள். தோட்டத்தைச் சுற்றிப்பார்த்த அரசன் அதைப் புகழ்ந்து கொண்டாடினான். ரஜியா அவனுக்குப் புதிய பழங்களைப் பறித்துத் தந்தாள்.

"நல்ல நடத்தை என்பது எவ்வளவு உயர்ந்த பொருள். வாலிபர்களைப் பிசாசைப் போல் பயமுறுத்தும் ரஜியா என்னைக்கண்டு எவ்வளவு பயமின்றிப் பழகுகிறாள். அவள் என்னை நம்புகிறாள். என்னிடம் அவள் பயப்படக் காரணமில்லை," என்றெல்லாம் அவன் எண்ணத் தொடங்கினான்.

இரவு யூசப்கான் வந்ததும் ரஜியா அவனிடம் எல்லா விஷயத்தையும் சொன்னாள். "அப்பா! அவர் ரொம்ப நல்லவர் அப்பா! நம்ம தோட்டத்தை எவ்வளவு கொண்டாடினார் தெரியுமா? குழந்தை மாதிரியிருக்கிறார். இந்த மரத்தினுடைய பெயர்கூட அவருக்குத் தெரியவில்லை அப்பா!" என்றெல்லாம் பேசிக் கொண்டேயிருந்தாள். கிழவன் தலைகுனிந்து யோசனையில் ஆழ்ந்திருந்தான்

*   *   *

அரசன் அன்வர்கானின் மனம் வேதனையினால் குமுறியது. எவ்வளவுதான் முயன்றாலும் ரஜியாவின் அழகிய கபடமற்ற முகத்தை மறக்கவே முடியவில்லை. இரவும் பகலும் அதே நினைவுதான். இரவில் படுக்கையில் நிலை கொள்ளாமல் தவித்தான். அடிக்கடி பெருமூச்சு விட்டான். இதைக் கண்ட மனைவி அவனுக்கு ஏதோ வியாதி வந்து விட்டதாகக் கவலைப்பட்டாள்.

"அப்பப்பா! இந்த ரஜியா என்னை என்ன பாடுபடுத்துகிறாள். இவர்களெல்லாம் எனக்கு ஏதோ வியாதி வந்து விட்டதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ரஜியா! நீ ஒரு மாயாவிதான். நான் என்னை மிக்க உறுதியுள்ளவன் என்றுதான் இது வரையில் நினைத்திருந்தேன். என்னைப் பைத்தியமாக அடித்து விட்டாயே? எனக்கு எந்த வஸ்துவின் மீதும் அடக்க முடியாத ஆசையே கிடையாது. 'காதல் என்பது ஒரு பொய்த் தோற்றம். அது வாலிபர்களின் விஷமப் பேச்சு' என்றெல்லாம் என் நண்பர்களிடம் வீரம் பேசினேனே. ஆனால் இன்று என் மனம் ஏனிப்படி உன்னையே நாடுகிறது? ரஜியா! நான் என் மனதை உன்னிடம் வெளியிட்டால் என் அண்ணனின் கதிதான் எனக்கும் நேரிடும். என்னைக்கற்பைக்கொள்ளையடிக்கும் திருடன்

ஜீவான்ஜன்

ரசாயனக் களிப்பு
மிருகக் கொழுப்பு சேராதது

ஜலதோஷம், மார் சளி,
உடம்பு வலி முதலிய
சகல வேதனைகளுக்கும்
நிவாரணமளிக்கிறது,

★

தயாரிப்பவர்கள் :
ஜீவான்ஜன் லபாராடரீஸ் லிட்.
மதராஸ் - 14

சோல் ஏஜண்டுகள் :
K. K. பிள்ளை & கோ.,
15, வெஸ்ட்காட் ரோடு,
ராயப்பேட்டை :: மதராஸ் - 14

என வெறுப்பாய். அல்லது நான் அருகில் வரக்கூடச் சம்மதிக்க மாட்டாய், இல்லையா? உன்னைத் தினமும் காணவிட்டால் என் உயிர் போய்விடும் போலிருக்கிறதே. இல்லை, உன்னை மறக்க முடியாது. ஆனால் என் மனதை வெளியிட்டு உன்னுடைய வெறுப்பையும் நான் பெற முடியாது. ஐயோ! அப்படியானால் நான் இப்படித்தான் வேதனைப்பட்டு மடிய வேண்டுமா?" என்று எண்ணமிட்டுக்கொண்டிருந்தான்.

'ஏன் அவளைத் தானாகவே நம்முடைய வலையில் விழும்படி செய்யக் கூடாது?'' என்ற யோசனை தோன்றியது.

ஒரு நாள் காலையில் அரசன் யூசப்பின் தோட்டத்தைப் பார்க்கச் சென்றான். கிழவன் அரசனை மரியாதையுடன் வரவேற்று, தோட்டத்தைச் சுற்றிக் காட்டினான். ''இதோ இங்கே இந்தச் செடியை வை. அங்கே அதைச் சரிப்படுத்து. நான் பணம் தருகிறேன், இன்னும் நல்ல உயர்ந்த ஜாதிச் செடிகளை வாங்கி வைத்துத் தோட்டத்தை நன்றாக வளர்க்க வேண்டும்.'' என்றெல்லாம் உத்தரவிட்டான் அரசன். அவனுடைய கண்கள் குடிசைக் கருகில் வட்டமிட்டன. ஆனால் ரஜியா கண்ணில் படவேயில்லை.

''நாங்கள் பரதேசிகள். தங்கள் பிதாவும் இப்படியேதான். வெளி நாட்டினரைக் கண்டால் அவருக்கு மிகவும் பிரியம். உங்கள் உத்தரவுப்படியே செய்கிறேன் மகாராஜ்!' என்றான்.

''அதென்ன யூசப்! அப்படிச் சொல்லுகிறாய்? பரதேசி என்று இன்னொரு முறை சொல்லாதே. நீ இனிமேல் எங்கள் குடி ஜனம்தான். சரி! நீ எப்பொழுது செடிகள் வாங்கப் 'பகாவல்' போகப் போகிறாய்?" என்றான்.

''சர்க்கார்! இதோ இன்றைய தினமே புறப்படுகிறேன்'' என்றான். அரசன் ஆனந்த மிகுதியினால் பொங்கிய உள்ளத்துடன் குதிரைமீது தாவி ஏறினான். ''சரி! யூசப்! இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் நம்முடைய கஜானாவுக்கு வந்து செலவுக்கு வேண்டிய பணத்தை வாங்கிக்கொள்'' என்று சொல்லி விட்டுக் கிளம்பினான்.

* * *

யூசப் வெளியூர் சென்று இன்று நான்கு தினங்களாகி விட்டன. ரஜியா வழக்கம் போல் வீட்டு வேலைகளை முடித்துவிட்டு அந்தப் பெரிய பாறையின்மீது உட்கார்ந்து, எதிர்க் கரையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் மனம் கணவனின் நினைவில் ஈடுபட்டிருந்தது.

''என்ன ரஜியா! என்ன யோசனை?'' என்ற குரல் அவளைத் தட்டி எழுப்பியது. அருகில் அரசன் நிற்பதைக் கண்டு, தன் மேலாடையைச் சரிப்படுத்திக்கொண்டு, குனிந்து 'சலாம்' செய்தாள்.

"ரஜியா! தனியாக இருப்பதால் நீ பயப்படப் போகிறாயே என்று வந்தேன். துணைக்கு யாரையாவது அனுப்பட்டுமா?"

ரஜியா கலகலவென்று சிரித்தாள். ''மகாராஜ்! எனக்கா பயம்? நான் அப்படிப் பயங்கொள்ளியல்ல. என் தாஹர் என்னைப் பயமுறுத்தப் பார்ப்பார். ஒரு இலை அசைவதைக் கேட்டுக்கூட நான் நடுங்கிவிட வேணுமென்று அவரது விருப்பம். ஆனால் அது தான் அவரால் முடியவில்லை. நான் எப்பொழுதுமே இப்படித்தான். பயம் என்றால் எப்படி இருக்குமென்றே எனக்குத் தெரியாது."

''சரி. ரஜியா! நான் வரட்டுமா?'' என்று குதிரையினருகே செல்லத் தொடங்கினான்.

''ஏன்? இவ்வளவு அவசரம்? மகாராணியாரிடம் பயமோ?" இந்த வார்த்தைகள் அவளையறியாமலேயே வந்தன.

அவனும் சிரித்துக்கொண்டே, ''உனக்கு மட்டும் தாஹர்கானிடம் பயமில்லையோ?'' என்றான்.

ரஜியா சற்று நிதானித்து, ''இல்லையே. நான் ஒருநாளும் பயப்படவில்லையே.''

''இந்த வேளையில் என்னை உன்னருகில் அவன் பார்த்தால்.........ஒருவேளை கோபம் வரலாம், இல்லையா ரஜியா?'' அவன் குரலில் தோன்றிய கனிவு அவளை யோசனையில் ஆழ்த்தியது.

''ஆம். கோபம் வரலாம். ஏன் தெரியுமா? ஏமாற்றும் மனிதனுக்கு எல்லாம் கபடமாகத்தானே படும். காமாலைக் கண்ணுள்ளவனுக்கு எல்லாம் மஞ்சளாகத்தானே தெரியும்.'' என்று கூறி, கல கலவென நகைத்தாள். பிறகு சற்றுப் பொறுத்து, ''ஆமாம். இந்த வேளையில் மகாராணி உங்களை இங்கே பார்த்தால்?'' நவாப் திடுக்கிட்டான். அவள் அந்தமாதிரி கேட்பாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. பதில் சொல்ல முடியாமல் விழித்தான். ''என்ன ஒன்றும் நினைக்கமாட்டாள். ரஜியாவை க்ஷேமம் விசாரிக்க வந்தேன் என நினைப்பாள்.'' என்றான்.

"அது சரி! ஹுஜூர்! நான் ஒரு நாள் ராணி சாகிபாவைப் பார்க்க விரும்புகிறேன்."

"ஆனால் வா. இப்பொழுதே. என் குதிரை மீது ஏறிக்கொள்." ரஜியா குழந்தைபோல் சிரித்துக்கொண்டே குடிசைக்குள் ஓடிவிட்டாள். அரசன் பெருமூச்சுடன் மெதுவாக நடந்து குதிரையினருகில் சென்றான்.

* * *

அடுப்பில் கீரை வெந்துகொண்டிருந்தது. ரஜியா தானே பேசிக்கொண்டாள். "ரஜியா! இதென்ன பலஹீனம்? ஏன் உன் மனதில் அந்தப் பழம் சோகம் காணப்படவில்லை. தாஹருக்காக உன் மனம் இன்று ஏங்கி வாடவில்லையா? காரணம்? ஏன்? ஆமாம், ஒரு போக்கிலிக்காக ஆயுள் முழுவதும் ஏன் கண்ணீர் வடிக்கவேண்டும் என்கிறாயா? ஆம். அவன் அந்தத் துஷ்டை ஜூபேதாவுடன் சுகமாக வாழட்டும். நான் இங்கே யாருடனாவது, எப்பொழுதாவது சிரித்து ஒரு வார்த்தை பேசுவதுகூடத் தப்பா?.........அவள் மனம் மறுபடியும் கூறியது: "நீயே யோசித்துப்பார் ரஜியா! அப்பா எவ்வளவு சொல்லியும்கூட நீ உன் பிடிவாதத்தையும், சோகத்தையும் விடவில்லை. ஒரு முறை சிரித்த முகத்துடன் பேசி அந்தக் கிழவனின் மனதைச் சந்தோஷப் படுத்த முயலவில்லை. ஆனால் அன்வர்கான் எதிரே ....ரஜியாவின் கைகள் நடுங்கின. "ஆம். ஏனப்படி? அவரைப் பார்த்ததும் சிரிக்கத் தோன்றுகிறது? இருவரும் சேர்ந்து சிரிக்க வேணும்போல் தோன்றுகிறதே. ஏன்?" என்று அவள் வாய் முணுமுணுத்தது. அவள் மார்பின் மீது கைவைத்துப்பெருமூச்சு விட்டாள். "சீ! இதென்ன பலஹீனம்! மனமே! உன் உறுதி எப்படி அழிந்தது? கௌரவமாகத் தலை நிமிர்ந்து நடந்த ரஜியாவா நீ? கடவுளே எனக்கு உறுதியைக் கொடு. என் மன நிலையை அரசன் அறிந்தால் என்னை எவ்வளவு கேவலமாக நினைப்பார்? இவளா தன்மானத்தைக் காத்துக் கொள்ள என் சகோதரனைக் கொன்றவள்? இவளா அந்த வீரப் பெண்! என்று நினைப்பாரல்லவா?" என்று ஓடிக் கொண்டிருந்தன எண்ணங்கள்.

"தாஹர்! என் அன்பே! நீ என்னை இப்படி உதைத்துத் தள்ளி நசுக்கியிராவிட்டால், நான் இப்படி தவறான வழியில் செல்ல என் மனம் தூண்டாதல்லவா?......இல்லை, ரஜியா சறுக்கி விழமாட்டாள் என்று தீர்மானத்துடன் பட்டினியாகக் கட்டிலில் படுத்தாள். துக்கம் நெஞ்சைப் பிளந்தது. கபடமற்ற உறுதியுள்ள மனம் தாங்க முடியாத துக்கத்தினால் துடித்தது, விம்மி விம்மி அழுதாள். இரவு முழுதும் தூங்கவில்லை.

பிறகு இனிமேல் அரசனை இங்கே வர விடக்கூடாது என்று தீர்மானித்தாள். "ஏன் இங்கே தினம் தினம் வரவேண்டும். மீன் பிடிக்க வேண்டுமானால் அந்தக் கரைக்குப் போகட்டுமே!" என்று சொல்லிக் கொண்டாள்.

இரவு நல்ல நிலா. அன்று சற்றே புழுக்கமாயிருந்தது. ஆனாலும் வெளியே வரப் பயமாயிருந்தது. "அப்பா ஏன் இன்னும் வரவில்லை? தாஹர்! நீ திடீரென்று வந்து விடக் கூடாதா? பயமே தெரியாத எனக்கு ரொம்பவும் பயமாயிருக்கிறது.". என்று எண்ணியவளாய் வெளியே எட்டிப் பார்த்தாள். "இது என்ன! உண்மையா? ஆம், அங்கு நிற்பது அரசன்தான்." அவள் மனம் நடுங்கியது. ஆனாலும் ஏனோ அவள் வெளியே வந்தாள்.

"ரஜியா, ஒரு சந்தோஷ சமாசாரம். அதைச் சொல்லத்தான் வந்தேன். உன்னுடைய அப்பா நாளைக்கு வருகிறாராம்." ரஜியா ஆனந்தமிகுதியினால் சிரித்தாள். "ரஜியா! என்ன! ரொம்ப சந்தோஷம் தானே?"

"ஆம் சர்க்கார்! அப்பா இங்கே இல்லாமல் எனக்கு மனதே நிம்மதியில்லை."

"இனிமேல் நான் வர முடியாது."

ஏன் வரமுடியாது? அவள் யோசனையில் ஆழ்ந்தாள்.

"என்ன ரஜியா! பதிலில்லை? நான் வருவது உனக்குப் பிடிக்கவில்லையா? நான் ஏதாவது தவறு செய்து விட்டேனா?

'இல்லையே!' அவள் குரல் கம்மி இருந்தது.

"ஆனால் என்னைக் கண்டதும் ஏன் இப்படி பயப்படுகிறாய்? ரஜியா! இதோ என்னைப் பார்," என்றான். ரஜியா அவனை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் கண்களில் ஒரு மதம்.

"ரஜியா! ஏன் இப்படி துக்கமாயிருக்கிறாய்?"

"கணவனால் கைவிடப்பட்ட ஒரு அபலை எப்படி சந்தோஷமாயிருக்க முடியும் மகாராஜ்?"

அன்வர் அவள் அருகில் நெருங்கி வந்து "என்ன ரஜியா இது? அந்த முட்டாளை, வெட்கமற்றவனை நீ ஏன் மறந்துவிடக் கூடாது? அந்த நன்றிகெட்டவனுக்காக நீ ஏன் உருகி உருக்குலைந்து போகிறாய்?

உன்னைச் சந்தோஷமாகப் பார்க்க விரும்புகிறேன். அதற்காகத்தான் உன் தந்தை வரும் விஷயத்தை உனக்குச் சொல்ல வந்தேன். வீணாக வருந்தாதே, நான் வரட்டுமா?" என்று எழுந்தான்.

ரஜியா தன் வசமிழந்து அவனைப்பிடித்து நிறுத்தினாள். அவளைத்தொடக்கூடத் தைரியமற்று நின்ற அன்வர் சட்டென்று அவளை அருகில் இழுத்து மார்புடன் சேர்த்துக் கொண்டான்.

ரஜியா துடித்தாள். ஆனால் இன்று அவள் கை கத்தியின் பிடியைத் தொடவில்லை. வேகமாகத் தன்னை விடுவித்துக்கொண்டு குடிசைக்குள் ஓடிவிட்டாள்.

நவாப் ஆனந்தமிகுதியுடன்—வெறியுடன் வீட்டிற்குத் திரும்பினான்.

* *

அன்று சாயங்காலம் அரசன் வரும்போது ரஜியா சோர்வுடன் உட்கார்ந்திருந்தாள். "ரஜியா! என்ன வருத்தம்? என்மேல் கோபமா? அன்றுநான் நான் அதிகப்பிரசங்கித்தனமாக நடந்து கொண்டதற்காக வருந்துகிறேன். ரஜியா! கோபம் கொள்ளாதே. நீ இல்லாமல் என்னால் இனி உயிர் வாழமுடியாது." என்று கூறினான் அன்வர்கான்.

ரஜியா அவனை உற்றுநோக்கி, "சர்க்கார்! அதற்காக நான் மானமிழக்க முடியாது. என்னை நீங்கள் விவாகம் செய்துக்கொள்ள" ....நவாப் திடுக்கிட்டான். "சகோதரனைக் கொன்றவளை, கணவனால் ஒதுக்கப்பட்டவளை நான் விவாகம் செய்து கொண்டால் உலகம் என்னை என்ன நினைக்கும்? மஹதாப் பீபீ தான் என்ன நினைப்பாள்?" என்று யோசனை ஓடியது. பிறகு மெதுவாக,

"ரஜியா! சட்டப்படி தாஹர் உன்னை விவாக ரத்து செய்யும் வரை விவாகம் செய்யமுடியாதே?" என்றான்.

"அப்படியானால் வேறே வழியில்லை."

அரசன் யோசனையிலாழ்ந்தான். வெகுநேரம் இருவரும் பேசவில்லை. பிறகு அவன் "ரஜியா! நான் குரான் சாக்ஷியாகச்சொல்லுகிறேன். என் உயிரைக்காட்டிலும் அதிகமாக உன்னை நேசிக்கிறேன். உன்னை ஒருநாளும் ஏமாற்ற மாட்டேன். என்னை நம்பலாம். இதோபார். ரஜியா, ஒன்று செய்யலாம். குரானைக்கொண்டுவா. அதன் முன் நாம் சத்யம் செய்து கொள்வோம். அதுதான் நம்முடைய விவாகம்" என்றான். ரஜியா மயங்கிவிட்டாள். குரானை எடுத்து வந்தாள். நதிக்கரையில் இருவரும் பிரமாணம் செய்துகொண்டனர். ரஜியா கூறிய வார்த்தைகள் அவனைத் திடுக்கிடச் செய்தன. அவள் சொல்லிக்கொண்டிருந்தாள்:

"இன்று முதல் அன்வர்கான் என் கணவர். நான் அவருடன் உண்மையுடன் நடந்து கொள்ளுவேன். எதுவரையில் இவர் என்னை மோசம் செய்வதில்லையோ அதுவரையில் நான் அவருடைய அடிமை. உள்ளன்புடன் பணிவிடை செய்வேன். அவர் கட்டளைக்குக் கீழ்ப்படிவேன். ஆனால்.........ஆனால்......... அவர்" அவள் மேலே பேசவில்லை. அன்வர்கான் அறிந்து கொண்டான். "அப்படியானால் நான் மரணத்தைத் தேடியா இங்கு வந்தேன்" என்று நினைத்தது அவன் மனம்.

பிறகு இருவரும் குரானை முத்தமிட்டனர். அன்று முதல் ரஜியா அரசனின் காதலியாகிவிட்டாள். அவன் ஆவல் தீர அவளுடன் விளையாடினான். இன்பமாகப் பொழுது போக்கினான்.

ஆனால் அது எத்தனை நாள்? இந்த ஒளிவு மறைவான விளையாட்டு அவனுக்கு அலுத்துவிட்டது. அவன் அடிக்கடி வருவதில்லை. ஏதோ சாக்குச் சொல்ல ஆரம்பித்தான். கடைசியில் ஒருநாள் அவன், "இதோ பார் ரஜியா! நான் வெளியூர் போகப்போகிறேன். ஆகவே கொஞ்சநாள் இங்கே வர முடியாததற்காக வருந்துகிறேன். இந்த மோதிரத்தை வைத்துக்கொள்" என்று கூறி அதை அவள் விரலிலணிந்து, "ரஜியா! நீ என்னைப் பார்க்க ஆசைப்பட்டால் இது உன்னை என்னிடம் கொண்டுவிடும். என்ன! நான் வரட்டுமா?" என்று சொல்லிச் சட்டென்று விடைபெற்றுச் சென்றுவிட்டான்.

மாதங்கள் ஓடின. நவாப் வரவேயில்லை. இதெல்லாம் வெறும் வேஷம் என்று அறிந்து கொண்டாள் ரஜியா. அவன் வெளியூர் செல்லவில்லை என்பதைக் கேள்விப்பட்ட ரஜியாவின் கண்களில் கனல் பறந்தது. 'போக்கிலி! விஷமக்காரன், வஞ்சகன். அடாடா! என்ன முட்டாள் தனம்? இப்படி ஏமாந்து விட்டேனே. நல்ல நடத்தை எனும் போர்வைக்குள் ஒளிந்த வேஷதாரி! ஆகட்டும் சொல்லுகிறேன் வழி" என்றெல்லாம் கருவினாள்.

அவள் கை கத்தியின் பிடியைத் தழுவியது. வெறிபிடித்தவளைப்போல் உரக்கச் சிரித்தாள். "பயப்படாதே! தோழீ! நீ கட்டாயம் அந்தக் கபட வேஷதாரியின் ரத்தத்தைக் குடிப்பாய். உன் ஆசையைப் பூர்த்தி செய்து வைப்பேன். கலங்காதே" என்று கூறினாள்.

(அடுத்த இதழில் முடியும்)

—:oOo:—

198062